# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - ௨௪
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 218 ஆனி 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 05 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050



Now in JAFFNA
Dip/HND in Business Management
Leading to BBA Hons
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk


தேர்தலை இலக்குவைத்து

## சிறிலங்கா நிதாஸ் பொதுஜன பெரமுன என்ற பெயரில் பெரமுன, சு.க. கூட்டணி

கொழும்பு, ஜூலை 5
அடுத்த தேர்தலை இலக்குவைத்து புதிய கூட்டணி ஒன்றினை அமைக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுமக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. சிறிலங்கா நிதாஸ் பொதுஜன பெரமுன என்ற பெயரில் பொதுவான கூட்டணியை உருவாக்க முடிவு எட்டப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
எதிர்வரும் தேர்தலில் பரந்துபட்ட

19

அரச தலைவர் தேர்தலில்

## ஐ.தே.க. வேட்பாளர் சஜித்தா? 8ஆம் திகதியே இறுதி முடிவு

கொழும்பு, ஜூலை 5
ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி இறுதி முடிவு எடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.
ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை மாலை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

19

பாடசாலையில்

# சுகவீனமுற்ற மகனை பார்ப்பதற்கு சென்ற தந்தை சுட்டுப்படுகொலை!

காலியில் பரிதாபச் சம்பவம்



கொழும்பு, ஜூலை 5
காலி, அக்மீமன பாடசாலை ஒன்றுக்குள் பிரவேசிக்க முயன்ற ஒருவர் மீது அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். இதன்போது படுகாயமடைந்த 39 வயதுடைய குறித்த நபர், கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச்சூட்டை நடத்திய இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இது தொடர்பில் பொலிஸார் நடத்திய விசாரணையின்போது, பாடசாலையில் சுகயீனமுற்ற

19

## இன்று கரும்புலிகள் நாள்

யாழ்ப்பாணம், ஜூலை 5
இன்று ஜூலை 5 கரும்புலிகள் நாள். சாவுக்கு நாள் குறித்து சரித்திரம் படைத்தவர்களின் நாள். இரும்பான் கோட்டைகளைத் துரும்பாகத் தகர்த்தெறிந்து முப்படைக்கும் எதிர்ப்படையாகத் திகழ்ந்தவர்களின் நாள். தரையிலும் கடலிலும் வானிலும் எனக் கடும் போர்க்களங்களில் உடலினை வெடியாக்கி உயிர்நீத்த உத்தமர்களின் நாள்.
தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு உலக அரங்

07

முருகனின்

## சேவல்கொடிக்கு பதிலாக அரபுக்கொடி ஏன் வந்தது?

ஆர்வலர்கள் கேள்வி

கொழும்பு, ஜூலை 5
முருகனின் செம்மஞ்சள் நிற சேவல் கொடிக்கு பதிலாக இஸ்லாமிய பச்சை நிற அரபுக்கொடி வந்தது எப்படி? பாரம்பரிய சைவ சம்பிரதாயத்தை மாற்ற திட்டமிட்ட சதியா? என

19

## பொலிஸாரினது பிஸ்டல் பறிப்பு

மட்டக்களப்பில் பதற்றம்



மட்டக்களப்பு, ஜூலை 5
மட்டக்களப்பில் போக்குவரத்துப் பொலிஸ் அலுவலர் ஒருவரின் கைத்துப்பாக்கி அடையாளம் தெரி

19

## வவுனியா, மன்னாரில் நேற்று நிலநடுக்கம்!

யாழ்ப்பாணம், ஜூலை 5
வவுனியா, மன்னார் மாவட்டங்களின் நான்கு கிராமங்க

19

see more news in newuthayan.com

## வலி. வடக்கில் காணி அளவீட்டு நடவடிக்கைகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 5
கீரிமலை, நகுலேஸ்வரத்தில் உள்ள அரச தலைவர் ஆடம்பர மாளிகையைச் சூழவுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 62 ஏக்கர் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
வடக்கு மாகாண ஆளுநர், அலுவலர்கள், காணிகளின் உரிமையாளர்கள் தவிர்ந்த ஏனையோர் காணி அளவீடுகளின்போது அனுமதிக்கப்படவில்லை.
யாழ்ப்பாணம், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள

19

## வாகனங்கள் நேருக்குநேர் மோதல் சாரதிகள் சம்பவ இடத்தில் சாவு

பளையில் நேற்றுச் சோகம்

கிளிநொச்சி, ஜூலை 5
இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதியதில் அந்த வாகனங்களைச் செலுத்திய சாரதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நேற்று பளை இத்தாவில் பகுதியில் இடம்பெற்றது.
அதிகாலை 2 மணியளவில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்

19

## முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்

மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 5
முஸ்லிம்களுக்கு எதிரான தன்னிச்சையான கைதுகள் மற்றும் பிற முறைகேடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று பன்னாட்டு மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்களை நீதி விசாரணைக்கு உட்படுத்தவேண்டிய அவசியம்

19




அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கி

வங்கியென்றால் அது அனைவருக்கும் ஏற்ற வங்கியாக இருக்கவேண்டும். சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்பு, கிரடிட் காட், லீசிங், வீட்டுக் கடன், தனிப்பட்ட கடன், வேர்ச்சுவல் வொலட், வியாபார நிதிச் சேவைகள் உட்பட அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்கும் வங்கிதான் DFCC வங்கி.

24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# ஜூலை மாத ராசிபலன்கள் - 2019






இந்த ஜூலை மாதத்தில் கிரகங்களின் சஞ்சாரத்தை பார்த்தால் உங்கள் ராசிக்கு இரண்டாம் வீட்டில் சூரியன், சுக்கிரன், ராகு மூன்றாம் வீட்டில் செவ்வாய், புதன் ஏழாம் வீட்டில் குரு, எட்டாம் வீட்டில் சனி கேது என கிரகங்களின் சஞ்சாரம் அமைந்துள்ளது. மாத பிற்பகுதியில் சூரியனும் சுக்கிரனும் ராசிக்கு மூன்றாம் வீட்டில் சஞ்சரிக்கப் போகின்றனர். இந்த மாதம் கிரகப்பெயர்ச்சி உங்கள் ராசிக்கு என்னென்ன சாதக பாதகங்களை ஏற்படுத்தும் என்று பார்க்கலாம்.

**வசீகரம் அதிகரிக்கும்**

இந்த ஜூலை மாதத்தில் உங்களின் முக வசீகரமும் பொலிவும் கூடும். உங்கள் ராசிக்கு இந்த மாதம் திடீர் அதிர்ஷ்டமும் எதிர்பாரத வருமானமும் கூடும் காரணம் இரண்டாம் வீட்டில் உள்ள சூரியன், சுக்கிரன் ராகுதான். மூன்றாம் வீட்டில் புதன் செவ்வாய் உடன் இணைந்திருப்பது ராஜயோகம். தொழில் ரீதியான வெற்றி கிடைக்கும். புதன் உங்கள் தனாதிபதி. புதன், செவ்வாய் மீது குரு பார்வை விழுவதால் பொழுது போக்கு சந்தோஷம் கூடும்.

**செல்வத்தோடு செல்வாக்கு அதிகரிக்கும்**


உங்கள் தனாதிபதி புதனால் இந்த மாதம் நன்மைகள் அதிகம் கிடைக்கும். 12 மற்றும் ஏழாம் வீட்டு அதிபதியுமான செவ்வாய் உடன் 2 மற்றும் 5ஆம் வீட்டு அதிபதியுமான புதன் இணைந்துள்ளதால் பயணங்கள் மூலம் நன்மைகள் கிடைக்கும். புகழ் கூடும். செல்வம் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரத்தில் நல்ல தன இலாபம் கிடைக்கும். அஷ்டமத்தில் உள்ள சனியின் பார்வை உங்கள் தன ஸ்தானத்தின் மீது இருப்பதால் வரவை விட செலவு அதிகம்ாக இருக்கும்.

**பெண்களுக்கு நன்மை**


பெண்களுக்கு அதிக நல்லவைகள் நடைபெறும் சுக்கிரனால் பெண்களின் பிரச்சினைகள் தீரும். பணம் கையிருப்பு அதிகரிக்கும். குரு பகவான் உங்க ராசியைப் பார்ப்பதால் பிள்ளைகளினால் நன்மைகள் கிடைக்கும். பிள்ளைகளுக்கு இருக்கும் பிரச்சினைகள் தீரும் மனக்குறைகள் நீங்கும். சனியின் பார்வை 17ஆம் தேதி வரை சூரியன் மீது விழுகிறது. கடகம் ராசிக்கு சூரியன் மாறும் போது நன்மைகள் அதிகம் நடைபெறும். கணவன் மனைவி உறவில் சில உரசல்கள் வந்தாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள். விட்டுக்கொடுத்துப் போங்கள். கண், பல்சார்ந்த பிரச்சினை வரும் மருத்துவரை அணுகவும்.

**சுபிட்சம் அதிகரிக்கும்**

சுக்கிரன் மீது அஷ்டம ஸ்தானம் சனி பார்வை இருப்பதால் அலுவலகத்தில் நெருக்கடி ஏற்படும். 24ஆம் தேதி இந்த பிரச்சினைகள் தீரும் காரணம் சுக்கிரன் கடகத்துக்குச் செல்லும் போது நன்மைகள் நடைபெறும். புதிய ஒப்பந்தங்கள் நிகழும். இதுநாள் வரை இருந்த பிரச்சினைகள் ஒழிந்து சுபிட்சமான நிலை ஏற்படும்.



# துலாம் ராசிக்காரர்களின் குணநலன்கள்



துலாம் ராசியின் குறியீடு தராசு. துலாம் ராசிக்காரர்கள் சிறந்த தொழிலதிபர்களாகவும் வர்த்தகப் பிரமு கர்களாகவும் வியாபாரிகளாகவும் இருப்பார்கள். எவரையும் மிகச் சரியாக எடை போட்டு விடுவார்கள். நடுநிலை தவறாத சிறந்த நீதிமான்களாக இருப்பார்கள். இவர்கள் எந்த விடயத்திலும் கண்டிப்புடன் நடந்து கொள்வார்கள். தொலைக்காட்சித் தொடரைப் பார்த்து கண்ணீர் சிந்தாதவர்கள் என்றால், அவர்கள் துலாம்ராசிக்காரர்களாகத்தான் இருப்பார்கள்.

துலாம் ராசிக்காரர்கள் மாதச் சம்பள வாழ்க்கையைவிட தொழில்துறையில் இறங்கிப் பெரும் பொருள் ஈட்டவே விரும்புவார்கள். பணத்தின் அருமையை மிகவும் உணர்ந்தவர்களாக இருப்பார்கள். தேவையென்றால் எத்தனை ஆயிரம் என்றாலும் செலவு செய்வார்கள். தேவையில்லையென்றால் ஒரு குண்டூசி செலவுக்கும் யோசிப்பார்கள். 'பாத்திரம் அறிந்து பிச்சையிடு' என்பதற்கு உதாரணமாக இருப்பார்கள். தான தர்மங்கள் நிறையச் செய்வார்கள். ஆனால், யாருக்குச் செய்யவேண்டும், யாருக்குச் செய்யக்கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருப்பார்கள்.

துலாம் ராசிக்காரர்கள் பெரும்பாலும் கலைத்துறையில் ஈடுபடவே விரும்புவார்கள். பெண்கள் அதிகம் விரும்பும் பொருள்களான அழகுசாதனப் பொருள்கள், வெள்ளி, வைர நகைகள் விற்பனையில் ஈடுபட்டால் பெரும் வெற்றிபெறுவார்கள். சுக்கிரனின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் என்பதால், வாகன யோகம் இவர்களுக்குச் சிறப்பாக இருக்கும். பல வகையான கார்கள் வாங்கி விற்பார்கள்.

பெண்களிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் மிக்கவர்கள். இவர்கள் வணங்க வேண்டிய தெய்வம் என்றால், ஆக்ரோஷம் இல்லாத அனைத்துப் பெண்தெய்வங்களும் இவர்களின் வழிபாட்டுக்கு உரியவர்கள். தங்களது 23ஆவது வயதிலிருந்தே படிப்படியாக வளர்ச்சியடைந்து உன்னதமான நிலையை அடைவார்கள்.



# ராசிகளும் சிக்கற்களும்

**கன்னி:**

கன்னி ராசிக்காரர்கள் அணிய வேண்டியது மரகதம். மேலும் சுக்கிர திசை நடப்பவர்களும் மரகதம் அணியலாம். இது தொழில்விருத்தியையும், அதிர்ஷ்டத்தையும் அளிக்க வல்லது. மலட்டுத் தன்மையைப் போக்கும். காதல் உணர்வைத் தரும். சிறந்த கல்வியைக் கொடுக்கும். பில்லி, சூனியங்களில் இருந்து எம்மைக் காக்கும். பேச்சாற்றலை வளர்க்கும். உடல் வளர்ச்சி பெரும். மரகதக் கல்லை உற்று நோக்கினாலே புத்துணர்ச்சியைக் கொடுக்கக் கூடியது.

**துலாம்:**

துலாம் ராசிக்காரர்கள் அணிய வேண்டியது வைரம். மேலும் சுக்கிர திசை நடப்பவர்களும் வைரம் அணியலாம். இது மகிழ்ச்சியையும், யோகத்தையும் தரக் கூடியது. நல்ல வசீகரத்தைத் தரும். நெஞ்சுறுதியைத் தரும். தன்னம்பிக்கையை வளர்க்கும். ஆண் பெண் உறவை வலுப்படுத்தும். நல்ல தூக்கத்தைக் கொடுக்கும்.

**விருச்சிகம் :**

விருச்சிக ராசிக்காரர்கள் அணிய வேண்டியது பவளம். மேலும் செவ்வாய் மற்றும் கேது திசை நடப்பவர்களும் பவளம் அணியலாம். இதை அணிந்தால் தெய்வ கடாட்சம் கிட்டும். கோபம் குறையும். அதிர்ஷ்டம் உண்டாகும். நல்ல துணிச்சலைத் தரும். பொறாமை, வெறுப்பு போன்ற தீய குணங்களைப் போக்கி ஞானத்தைக் கொடுக்கும்.

**தனுசு**

தனுசு ராசிக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஷ்பராகம். குரு திசை நடப்பவர்களும் கனக புஷ்பராகம் அணியலாம். இதை அணிந்தால் மன நிம்மதியைக் கொடுக்கும், நல்ல செல்வத்தைக் கொடுக்கும். இந்தக் கல் அணிவது நமக்கு கம்பீரத்தைக் கொடுக்கும். துணிச்சல் பிறக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். திருமணத் தடை நீங்கும். வீடு கட்டும் வாய்ப்பு உண்டாகும். பெரும் புகழ் கிடைக்கும். சூழ்ச்சிகளில் இருந்து நம்மை விடுவிக்கும்.

**மகரம்**

மகர ராசிக்காரர்கள் அணிய வேண்டியது நீலக்கல். மேலும் சனி திசை நடப்பவர்களும் நீலக்கல் அணியலாம். இதை அணிந்தால் சமூகத்தில் நம் செல்வாக்கு உயரும். தெய்வீக சிந்தனையைத் தரும். நல்ல செல்வ வளத்தைக் கொடுக்கும் .நல்ல பண்புகளைக் கொடுக்கும். உடல்பலத்தை அதிகரிக்கும் . ஆழ்மனது தெளிவை கொடுக்கும். பகையைப் போக்கக் கூடியது. வம்பு, வழக்கு இருந்தால் எமக்குச் சாதகமான சூழலை உருவாக்கும்.

**கும்பம் :**

கும்ப ராசிக்காரர்கள் அணிய வேண்டியது நீலக்கல். ராகு மற்றும் சனி திசை நடப்பவர்களும் நீலக்கல் அணியலாம் இதை அணிவதால் செல்வ வளம் பெருகும். சமூகத்தில் நல்ல செல்வாக்கு கிடைக்கும். திருஷ்டியைத் தடுக்கும். ஞானம், சாந்தம் கொடுக்கும். உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தை தரவல்லது. தியானத்துக்கு உகந்தது. திருமண உறவை மேம்படுத்தும். வீண் வம்பு, வழக்குகளில் இருந்து எம்மைக் காப்பாற்றும். பெருந்தன்மையை வளர்க்கும்.

**மீனம்**

மீன ராசிக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஷ்பராகம். வியாழன் திசை நடப்பவர்களும் கனக புஷ்பராகம் அணியலாம். இதை அணிந்தால் செல்வ விருத்தியைக் கொடுக்கும். தோற்றத்தில் கம்பீரம் உண்டாகும். துணிச்சல் பிறக்கும். பொருளாதார முன்னேற்றம் கிட்டும். திருமணத் தடை நீங்கும். **கோபம் குறையும்.**


twitter


கம்யூட்டருக்கு இன்னும் "மவுஸ்" இருக்கு.!




# மீண்டும் இணைகின்றனர் தனுஷ்- செல்வராகவன்

நடிகர் தனுஷ் தற்போது வெற்றிமாறன் இயக்கத்தில் அசுரன் படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தை அடுத்து சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிப்பில், பரியேறும் பெருமாள் பட இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கும் படம் உட்பட 4 படங்களைக் கைவசம் வைத்துள்ளார். இந்த நிலையில், மீண்டும் செல்வராகவன் இயக்கத்தில் தனுஷ் நடிக்க இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளன. இந்தப் படத்தைப் பிரபல தயாரிப்பாளர் கலைப்புலி எஸ். தாணு தயாரிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. இப்படம் புதுப்பேட்டை படத்தின் இரண்டாம் பாகமாக இருக்குமா? என்ற கேள்வி ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.







புகை மட்டும் காற்றோடு
கரைவதில்லை ....
உன் உடலும் ஒரு நாள்
சில்லுசில்லாய்
கரைந்து போகும் !!!...

அதிகமான தவறுகள்
அதிக அனுபவத்தை
கொடுக்கும். ஆனால்,
அதிகமான அனுபவம்
என்பது தவறுகளை
குறைக்கும்..!!

## சிந்தனைத் துளிகள்

- அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்து தந்தே தீரும்.
- இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.
- இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள், கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.
- இருதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம்தான் நம்பிக்கை.
- உறுதியுடன் இரு, அதற்கு மேலாகத் தூய்மையானவனாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.
- உண்மைக்காக எதையும் துறக்கலாம்; ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.
- உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே!
- உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி.
- உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாகச் சேவைதான் செய்ய முடியும்.
- உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.
- எந்த வேலையாக இருந்தாலும் அதைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளியாவான்.
- எதை நீ நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்!

எல்லா விஷயத்திற்கும் "விடாமுயற்சி" தேவை

ஆனா சிகரெட்டுக்கும் சரக்கிற்கும் மட்டும் "விடும்முயற்சி" தேவை




எப்படி நம்ம சிந்தனை

நாயேன்னு கூப்ட்டா நாலு பேரு திரும்பி பாக்குறாங்க ..



நாய் மட்டும் அது பாட்டுக்கு போவுது ....
இது என்ன டிசைன்னு தெரியல..... 😁😁😁

## மூழ்கும் தலைநகரம்!



உலகிலேயே அதிவேகத்தில் கடலில் மூழ்கிவரும் நகரம் இந்தோனேஷியாவின் தலைநகரமான ஜகார்த்தாதான். ஆண்டுக்கு 17 செ.மீ என்ற அளவில் ஜகார்த்தா கடலில் மூழ்கி வருகிறது. வருடத்துக்கு வருடம் மூழ்கும் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

"2050க்குள் நகரத்தின் பெரும்பகுதி கடலில் மூழ்கி விடும்..." என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். ஜகார்த்தாவின் பாதிக்கும் மேற்பட்ட நிலப்பகுதிகள் கடல் மட்டத்திற்கும் கீழே உள்ளன.

இந்தோனேஷியாவின் மிகப்பெரிய நகரம் மற்றும் தலைநகரம் ஜகார்த்தா. 2030இல் அதன் மக்கள் தொகை 3.5 கோடியை எட்டி விடும் என அண்மைய கணிப்பு சொல்கிறது. இந்த நிலையை அடைந்துவிட்டால் உலகிலேயே அதிக மக்கள் தொகையைக் கொண்ட முதல் நகரம் என்ற பெருமையை ஜகார்த்தா பெற்றுவிடும். தவிர, தொழில், மக்கள் வாழ்வு, பொருளாதாரம், பாரம்பரியம், அயல்நாட்டு வணிகம் என்று அனைத்து வகையிலும் நல்ல இடத்தை வகித்து வரும் நகரம் இது.

குடிப்பதற்கும் குளிப்பதற்கும் அதிகளவில் நிலத்தடி நீரைத்தான் ஜகார்த்தாவாசிகள் பயன்படுத்திவருகின்றனர். "நிலத்தடி நீர் வற்றிப்போவதால்தான் ஜகார்த்தாவின் நிலப்பகுதிகள் கடலில் மூழ்கிவருகின்றன..." என்கிறது அந்த ஆய்வு. அண்மையில் இந்தோனேஷியாவின் அதிபரான ஜோகோ விடாடோ, தலைநகரை ஜகார்த்தாவில் இருந்து வேறு இடத்துக்கு மாற்றப்போவதாக அறிவித்திருக்கிறார். இது இந்தோனேஷியா மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பைக் கிளப்பி யுள்ளது.



பேசித் தீருங்கள்
பேசியே வளர்க்காதீர்கள்.

நடப்பதை பாருங்கள்
நடந்ததை கிளறாதீர்கள்.

உரியவர்களிடம்
சொல்லுங்கள் ஊரெல்லாம்
சொல்லாதீர்கள்.

உறுதி காட்டுங்கள்
பிடிவாதம் பிடிக்காதீர்கள்.

விவரம் சொல்லுங்கள்
வீண்வார்த்தை
சொல்லாதீர்கள்.

தீர்வை விரும்புங்கள்
தர்க்கம் விரும்பாதீர்கள்.

விஜயரத்தினம் சரவணன்

# அபகரிப்பின் அபாயத்தில் இருக்கும் கோட்டைக்கேணி



முல்லைத்தீவு , கரைதுறைப்பற்றுப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட, கொக்குத்தொடுவாய் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள கோட்டைக்கேணி என்னும் தமிழர்களின் பூர்வீக கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயமே கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயமாகும்.

**இவ்வாலயத்திலிருந்து நாளை 6ஆம் திகதி சனிக்கிழமை அன்று மடைப்பண்டம் எடுக்கப்பட்டு நீராவியடிப்பிள்ளையார் கோவிலில் 108 பானைகளில் பெரியஅளவில் சிறப்பாக பொங்கல் விழா இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் குறித்த கோட்டைக் கேணி பிள்ளையார் ஆலயம் தொடர்பாக ஒருபார்வை.**

**1.கோட்டைக்கேணி பிள்ளையாரின் வரலாறு.**


கோட்டைக்கேணிப் பிள்ளையாருடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான ஐதீகக் கதை ஒன்று உள்ளது. அந்த கதையை நன்கு அறிந்தவர்களில் ஒருவரான பொன்னர் தங்கராசா(வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கலுக்காக கடலில் இறங்கி தீர்த்தம் எடுப்பவர்) கூறுகையில்.

கருங்கற்களில் செய்யப்பட்ட மூன்று பிள்ளையார் சிலைகளை. இந்தியாவிலிருந்து. பறங்கி இனத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கப்பலில் ஏற்றி வந்தார்.

குறித்த கப்பலில் கருவாடு முதலான பொருள்களையும். அந்த வியாபாரி ஏற்றி வந்திருந்தார். இந்த நிலையில் கருவாட்டு நாற்றம் தாங்க முடியாமல் கப்பலில் இருந்த மூன்று பிள்ளையார் சிலைகளும் கடலினுள் குதித்தன.

அவ்வாறு கடலினுள் குதித்த பிள்ளையார் சிலைகள் வெவ்வேறு இடங்களில் கரையேறின. குறிப்பாக குமுழமுனைப்பகுதியில் ஒரு பிள்ளையாரும், கொக்குத்தொடுவாய்ப பகுதியில் ஒரு பிள்ளையாரும், தென்னைமரவாடிப் பகுதியில் ஒரு பிள்ளையாரும் கரையேறின.

இவ்வாறு கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் கரையேறிய பிள்ளையாரே கோட்டைக் கேணிப் பிள்ளையார் என அழைக்கப்பட்டு மக்களால் வணங்கப்படுகின்றது. இவற்றில் குமுழமுனையில் கரையேறிய பிள்ளையார் கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் எனவும்; தென்னைமரவாடியில் கரையேறிய பிள்ளையார் அமரி வயல் பிள்ளையார் எனவும் அழைக்கப்பட்டு மக்களால் வணங்கப்படுகின்றன.



மேலும் இவ்வாறு வெவ்வேறு இடங்களில் கரையேறிய பிள்ளையார் சிலைகளைத் தேடிவந்த குறித்த பறங்கிஇன வியாபாரி குமுழமுனையில் கரையேறிய பிள்ளையாருக்கு கழுத்தையும், கொக்குத்தொடுவாயில் கரையேறிய பிள்ளையாருக்கு கையினை வெட்டியதுடன், தென்னமரவாடியில் கரையேறிய பிள்ளையாருக்கு முதுகில் வாளால்குத்தியதாகவும் குறிப்பி டப்படுகின்றது.

இதனால் தற்போதும் கருவறையில் உள்ள பிள்ளையார் சிலைகள் குறித்த கோவில்களில் தலைதுண்டிக்கப்பட்ட சிலை குமுழமுனையிலும், கைதுண்டிக்கப்பட்ட சிலை கோட்டைக்கேணியிலும். சிலையானது கூனிய நிலையில் தென்னமரவாடி அமரி வயல் கோவிலிலும் இன்றும் காணமுடிகின்றது- என்றார்.

**கோட்டைக்கேணிப் பிள்ளையார் ஆலயத்தின் பூசை, வழிபாடுகள்.**

கோட்டைக்கேணிப் பிள்ளையார் ஆலயத்தின் பூசை, வழிபாடுகள் குறித்து அவ்வாலயத்தின் தலைவர் கோவில் தலைவர் சிவக்கொழுந்து கந்தசாமி அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

மார்கழி மாதத்தில் பிள்ளையார் கதைக் காலத்தில், 21நாள்கள் அந்தப் பகுதி மக்கள் கோட்டைக் கேணிப்பிள்ளையாரை வேண்டி விரதமிருந்து வழிபடுவது வழக்கம். மேலும் 22 ஆவது நாளில் கோட்டைக்கேணிப் பிள்ளையாருக்குத் தீர்த்தம் ஆடி, பெரிய அளவில்பூசை வழிபாடுகள் இடம்பெறும். அதேவேளை காவடி, பாற்செம்பு போன்ற நேர்த்திக் கடன்களையும் அடியவர்கள் அன்றையநாள் நிறை வேற்றுவர். இதனைவிட வெள்ளி, திங்கட்கிழமைகளில் ஊர்மக்கள் பூசை வழிபாடுகள், நிறைமைமணி போன்றவற்றிலும் ஈடுபடுவர். இவைதான் இங்கு முக்கியமாக இடம்பெறுகின்ற வழிபாடுகளாக் காணப்படுகின்றன.

**கோட்டைக்கேணிப் பிள்ளையாரிலிருந்து நீராவியடிக்கு மடப்பண்டம் எடுப்பது பரம்பரை வழிவந்த பூர்வீக வழிபாடு.**

கோட்டைக்கேணிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு மடைப்பண்டம் எடுத்துவந்து பொங்கல் பொங்கி வழிபடுவது பரம்பரை வழிவந்த ஒரு செயற்பாடாகும் என நீராவியடிப் பிள்ளையார் ஆலய மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பரம்பரை பரம்பரையாக பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கோட்டைக்கேணிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து , நீராவியடிப் பிள்ளையாருக்கு மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு பொங்கல் வழிபாடுகள் இடம்பெறுவதென்பது ஒரு வழமையான செயற்பாடு. இந்த வழிபாட்டுச் செயற்பாடுகளை கடந்தகால அசாதாரண சூழ்நிலைகள் காணமாக மேற்கொள்ளமுடியவில்ல. மீள் குடியேறி எமது இடங்களுக்கு வந்த பிற்பாடு. நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இராணுவத்தினர் இருந்தனர். அச்சம் காரணமாக நாம் அப்பகுதிக்கு செல்லவில்லை. தற்போது அவ்விடத்தைவிட்டு இராணுவம் வெளியேறியுள்ள நிலையில் எமது பரம்பரை வழிவந்த பூர்விக வழிபாட்டு முறையைச்செயற் இவ்வருடம் செய்யவுள்ளோம்.

**கோட்டைக்கேணிப் பிள்ளையார் ஆலய வளாகத்தின் தற்போதைய நிலை.**

கோட்டைக்கேணி ஆலய வளாகத்தில் காணப்படும் புத்தர் சிலை மற்றும் சிங்களப் பெயர்ப் பலகை. தமிழர்களின் தொன்மையான நிலப்பகுதியான கொக்குத் தொடுவாய் மற்றும் கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயவளாக பகுதி என்பன, தற்போது சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பை எதிர்நோக்கும் அபாயகரமான நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, அந்த ஆலயத்தில் தீர்த்தம் ஆடும் கேணியை அண்டிய பகுதியில் பௌத்த அடையாளத்தைக் குறிக்கும் வகையில் புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு கோட்டைக் கேணி ஆலய வளாகத்தில் பாதுகாப்புப் படையினரின் காவலரண் ஒன்று இருந்தாகவும், அந்த காவலரணில் இருந்த பாதுகாப்புப் பிரிவினர்தான் குறித்த புத்தர் சிலையை நிறுவியதாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் கோவில் வளாகத்திலிருந்த பாதுகாப்புப் பிரிவினரின் அந்தக் காவலரன் அகற்றப்பட்டபோதிலும், அவர்களால் நிறுவப்பட்ட புத்தர் சிலையானது இன்று வரை அவ்விடத்திலேயே இருக்கின்றது.

இவ்வாறு புத்தர்சிலை கோவில் வளாகத்தில் இருப்பதால், எதிர்காலத்தில் இவ்விடமும் பௌத்தமயமாக்கப்பட்டுவிடலாம், அல்லது வரலாறுகள் திரிபுபடுத்தப்படலாமென அப்பகுதி தமிழ் மக்கள் ஒருவித பீதியுடனே இருக்கிறார்கள்.

இதேவேளை அந்தப் பகுதியில் சிங்கள எழுத்துகள் பொறிக்கப்பட்ட பெயர்பலகைகளையும் காணக்கூடியதாகவிருக்கின்றது. இத்தகைய செயற்பாடுகளால் அந்தப் பகுதி தமிழ்மக்கள் தமது பூர்வீக வாழிடம் சிங்கள மயமாக்கப்படுகிறதே என்ற வேதனையுடன் காணப்படுகின்றனர்.

**கோட்டைக்கேணிப் பகுதியில் மகாவலி(எல்) திட்டத்தில் தமிழ் மக்களின் காணி அபகரிப்பு முயற்சி**

கடந்த 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில், கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி பிள்ளையார் கோவில் முதல் மணல் இறக்கம் பகுதி வரையான தமிழ் மக்களின் மானாவாரி விவசாயக் காணிகளை எல்லையிடும் பணிகளை மகாவலி (எல்) வலயச் செயற்பாட்டாளர்கள் முன்னெடுத்திருந்தனர். அதேவேளை, எல்லைக் கற்கள் நாட்டும் நடவடிக்கைகளும் இடம் பெற்றிருந்தன. பின்னர் தமிழ் மக்களின் பிரதிநிதி களின் தலையீட்டுடன் அந்த அபகரிப்பு முயற்சிகள் நிறுத்தப்பட்டி ருந்தன.

**கோட்டைக்கேணியை அண்மித்த பகுதிகளின் அபகரிப்பு தொடர்பில் ரவிகரன்**

கடந்த 2013.12.10 அன்றைய நாள் இடம்பெற்ற வடக்கு மாகாணசபையின் 3ஆவது அமர்வில், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் கோட்டைக்கேணியை அண்மித்த பகுதிகள் அபகரிக்கப்படுவது தொடர்பாக சபையில் இவ்வாறு கருத்துத் தெரிவித்திருந்தர்ர்.

**அண்மையில் நடந்த சம்பவம்**

கோட்டக்கேணி பிள்ளையார் கோவில் பகுதி என்று சொல்லப்படும் இடத்திற்கு 02 கி.மீற்றருக்கு அப்பால் இன்னுமொரு பகுதியில் 22சிங்கள மக்களுக்கு 25 ஏக்கர் வீதம் தோட்டப் பயிர்ச்செய்கைக்காக நிலங்கள் வழுங்கப்பட்டிருக்கின்றன. இது அங்குள்ள அதிகாரிகளுக்குக் கூட தெரியாது. அங்கு

சில ஆண்டுகளுக்கு முன்பு கோட்டைக்கேணி ஆலய வளாகத்தில் பாதுகாப்புப் படையினரின் காவலரண் ஒன்று இருந்தாகவும், அந்த காவலரணில் இருந்த பாதுகாப்பு பிரிவினர்தான் குறித்த புத்தர்சிலையினை நிறுவியதாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் காடு அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்குரிய சாதனங்கள் எல்லாவற்றுடன் ஊழியர்களையும் கொண்டு வந்துள்ளார்கள்." எனத் தெரிவித்திருந்தார்.

இதனைவிட கடந்த ஆண்டு 30.07.2019 அன்றையநாள், கோட்டைக்கேணிக்கு அடுத்துள்ள, தமிழர்களின் பூர்வீகக் குளமான சிவந்தா முறிப்பு குளக்காணியை அபகரிக்கும் முயற்சி இடம்பெற்றிருந்து.

இந்த முயற்சியும் ரவிகன், மற்றும் கமநல சேவைத் திணைக்களத்தினர் தலையீடு செய்து அந்த அபகரிப்பைத் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இவ்வாறாகக் கோட்டைக்கேணிப் பகுதியை சூழவுள்ள பகுதிகள் அபகரிக்கப்பட்டுவருவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

தமிழர் பூர்வீக கோட்டக்கேணிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் பௌத்த அடையாளங்களும், சிங்கள பெயர்ப் பலகைகளுமாக அபகரிப்பின் அபாயத்தில், அதாவது எப்போது வேண்டுமானாலும் அபகரிக்கப்படலாம் என்னும் நிலையிலேயே தற்போது கோட்டைக்கேணி பிள்ளையார் கோவில் காணப்படுகின்றது.

## விலைக்கேள்விக்கான கோரல்
## சமூக சேவைகள் திணைக்களம், வடமாகாணம்
### அரச முதியோர் இல்லம் - கைதடி
### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை - 2019

01. வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule இல் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **மாகாணப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம்-வ.மா, முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி கைதடி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல-021 320 2464)** என்னும் முகவரியில் 09.07.2019ஆம் திகதியில் இருந்து 23.07.2019ஆம் திகதிவரை வேலை நாள்களில் காலை 9.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3500.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. கேள்வி இரு (மூலம், பிரதி) பிரதிகளில் தயாரித்து 24.07.2019ஆம் திகதியன்று மு.ப.10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **மாகாணப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம் - வ.மா, முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
07. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 நாள்களுக்கு (24.09.2019 வரை) செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் **மாகாணப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம் - வ.மா, முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி கைதடி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் 17.07.2019 அன்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| | கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | NP/24/AIP /2019/PSDG /SHE WARDS | RENOVATION OF WARDS AND WATER SUPPLY SYSTEM OF STATE HOME FOR ELDERS | 1.714 | 2Months | C8/C9 (Building) | 18,000.00 | 21.10.2019 |
| 2 | NP/24/AIP /2019/PSDG /SHE TOILETS | RENOVATION OF TOILETS AND BATHROOMS OF STATE HOME FOR ELDERS | 1.711 | 2Months | C8/C9 (Building) | 18,000.00 | 21.10.2019 |


தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு,
சமூக சேவைகள் திணைக்களம் - வ.மா,

advt@uthayan.com

## வீடு வாடகைக்கு உண்டு

பிரதான வீதி, மவுண்கார் மேல் றோட் சந்தி, யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்கு உண்டு. அரச.தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. பணிபுரியும் குடும்பத்தினரும் தொடர்புகொள்ளலாம்.
✧ வாகனத் தரிப்பிட வசதி உண்டு.
(CS 26446)(4.17)
**077 724 8366**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் செல்லையா இராசதுரை

மலர்வு 26.10.1939 | திதி:- 05.07.2019 | உதிர்வு 16.07.2018

வேலணை என்னும் பதியினிலே
பேர் விளங்க MP என்று
நாமம் சூட்டி
செல்வச் செழிப்புடனே
செம்மையாய் வாழ்ந்தீரையா
நேர்கொண்ட பார்வையும்
நிமிர்ந்த வேக நடையும்
நெஞ்சில் வஞ்சகமில்லா
வார்த்தையும் பேசி
வளமாக வாழ்ந்தீரையா
காரோடும் நாள்முதலாய்
காரப்பா என்றழைத்த நாமமது
நாவில் நாமழைக்கக்
காலன் அவன் விடவில்லை
ஓராண்டு ஓடி மறைந்ததுவே
உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம் இந்நாளில்

வேலணை மேற்கு,
வேலணை.
(CS/26324)(11.17)
**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் ஆறுமுகம் சண்முகநாதன்
*(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - வவுனியா)*

கடந்த (05.06.2019) புதன்கிழமை இறைபதம் அடைந்த வவுனியாவைப் பிறப்பிடமாகவும், கந்தரோடை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் ஆறுமுகம் சண்முகநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 03.07.2019 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வு அன்னாரின் இல்லத்தில் இன்று (05.07.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவிருப்பதால் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


அத்துடன் அன்னாரின் பிரிவால் துயருற்றவேளை இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு துயர் பகிர்ந்தோர் மற்றும் தொலைபேசி அழைப்பு மூலம் துயர் பகிர்ந்தோர் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.*

**ச.பரமேஸ்வரி (மனைவி), பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்**
**(நியூ சந்திரா கிறீம் ஹவுஸ்)**
(TC.10225)(4.17)

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 05 . 1965



மறைவு 30 . 06 . 2019

## சுப்பிரமணியம் சசிகுமார்

யாழ். உரும்பிராய் சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சசிகுமார் 30.06.2019 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் புண்ணியவதி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமதி (மதி), அவர்களின் அன்புக் கணவரும், சஞ்சீவ், சஜீத், சகானா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராஜா, கமலாம்பிகை, ஸ்ரீகுமார், கமலராணி, செல்வராணி, செல்வக்குமார், ஜெயந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஸ்பமலர், புஸ்பாகினி, ஸ்ரீஸ்கந்தராசா, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மற்றும் அற்புதமூர்த்தி, சாந்தமலர், வாசுகி, தர்மலிங்கம், காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் சுதா ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை கனடா Markham இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**அம்மா, சகோதரர்கள்.**

**021 205 4556**

ராசி அதிர்ஷ்டம்
திகதி 04.07.2019 | வெற்றி வாரம் 2553 | வர்ணம் கபிலம்
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 15 39 44 45
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,856,020/=
05.07.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1583 | சீட்டிழுப்பு திகதி 04.07.2019
வெற்றி இலக்கங்கள் 02 24 45 65 ஆங்கில எழுத்து A
அடுத்த திங்கட் கிழமைக்கான ஜக்பொட் ரூ.33. 583. 484/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 659
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.07.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,792,540/-
வெற்றி இலக்கங்கள் 10 33 38 72 ஆங்கில எழுத்து E
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# சாரணர் இயக்கம்



சாரணியம் என்பது உலகளவில் இளைஞர்களின் உடல், உள, ஆன்மிக மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் ஆகும்.

இளைஞர்கள், சமூகத்தில் கட்டமைக்கப்பட்ட வாழ்வை வாழ்வதற்கும், வெளியகச் செயற்பாடுகளில் உச்ச திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் சாரணியம் வழிவகுக்கின்றது.

20ஆம் நூற்றாண்டின் முன் அரைப்பகுதியில் குருளைச் சாரணர், சாரணர், திரி சாரணர் ஆகிய மூன்று பிரதான பிரிவுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

ராபர்ட் பேடன் பவல் பிரபு என்பவர் சாரணர் இயக்கத்தை உருவாக்கியவர் ஆவார்.

இவர் இங்கிலாந்தில் பிறந்த ஆங்கிலத் தளபதி. 1907 ஆம் ஆண்டு சாரணர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். 1910 இல் சிறுமிகள் சாரணர் இயக்கத்தையும் தொடங்கினார்.

சாரணியம் நீச்சல், விளையாட்டு, பாசறை செய்தல், நடைப் பிரயாணம், மர வேலை உள்ளடங்கிய பல வெளியகச் செயற்பாடுகளை கற்றுக்கொடுப்பதனை முறைமையாகக் கொண்டுள்ளது.

பெண்களுக்கென சாரணியம் 1910 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. உலகின் பெரிய இளைஞர் அமைப்புகளில் இதுவும் ஒன்றாகும்.


# வாகனங்களுக்கான ஏல விற்பனை

| Vehicle No | Make | Yard |
|---|---|---|
| **முச்சக்கரவண்டிகள்** | | |
| WP YH-8058 | TVS KING | மாதிவெல |
| WP YE 9251 | TVS KING | மாதிவெல |
| WP YD-7982 | TVS KING | மாதிவெல |
| WP YS-1130 | TVS KING | மாதிவெல |
| WP YF-9903 | TVS KING | மாதிவெல |
| WP ABG-2510 | TVS KING | மாதிவெல |
| CP YL-1446 | RE 205 | குருநாகலை |
| NW YI-9825 | RE 205 | குருநாகலை |
| NW QQ-9686 | AUTO AR4S | குருநாகலை |
| CP YF- 9258 | RE 205 | குருநாகலை |
| UP AAW-1702 | TVS KING | குருநாகலை |
| SG YG -3699 | TVS KING | குருநாகலை |
| EY YO-4136 | TVS KING | குருநாகலை |
| EP YF -1012 | TVS KING | குருநாகலை |
| EP YL-0716 | TVS KING | குருநாகலை |
| NW YI -7919 | TVS KING | குருநாகலை |
| EP YE -9986 | TVS KING | குருநாகலை |
| SG AAS-7122 | TVS KING | குருநாகலை |
| CP YC -3991 | TVS KING | குருநாகலை |
| CP QL-6565 | AUTO AR4S | குருநாகலை |
| CP QX-1766 | AUTO AR4S | குருநாகலை |
| WP ABD-9823 | TVS KING | குருநாகலை |
| CP YJ-8692 | TVS KING | குருநாகலை |
| NW QQ-6264 | AUTO AR4S | குருநாகலை |
| NW QX 8819 | AUTO AR4S | குருநாகலை |
| CP QX-7653 | AUTO AR4S | குருநாகலை |
| CP QK-0153 | AUTO AR4S | குருநாகலை |
| CP HD-7883 | Bajaj 2 Stroke | குருநாகலை |
| CP QN-8191 | AUTO AR4S | குருநாகலை |
| NW QM-7408 | AUTO AR4S | குருநாகலை |
| CP QX-6153 | AUTO AR4S | குருநாகலை |
| NW QS - 4463 | AUTO AR4S | குருநாகலை |
| NW ABF-6083 | RE 205 | குருநாகலை |
| NW AAG-8988 | RE 205 | குருநாகலை |
| CPAAM -8400 | TVS KING | குருநாகலை |
| NW YZ-9550 | RE 205 | குருநாகலை |
| CP HO- 6731 | AUTO RE 2 STROKE | குருநாகலை |
| QU-3264 | AUTO AR4S | குருநாகலை |
| NW QL- 4870 | AUTO AR4S | குருநாகலை |
| NW YW-7284 | RE 205 | குருநாகலை |
| WP QK-9787 | AUTO AR4S | குருநாகலை |
| NW QU-9860 | AUTO AR4S | குருநாகலை |
| NW YI-5866 | RE 205 | குருநாகலை |
| CP YF-1934 | RE 205 | குருநாகலை |
| CP QX-9268 | AUTO AR4S | குருநாகலை |
| CP QW-9390 | AUTO AR4S | குருநாகலை |
| NW QZ-4703 | AUTO AR4S | குருநாகலை |
| CP QW-9854 | AUTO AR4S | குருநாகலை |
| CP AAJ-2448 | RE 205 | குருநாகலை |
| CP JD-3011 | AUTO RE 2 STROKE | குருநாகலை |
| NW QW-8480 | AUTO AR4S | குருநாகலை |
| WP QS-4241 | AUTO AR4S | குருநாகலை |
| EP YM-8813 | TVS KING | மட்டக்களப்பு |
| EP YE 6064 | TVS KING | மட்டக்களப்பு |
| YL-0179 | TVS KING | மட்டக்களப்பு |
| NC YF -9221 | TVS KING | மட்டக்களப்பு |
| EP YB-3324 | AR4S-UG | மட்டக்களப்பு |
| EP YG-0932 | TVS KING | மட்டக்களப்பு |
| EP ABD-8663 | TVS KJNG | மட்டக்களப்பு |
| EP YZ-4128 | TVS KING | மட்டக்களப்பு |
| EP YD-3084 | TVS KING | மட்டக்களப்பு |
| EP Yc-5407 | AR4S-UG | மட்டக்களப்பு |
| SP HF-8259 | AUTO RE 2 STROKE | காலி |
| SP ABF-7679 | TVS KING | காலி |
| SP QQ-3228 | AUTO RE 2 STROKE | காலி |
| **ட்ரக்டர்** | | |
| NW RE-2216 | 45DI | குருநாகலை |
| 37 SRI 4077 | Tractor | சாவகச்சேரி |
| NP -RC-0640 | Tractor | சாவகச்சேரி |
| **HARVESTER** | | |
| HARVESTOR | KUBOTA DC68G | சாவகச்சேரி |
| HARVESTOR | DANXIA SUPER 2.2 | சாவகச்சேரி |
| HARVESTOR | DC 68G | சாவகச்சேரி |
| HARVESTOR | KUBOTA DC68G | சாவகச்சேரி |

| Vehicle No | Make | Yard |
|---|---|---|
| **மோட்டார் சைக்கிள்** | | |
| WP BFO-2637 | Yamaha FZ S | மாதிவெல |
| WP BGD-7567 | Honda Dio | மாதிவெல |
| WP BEX-3885 | Honda DREAM DX | மாதிவெல |
| NW BCU-7913 | DIO SCV110 | மாதிவெல |
| SP BFN-1688 | TVS APACHE | மாதிவெல |
| WP BFY-7164 | Yamaha FZ S | மாதிவெல |
| WP BFE - 4480 | BAJAJ DISCOVER 125 | மாதிவெல |
| WP BEH-6624 | TVS METRO | மாதிவெல |
| WP BFS-0965 | CD110 DREAM | மாதிவெல |
| EP BGG-7122 | PULSAR 180 | மாதிவெல |
| WP BGN -9993 | SUZUKI | மாதிவெல |
| WP BFV-2719 | FZ S | மாதிவெல |
| WP BFE-0498 | HERO DASH | மாதிவெல |
| WP BFU-6707 | PULSAR 180 | மாதிவெல |
| WP BGS-0300 | Honda Navi | மாதிவெல |
| SG BFR-2195 | PULSAR 180 | மாதிவெல |
| WP BFH-1220 | YAMAHA FZ | மாதிவெல |
| WP BFQ-421 | Ray Z | மாதிவெல |
| WP BEZ-8197 | Platina | மாதிவெல |
| WP BFF-9646 | FZ | மாதிவெல |
| WP BHE-3042 | HERO DASH | மாதிவெல |
| WP BGD-6255 | TVS METRO | மாதிவெல |
| WP BGC-5581 | DIO | மாதிவெல |
| WP BHA-2400 | Ray ZR | மாதிவெல |
| WP BGJ-3195 | DIO | மாதிவெல |
| EP BGC-8004 | PULSAR 150 | மாதிவெல |
| EP BGW-7583 | FZ S | மாதிவெல |
| EP BFO-5935 | RAY-ZR | மாதிவெல |
| EP BFN-7418 | RAY-ZR | மாதிவெல |
| EP BGQ-5435 | FZ 2.5 | மாதிவெல |
| EP BFO-2059 | ACTIVA 3G | மாதிவெல |
| WP BFZ-7172 | DIO | மாதிவெல |
| NW BFZ-8398 | PLATINA ES UG | மாதிவெல |
| NW BGN-0069 | PLATINA ES UG | மாதிவெல |
| WP BGF-5334 | FZ | மாதிவெல |
| NW BGO-9181 | DIO | மாதிவெல |
| WP BFE-5031 | HERO DELUXE | மாதிவெல |
| WP BGZ-8833 | DIO | மாதிவெல |
| WP BGZ-4689 | N TORQ | மாதிவெல |
| WP BFQ-4943 | NS 160 | மாதிவெல |
| WP BGB-2575 | DIO | மாதிவெல |
| WP BFY-0457 | FZ S | மாதிவெல |
| WP BGS-6959 | DIO | மாதிவெல |
| NW BDC-8414 | HERO DASH | மாதிவெல |
| WP BFW-4308 | DIO | மாதிவெல |
| WP BFY-6221 | Pulsar 180 | மாதிவெல |
| WP BFP-4893 | RAY ZR | மாதிவெல |
| BFP-8914 - BIKE | APACHE 180 | குருநாகலை |
| NW BDO-2658 | DASH VX | குருநாகலை |
| NW BGN-1601 | RAY -Z | குருநாகலை |
| NW BGQ-0725 | RAY - ZR DRUM | குருநாகலை |
| CP BER -8467 | NS 150 | குருநாகலை |
| EPBGG-6094 | Yamaha RAY ZR | மட்டக்களப்பு |
| EP BGI-2483 | Suzuki LETS | மட்டக்களப்பு |
| EP BGE-9402 | Yamaha FAZER | மட்டக்களப்பு |
| EP BGA-2381 | TVS METRO | மட்டக்களப்பு |
| EP BGK-2922 | HF DELUXE | மட்டக்களப்பு |
| EP BFR-5461 | TVS Metro | மட்டக்களப்பு |
| EP BGV-8450 | HERO MAESTRO | மட்டக்களப்பு |
| EP BFT-5232 | FZ-16 | மட்டக்களப்பு |
| EP BGS-9948 | CD 110 | மட்டக்களப்பு |
| EP BGP 2333 | MAESTRO | மட்டக்களப்பு |
| EP BGY-0608 | CD 110 DREAM DX | மட்டக்களப்பு |
| EP BGW-9191 | MAESTRO | மட்டக்களப்பு |
| EP BFS-7698 | GIXXER MOTOR GP | மட்டக்களப்பு |
| EP BGA-7662 | APACHE | மட்டக்களப்பு |
| EP BEF-9379 | V 15 | மட்டக்களப்பு |
| EP BFV-8092 | RAYZ | மட்டக்களப்பு |
| EP BGM-9822 | NAVI APDR | மட்டக்களப்பு |
| EP BGU-0359 | HUNK DOUBLE DISC | மட்டக்களப்பு |
| EP BGY-4505 | DIO | மட்டக்களப்பு |
| EP BGY-4880 | HF-DELUXE | மட்டக்களப்பு |
| EP BGN-4865 | FZ.16 | மட்டக்களப்பு |
| EP BGY-4875 | HF- DELUXE | மட்டக்களப்பு |
| EP BGZ-6081 | APACHE | மட்டக்களப்பு |
| EP BFT-6726 | Yamaha FAZER | மட்டக்களப்பு |
| NP BCT-0982 | PULSAR 150 | சாவகச்சேரி |
| NP-BGE-2420 | RAY ZR DISK | சாவகச்சேரி |
| NP BEV-5878 | HF DELUXE CAST SELF | சாவகச்சேரி |
| NP BGG-5748 | Bajaj PULSAR 200 NS | சாவகச்சேரி |
| NP BFE-9036 | FAZER | சாவகச்சேரி |
| NP BFX-5039 | Bajaj V15 | சாவகச்சேரி |
| NP BGM-5274 | Bajaj PULSAR 150 | சாவகச்சேரி |
| NP BEV-5878 | HF DELUXE CAST SELF | சாவகச்சேரி |
| NP BGL-1320 | WEGO | சாவகச்சேரி |
| NP BGR 2378 | ACTIVA-I | சாவகச்சேரி |
| NP BGJ-0957 | PASSION PRO | சாவகச்சேரி |
| NP BGE-5639 | PULSAR 150 UG4.5 | சாவகச்சேரி |
| NP BHH 9344 | WEGO | சாவகச்சேரி |
| SP BFV-5525 | TVS SCOOTY PEPT | காலி |
| SP BGG-4475 | MAESTRO EDGE | காலி |
| SP BGK-3156 | TVS ZEST | காலி |
| SP BGI-2874 | YAMAHA FASCINO | காலி |
| SP BGP-2527 | TVS SCOOTY PEPT | காலி |
| SP BGE-9894 | YAMAHA RAY - ZR | காலி |
| SP BGQ-6588 | PULSAR 150 | காலி |
| SP BGL-6469 | Honda DIO | காலி |

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள இலக்கத்திற்கு எம்மை தொடர்புகொள்ளவும்

மாதிவெல சாலை - ரவிந்து - 0710110160
குருநாகலை சாலை - மனோ பிரசாத் - 0717338442
சாவகச்சேரி சாலை - திலீபன் - 0770871512
மட்டக்களப்பு கிளை - ஷாரங்கன் - 0777242912
காலி சாலை - மதுரங்க - 0782469708

இவ் வாகனங்களை கிழமை நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து 4.30 மணிவரை பார்வையிடலாம்.

2019-07-10 திகதி மாலை 5 மணிக்கு கேள்வி முடிவடையும்

முன்னறிவித்தலின்றி எந்த வாகனம் / வாகனங்களையும் மீளப்பெற நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

ASIA ASSET FINANCE PLC
76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. தொடர்பு: 2574682-5


# ஸ்கந்தவரோதயவின் நிறுவுனர் தினமின்று

யாழ்ப்பாணம், ஜூலை 5

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125ஆவது நிறுவுனர் தினம் இன்று நடைபெறவுள்ளது.

கல்லூரி மண்டபத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் எம்.செல்வஸ்தான் தலைமை தாங்குகிறார். நினைவுப் பேருரையை ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் அதிபர் பி.தயானந்தன் ஆற்றவுள்ளார்.

(ம)

## மரண அறிவித்தல்



### திருமதி சிவமலர் பாலேந்திரன்

மாவிட்டபுரத்தைப்பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமலர் -பாலேந்திரன் 04.07.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜையா பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவஞானம் புவனேஸ்வரி தம்பதிகளின் மருமகளும் பாலேந்திரனின் அன்பு மனைவியும் மகேந்திரம் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் தயாளன், காலஞ்சென்றஜெயமலர்மற்றும்சாந்தினிஆகியோரின்அன்புச்சகோதரியும் சுகந்தி (பிரதேச செயலகம் உடுவில்), ஜெயதீபன் (செலிங்கோ பொது காப்புறுதி), ஜெயரூபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் விக்னேஸ்வரன் ( இலங்கைமின்சாரசபை சுன்னாகம்), பாலமயூரா (யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆகாஷ், அபினாஷ், லக் ஷயன், ஆதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(05.07.2019)வெள்ளிக்கிழமை அவரின்இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காககாக்கைதீவு இந்து மயானத்திற்கு் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளப்பிட்டி றோட்,
உயரப்புலம், ஆனைக்கோட்டை

தகவல்: குடும்பத்தினர்.
021 225 5800, 077 466 9445

## இன்று...

கில முகவரி தேடித் தந்த அற்புத மாமனிதர்களை நினைவேந்தும் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்திலும், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசமெங்கும் இன்று உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் கரும்புலி கப்டன் மில்லர் தற்கொலைத் தாக்குதலை நடத்திய நாள் இன்றாகும். 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் திகதி இராணுவத்துக்கு எதிராக மில்லரினால் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவ முகாம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை குறித்த இராணுவ முகாம் மீது மோதி கரும்புலித் தாக்குதலை நடத்தி வீரச்சாவினைத் தழுவியிருந்தார் மில்லர். இதில் நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

இந்த நாளை நினைவுகூர்ந்து ஒவ்வொரு வருடமும் ஜுலை 5ஆம் திகதி கரும்புலிகள் நாள் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நடைபெறுகின்றது.

கரும்புலி மில்லரின் வழியிலேயே நூற்றுக்கணக்கானவர்கள் கரும்புலிகளாக தம்மை அர்ப்பணித்து தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்த்துள்ளனர். (ம-22)


### காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்
### அறநெறிப் பாடசாலை நடத்தும்
### மாணிக்கவாசகர் குருபூசை விழா



இடம்:- கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம்:- 06.07.2019- சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி

மூதறிஞர் கலாநிதி வைத்தீசுவரக்குருக்கள் அரங்கு

நிகழ்ச்சிகள்:- கலாமன்ற மாணவர்கள் வழங்கும் -
- திருவாசகம் ஓதல் ▾ பேச்சு ▾ சிந்தனைக்கு ஒரு விருந்து
- நாட்டிய அர்ப்பணம்
- சொற்பொழிவு :- தலைப்பு - "வான் கலந்த வாசம்" வழங்குபவர்:- செந்தமிழ் சொல்லருவி திரு.எஸ்.லலீசன் அவர்கள்
- திருவாசக தேனிசை :- ஈழத்துப் பிரபல பண்ணிசைக் கலைஞர்கள்.

▸▸ விவாத அரங்கு:- "தமிழர் பண்பாட்டு நிகழ்வுகள் தற்போது சமூகத்தில் தம் நோக்கிலிருந்து..."

| விலகிவிட்டன! | விலகவில்லை! |
|---|---|
| ந.ஜங்கரன் | இ.சர்வேஸ்வரா |
| காரை.சி.சிவாம்சன் | காரை.ஜெ.நிசாந்தன் |
| ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ | 'ஜீவா. சஜிவன் |

நடுவர்:- காரை தமிழருவி த.சிவகுமாரன் அவர்கள்

குறிப்பு:-நிகழ்வுக்கான இலவச போக்குவரத்துச் சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து (இல.428, கே.கே.எஸ்.வீதி, வண்ணை சிவன்கோயில் அருகில்) பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு, கலாமன்றம், காரைநகர்.


## பனை அபிவிருத்திச்சபையின் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019

பனை அபிவிருத்திச் சபையில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அதற்குச் சமாந்தரமான பணியாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை எதிர்வரும் 2019.07.06ந் திகதியன்று சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பி.பகல் 12.45 மணிவரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கு சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் தவறாது தோற்றுமாறு சபையின் நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமையாளர் கலாநிதி பாலசுப்பிரமணியம் சுதாகரன் அவர்கள் அறிவித்துள்ளார்.


### வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை

தொடர்புக்கு:-076 564 6282

### ICT CLASS

G.C.E A/L மற்றும் O/L இற்கான ICT வகுப்புக்கள் வீடு வந்து கற்பிக்கப்படும்.

(CS 26447)(14.17) ❂Results guaranteed

077 476 6597

### வேலைவாய்ப்பு

தொலைத் தொடர்பு நிலையத்திற்கு முன் அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை.

தொடர்புகளுக்கு -077 843 5425

### தவறிவிட்டது

மண்டைதீவுக்கும் அளவெட்டிக்கும் இடையிலான பாதையில் 196235002317 என்னும் இலக்கமுடைய அடையாள அட்டையும் மற்றும் மோட்டார் சைக்கிள் பத்திரம் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

077 415 0754


## 30 ஆவது பிறந்த தின வாழ்த்துக்களும் 8 ஆம் ஆண்டுகள் கடந்த நினைவுகளும்



**மகேந்திர செல்வம் சுரேன்**

பிறப்பு
05.07.1989

இறப்பு
14.05.2011

காலம் செய்தவிதியால் நீ எம்மைவிட்டு பிரிந்து
எட்டு ஆண்டுகள் ஆனதடா....
எம் குடும்பத்தின் முதல் விளக்காக இருந்த நீ
ஒளிவிட்டு போனதேனோ..
இன்று உன் பிறந்ததின வாழ்த்தை
சொல்வதற்கு கூட நீ இல்லையடா...
நீ விட்டு சென்ற நினைவுகளுடன் இன்றும்
உன்னுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

38/4, மணல்தறை லேன்,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

(cs.26450)(13)

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணக வாழ்வில் | விண்ணக வாழ்வில் |
|---|---|
| 14.07.1949 | 23.05.2019 |

அமரர்

**பிரான்சிஸ் திருஞானசீலன் (பொன்ராசா)**

(ஆசிரிய ஆலோசகர் - தீவக வலயம்)

கடந்த 23.05.2019 அன்று விபத்தில் சிக்கி உயிருக்கு போராடிய போது அவரது உயிரைக்காப்பாற்ற இறுதி நிமிடம்வரை போராடிய வைத்திய உத்தியோகத்தர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் அவரது இழப்பின் பின் பல வழிகளிலும் எமக்கு ஆறுதலாக இருந்த அனைத்து நலன் விரும்பிகள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொண்டு அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றுக்காக நாளை 06.07.2019 சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு செபிக்கும் வண்ணமும் பின் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதோடு இதை ஒவ்வொருவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுநிற்கின்றோம்.

சந்தைவளவு,
வரியப்புல வீதி (மதவடி),
சுன்னாகம்

சகோதரிகள், மைத்துனர்,
மருமக்கள்

## துயர் பகிர்கின்றோம்



யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர் திருமதி **வினோஷிராணி சக்திவேல்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கமலேஸ்வரி வாமதேவன்**

(ஆங்கில ஆசிரியர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/ இந்து ஆரம்ப பாடசாலை**

முன்னை நாள் அதிபர்கள், உப அதிபர், ஆசிரியர்கள்.

## மரண அறிவித்தல்

### ஜெயபாலச்சந்திரன் தனேஸ்வரி



யாழ். கைதடியைப் பிறப்பிடமாகவும் கனடா Scarbough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபாலச்சந்திரன் தனேஸ்வரி 30.06.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர்-தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயபாலச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், மயூரி, சுபவண்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகரத்தினம் (லண்டன்), பொன்னுத்துரை, மகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவபாலச்சந்திரன் மற்றும் தவபாலச்சந்திரா, தனபாலச்சந்திரன், குணபாலச்சந்திரன், லோகபாலச்சந்திரன், யோகபாலச்சந்திரன், நாகேந்திரம், ஸ்ரீரஞ்சனதேவி, சண்முகரத்தினம், ரதிதேவி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், உதயமதி ஸ்ரீதரன், தர்சினி ஸ்ரீகாந்தன், மகிந்தினி சுகந்தன், பகீரதி முரளிதரன் ஆகியோரின் சிறிய தாயாரும், பிரசாந், பானுஜா, பானுஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தபனியா, ஹமிஷா, பிரதீஷா, கிரிஷ்ணன், கஜானன், வைஷ்ணவி, சாய்ராம் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் சனிக்கிழமை பார்வைக்கு வைக்கப்பட்டு 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை காலை கிரியைகள் செய்யப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வே.பொன்னுத்துரை - சகோதரன்
(நீபன் களஞ்சியம்)

T.P.No: 077 897 0509, 021 205 7010

## மரண அறிவித்தல்

### நடராசா பாலச்சந்திரன்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)



| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 15.10.1955 | 04.07.2019 |

சாவகச்சேரி வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், கிராம்புவில் சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பாலச்சந்திரன் நேற்று (04.07.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசு - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், விமலேஸ்வரியின் (ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், Dr.திபேகா (CMO - நெடுங்கேணி FAD), தினூபன் (HNB Bank அச்சுவேலி), திபாகுகன் (விவசாயபீடம் - கிளிநொச்சி), தினூசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மினேஸ் (தாதிய உத்தியோகத்தர் - ஆதார வைத்திய சாலை, சாவகச்சேரி), துளசி ஆகியோரின் அன்பு மாமனாரும், சேஷாந், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும், கிருபாலினி, புலேந்திரன் (கனடா), பாலகிருஸ்ணன் (நகரசபை - சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேஸ்வரி, கனகசிங்கம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் மைல் வீதி,
கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

077 656 5935, 077 123 4165

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# பன்னாட்டு விசாரணையின் அவசியம் மீண்டும் நிரூபணம்

திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில் இருந்து சிறப்பு அதிரடிப் படையினர் 12 பேரும் பொலிஸார் ஒருவரும் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். குற்றச்சாட்டை நிரூபிப்பதற்குப் போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்று நீதிமன்றத் தீர்ப்புத் தெரிவிக்கின்றது.

விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் கொழும்பு அரசுக்கும் இடையிலான அமைதி உடன்படிக்கை முறிவடைந்து போர் மீண்டும் தீவிரம்பெறத் தொடங்கிய 2006ஆம் ஆண்டு அந்தச் சம்பவம் இடம்பெற்றது. திருகோணமலை நகரத்தில் உள்ள காந்தி சுற்றுவட்டத்துக்கு அருகே நின்றிருந்த 5 தமிழ் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட ஐவருமே பயங்கரவாதிகள் என்றும் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்த முற்பட்டபோது குண்டு வெடித்து அவர்கள் உயிரிழந்துவிட்டனர் என்றும் வழக்கம் போலவே ஒரு கதையை அவிழ்த்துவிட்டது படைத்தரப்பு. ஆனால், கொல்லப்பட்டவர்கள் மாணவர்கள் என்றும் அவர்களுக்கும் ஆயுதச்சண்டைக்கும் எதுவிதத் தொடர்புகளும் இல்லை என்றும் அவர்களது உறவினர்கள் அடித்துக்கூறினார்கள்.

அதேநேரம், கொல்லப்பட்ட மாணவர்கள் படைத்தரப்புக் கூறியது போன்று குண்டு வெடித்துக் கொல்லப்படவில்லை, அவர்களின் தலைகளுக்கு மிக நெருக்கமாக துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் உறுதிப்படுத்தினர். பத்திரிகைகள் மறுநாளே ஒளிப்பட ஆதாரத்துடன் அதனை வெளிப்படுத்தின. உதயன் பத்திரிகை அதனை தெளிவாக வெளிப்படுத்தியிருந்தது.

படை முகாம் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுக் கொண்டிருந்தபோது அவர்கள் எடுத்து வந்த குண்டு வெடித்து புலிகள் 5 பேர் இறந்துவிட்டனர் என்று படைத் தரப்புத் தெரிவித்தது. மாணவர்கள் நின்றிருந்த பகுதியிலிருந்த வீதியில் சென்ற முச்சக்கரவண்டி ஒன்றிலிருந்து கிரனேட் குண்டொன்று வீசப்பட்டு அது வெடித்ததைத் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் அங்கு நின்றிருந்த இந்த 5 மாணவர்களையும் பிடித்துவைத்திருந்த பின்னர் சுட்டுக்கொன்றனர் என்று குற்றஞ்சாட்டப் பட்டது.

கிரனேட்டை எறிந்த முச்சக்கரவண்டி பின்னர் அருகில் இருந்த படை முகாமுக்குள் சென்று மறைந்ததைச் சாட்சிகள் கண்டுள்ளனர். பிடித்து வைக்கப்பட்டிருந்த மாணவர்களில் சிலரின் பெற்றோர் சில நூறு மீற்றர் தூரத்தில் தமது பிள்ளைகளைத் தேடிக் கொண்டு நிற்கும்போதே மாணவர்கள் ஐவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தக் குற்றச்சாட்டைத் தொடர்ந்து படையினர் மறுத்து வந்தனர் எனினும் பன்னாட்டளவில் எழுந்த அழுத்தங்களைத் தொடர்ந்து போர் முடிந்த பின்னர் சிறப்பு அதிரடிப்படையினர் 11 பேரும் பொலிஸார் ஒருவருமாகப் 12 பேர் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்டது.

கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான மருத்துவர் மனோகரன் இந்த விடயத்தை பன்னாட்டளவில் எடுத்துச் செல்வதில் தீவிர பங்காற்றினார். மனித உரிமைக் குழுக்களின் நீண்ட பங்களிப்பின் பின்னர் 2014ஆம் ஆண்டு இந்த விடயம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினுள் வந்தது. அதன் அறிக்கையில் இந்தக் கொலைகள் குறித்தும் அதற்கான நியாயம் கிடைக்கவில்லை என்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இத்தகைய அழுத்தங்களைத் தொடர்ந்தே சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்யப்பட்டனர். ஆனால், அவர்களுக்கு எதிராகச் சாட்சிகள் இல்லை என்றும் சாட்சிகளில் இருவர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்ட நிலையில், அவர்கள் விசாரணைகளுக்கு உதவுவதற்குத் தயாராக இல்லாத நிலையில் விசாரணைகளை முன்னெடுப்பது சிரமமானது என்று அதிகாரிகள் கைவிரித்தார்கள்.

கடைசியில் போதிய சாட்சிகள் இல்லை என்ற அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்ட படையினர் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

தமிழர்கள் விடயத்தில் இலங்கையில் நீதியை நிலைநாட்டுவது எவ்வளவு தூரம் நடக்கமுடியாத காரியம் என்பதற்கு இந்த வழக்குச் சிறந்த உதாரணம். இதனாலேயே போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணை மட்டுமே தேவை என்று தமிழர்கள் கோரிக்கை முன்வைத்து வருகின்றனர். அது ஒன்றே நீதியை நிலைநாட்டுவதற்கான வழி.

# அரச தலைவரின் தவறான கருத்துக்கள் குழப்பங்களுக்கு வித்திடவே செய்யும்

சேரலாதன்



விடுதலைப் புலிகளைப் போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புபடுத்தி அரச தலைவர் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு பல முனைகளில் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

போதைப் பொருள் வர்த்தகத்தில் மூலமாகவே விடுதலைப் புலிகள் வருமானத்தை ஈட்டி வந்ததாகவும், பிறநாடுகளைச் சேர்ந்த போதைப் பொருள் வர்த்தகர்களுடன் புலிகளின் தலைவரான பிரபாகாரனுக்குத் தொடர்புகள் இருந்ததாகவும் போதைப் பொருள் வர்த்தகம் மூலமாகக் கிடைத்த பணத்தைக் கொண்டே புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து போரை நடத்தினார் எனவும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை அரச தலைவர் வெளியிட்டிருந்தார். நாட்டின் தற்போதைய நிலையில் அரச தலைவருக்கு இது தேவைதானா? எனப் பலரும் முணுமுணுக்கின்றனர்.

புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத் தளபதியாகவிருந்த சரத்பொன்சேகாவும் அரசதலைவரின் கருத்தை மறுத்து அறிக்கையொன்றை விடுத்துள்ளார். உரிமைக்காகப் போராடி மடிந்த விடுதலைப் புலிகளை போதைப் பொருள்களுடன் தொடர்புபடுத்திக் கேவலப்படுத்துவது சரியானதல்லவென அவர் தெரிவித்துள்ளார். புலிகள் வேறு வழிகளில் கிடைத்த நிதியைக் கொண்டே தமக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்தாகக் கூறிய பொன்சேகா, புலிகளின் தலைவரான பிரபாகரன் எப்போதுமே போதைப் பொருள்களுக்கு எதிராகச் செயற்பட்டாரெனவும் தெரிவித்துள்ளார். இதைவிட வேறொருவரின் நற்சான்றிதழ் விடுதலைப்புலிகளுக்குத் தேவையில்லை.

> அரச தலைவரின் அண்மைக்கால நடவடிக்கைகள் அவர் ஏதோவொரு குழப்பத்தில் இருப்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. போதைப்பொருள்கள் தொடர்பான குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்குவதென்ற அவரது முடிவுக்கு உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் எதிர்ப்புக்கிளம்பியுள்ளது. இதேவேளை தூக்குத் தண்டனைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களை ஆராய்வதற்கு ஐந்து நீதியரசர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டமை அரச தலைவருக்கு மேலும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

அரச தலைவரின் அண்மைக்கால நடவடிக்கைகள் அவர் ஏதோவொரு குழப்பத்தில் இருப்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. போதைப்பொருள்கள் தொடர்பான குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்குவதென்ற அவரது முடிவுக்கு உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் எதிர்ப்புக்கிளம்பியுள்ளது. இதேவேளை தூக்குத் தண்டனைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களை ஆராய்வதற்கு ஐந்து நீதியரசர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டமை அரச தலைவருக்கு மேலும் தலையிடியைக் கொடுத்துள்ளது. நீதிமன்றத் தீர்ப்பு அரச தலைவரின் முடிவுக்கு எதிராக வழங்கப்படுமானால் அரசதலைவர் சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும்.

இதேவேளை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக அரச தலைவருக்கு எதிராகச் சாட்சியமளித்த முன்னாள் பொலிஸ்மா அதிபரான பூஜித ஜயசுந்தர மற்றும் பாதுகாப்புச் செயலர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விவகாரமும் அரச தலைவருக்கு நிம்மதியின்மையை ஏற்படுத்தக் கூடியது. கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்ட இருவரும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாகத் தாம் ஏற்கனவே அரச தலைவருக்குத் தக்வல் வழங்கியதாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்பாகக் கூறியிருந்தனர். இதனடிப்படையில் அரச தலைவரையும் விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானித்திருந்தது. இதற்கு அரச தலைவர் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு அதிகார மையங்களை அமைந்துள்ளமை இந்த நாட்டுக்குப் பெரும் சாபக் கேடாக அமைந்துள்ளது.

அரச தலைவரும், தலைமை அமைச்சரும் வெவ்வேறு திசைகளில் பயணித்துக் கொண்டிருப்பதால் நாட்டு மக்கள் பெரும் அவலங்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். அரசதலைவரால் தலைமை அமைச்சரையும் நாடாளுமன்றத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை. ஐக்கிய தேசியக்கட்சி அரசு பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் ஆனால் அரசின் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனவும் ரணில் விக்கிரம சிங்க கூறியிருப்பது அரச தலைவருக்கு விடுத்த சவாலாகவே எண்ணத் தோன்றுகின்றது. இது அரச தலைவருக்கு நன்கு பிரியும்.

அரச தலைவர் தேர்தல் இவ்வாண்டுக்குள் இடம்பெற்று அடுத்த ஆண்டு நாடாளுமன்றத்துக்கும் மாகாண சபைளுக்கும் தேர்தல்கள் இடம்பெறவுள்ள ன. இந்த நிலையில் அரச தலைவரின் குழப்பகரமான செயல்கள் நல்ல சகுனமாகத் தெரியவில்லை. நாடு ஏற்கனவே குழம்பிய நிலையில் காணப்படும் போது நாட்டின் தலைவரும் குழப்பமடைந்து காணப்படுகின்றமை குழப்பநிலையை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

அரச தலைவரால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் நிறை வேற்றப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. முஸ்லிம் பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்கள் ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து நாடு இன்னமும் முற்றாக விடுபடவில்லை. சாதாரண முஸ்லிம் மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பாத நிலையில் காணப்படுகின்றனர். கல்முனையில் தமிழர்களும், முஸ்லிம்களும் முரண்பட்ட நிலையில் காணப்படுகின்றனர். வாழ்க்கைச் செலவு உயர்வினால் மக்கள் அல்லல்களை எதிர்கொள்கின்றனர். இவற்றுக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டிய முழுப்பொறுப்பும் அரச தலைவருக்கே உள்ளது.

இந்த நிலையில் தேவையில்லாத கருத்துக்களை வெளியிட்டு குழப்பங்களுக்கு வித்திடுவது நல்லதாகத் தெரியவில்லை.

உதயன்
# செய்திகள்
24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM
வெள்ளிக்கிழமை 05 ஜூலை 2019


## காரைநகர் பாரம்பரிய உணவகம் தொடர்பான வழக்குத் தள்ளுபடி!

காரைநகர், ஜூன் 5

காரைநகர் கசூரினா கடற்கரை பாரம்பரிய உணவகத்தில் சுகாதாரமற்ற முறையில் பாஸ்பூட் தயாரிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டித் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் செயலருக்கு எதிராக காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி நந்தகுமார் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் தொடர்ந்த வழக்கே தள்ளுபடி செய்யப்பட்டது.

காரைநகர் கடற்கரையில் வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் பாரம்பரிய உணவகம் கட்டப்பட்டு, காரைநகர் பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த உணவகத்தை நடத்துவதற்கு வாடகை உடன்படிக்கை செய்யப்பட்டு கடந்த மார்ச் மாதம் ஆ.சிவகுமார் என்பவருக்கு காரைநகர் பிரதேச சபை வழங்கியிருந்தது. எனினும் அந்த உணவகத்தை கொசி உணவகத்தின் உரிமையாளர் நடத்துகிறார் என்றும், அங்கு சுகாதாரமற்ற முறையில் பாஸ் பூட் தயாரிக்கப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டி காரைநகர் சுகாதார மருத்து அதிகாரி நந்தகுமார் கொசி உணவகத்தின் உரிமையாளர் மற்றும் காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச சபைச் செயலர் ஆகியோருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத்தாக்கல் செய்தார்.

குறித்த பாரம்பரிய உணவகத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்காது பிரதேச சபை தன்னிச்சையாகச் செயற்படுகிறது என்றும் நந்தகுமார் குற்றம்சாட்டியிருந்தார்.

கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற வழக்கில் கொசி உணவகத்தின் உரிமையாளரான சுதர்சனுக்கு ஆதரவாக சட்டத்தரணி சர்மினி முன்னிலையாகியிருந்தார். தவிசாளர் மற்றும் செயலருக்கு ஆதரவாக சட்டத்தரணி இராஜரட்ணம் முன்னிலையானார். வழக்கு விசாரணைகளின் பின்னர் கொசி விடுதி உரிமையாளர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

எனினும் மாகாண நிதியில் அமைக்கப்பட்ட அம்மாச்சி உணவகத்தை, தனியார் நிறுவனமொன்றிடம் வழங்கலாமா என்பது தொடர்பிலும் அதை பெண் குடும்பத் தலைவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கும், போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பயன்படுத்தலாமா என்பது தொடர்பிலும் வடக்கு மாகாண தலைமைச் செயலர் விளக்கமளிக்க வேண்டுமென்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை வழக்கு ஏ.நீதிவான் ஜூட்சன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தலைமைச் செயலரின் அறிக்கை மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கையில், சுற்றுலாத் தளங்களில் அமைக்கப்பட்டது அம்மாச்சி உணவகம் அல்ல. அது பாரம்பரிய உணவகம். அதைத் தனியாருக்கு வழங்குவதில் தடையல்ல. அதில் உணவு தயாரிப்பதற்கும் இடமுண்டு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையை அடுத்து பிரதேச சபை சார்பில் சட்ட வரைமுறைக்கு அமைவாக சட்டத்தரணி இ.இராஜரட்ணம் முன்வைத்த நியாயமான வாதப் பிரதிவாதங்களுக்கு அமைவாக வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர், செயலர் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். (து-21.50)

### தேர்தல் பதிவு எனக்கூறி

## கத்தி முனையில் நகைகொள்ளை

### யாழ்ப்பாணப் பொலிஸில் இப்படி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 5

தேர்தல் பதிவு என்றுகூறி வீட்டு வளவினுள் நுழைந்தவர் தனிமையில் இருந்த பெண்ணின் குரல் வளையில் கத்திவைத்து நகைகளைக் கொள்ளையடித்த சம்பவம் நேற்றுப் பகல் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மடத்தடிச் சந்தியை அண்டிய பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே நேற்றுக் காலை 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் பெண் தனித்திருந்தபோது தேர்தலுக்குப் பதிய வேண்டும் என்று கூறி நபர் ஒருவர் வீட்டினுள் நுழைந்துள்ளார். பின்னர் அவர் பெண்ணின் குரல்வளையில் கத்தியை வைத்து மிரட்டியுள்ளார். பெண் அணிந்திருந்த நகைகள் மற்றும் வீட்டில் இருக்கும் நகைகளைக் கேட்டுள்ளார். வீட்டில் இருந்த தொலைபேசிக்கு அழைப்பு வந்துள்ளது. இதனால் பதற்றமடைந்த குறித்த கொள்ளையர் பெண்ணின் முகத்தில் மயக்க மருந்தைத் தூவி பெண் அணிந்திருந்த இரண்டு பவுண் சங்கிலி, மற்றும் வீட்டு மேசையில் வைக்கப்பட்டிருந்த ஆறு பவுண் காப்பு என்பனவற்றைக் கொள்ளையடித்து அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளார் என்று பொலிஸ் முறைப்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-21)

### ஷியாம் மற்றும் மனைவிக்கு

## தூக்கு

கொழும்பு, ஜூலை 5

போதைப்பொருள் குற்றவாளி முகமது ஷியாம் மற்றும் அவரது மனைவிக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

2003ஆம் ஆண்டு கொழும்பின் வார்ட் பிளேஸில் உள்ள ஒரு வீட்டில் 23 கிலோகிராம் ஹெரோய்ன் வைத்திருந்தமை தொடர்பாக முகமது ஷியாம் மற்றும் அவரது மனைவி கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து கொழும்பு உயர் நீதிமன்றம் 2007 ஆம் ஆண்டு தூக்கு தண்டனை விதித்தது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தனர். சந்தேக நபர்களுக்கு தூக்கு தண்டனை விதித்த உயர் நீதிமன்றத்தின் முடிவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உறுதி செய்துள்ளது. (ஒ.5)

## மதுபோதையில் சாரத்தியம் செய்வோரை பிடிக்கும் பொலிஸாருக்கு பணப் பரிசு

கொழும்பு, ஜூலை 5

பயணிகள் செல்லும் வாகனத்தை செலுத்திய சாரதியொருவர் மது போதையில் கைது செய்யப்பட்டால் அந்தக் கைதை மேற்கொள்ளும் பொலிஸ் அலுவலருக்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும், தனி நபர் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் பொலிஸ் அலுவலருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா பணப் பரிசும் வழங்கப்படவுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீதி விபத்துகளை கட்டுப்படுத்துவதற்கான நாடளாவிய ரீதியிலான திட்டமொன்றின் அம்சமாக மது போதையில் வாகனங்களைச் செலுத்துவோருக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஒரு மாத செயற்திட்டத்தை பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த ஆண்டு மாத்திரம் ஆயிரத்து 552 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஆயிரத்து 632 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வருடத்தின் முதல் ஆறுமாத காலத்தில் இடம்பெற்ற ஆயிரத்து 281 வாகன விபத்துக்களில் ஆயிரத்து 374 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஆண்டை விட இவ்வருடம் வாகன விபத்துக்கள் 271 எனும் அளவிலும், உயிரிழப்புகள் 258 ஆகவும் குறைவடைந்துள்ளன. இந்நிலையில் தொடர்ந்தும் வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களை குறைத்துக் கொள்ளவதற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளபடவுள்ளன - என்றார். (ஒ.5)

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

## தமிழருக்கு ஒருபோதிலும் தீர்வு கிடைக்கமாட்டாது!

### செ.கஜேந்திரன் இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

தமிழர்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் தீர்வும், நீதியும் கிடைக்கப் போவதில்லை இதற்கு பல சான்றுகள் கண்முன்னே நடந்து கொண்டு இருக்கின்றன இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் கஜேந்திரன் தெரிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் கொலைசெய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது. அதில் சந்தேக நபர்களாக இனம் காணப்பட்ட 13 இராணுவத்தினரும் நிரபராதிகள் என்று நீதிமன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இதிலிருந்து நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். போர்க்காலம் முதல் எமது இனம் இராணுவத்தால் அழிக்கப்பட்டு வருகிறது. செம்மணி கொலை தொடக்கம் இது வரை 600க்கும் மேற்பட்ட கொலைச் சம்பவங்கள் தமிழர் தாயகத்தில் அறங்கேறியுள்ளன. இதற்கு எப்போதும் தீர்வு கிடைக்கப் போவதில்லை. நீதி கிடைக்கப்போவதும் இல்லை. தமிழர்கள் இவ்வாறு தொடர்ச்சியாக நசுக்கப்பட்டு வருகிறார்கள். இதற்கான தீர்வு எப்போதும் கிடைக்கப்போவது இல்லை. எந்த ஆட்சியாளர்கள் வந்தாலும் அவர்களாக விரும்பி தமிழ் மக்களுக்கு எதையும் தரப்போவது இல்லை. பௌத்த சிங்கள பேரினவாத அடிப்படையில் நின்று கொள்வார்களே தவிர தமிழ் மக்களின் நலன் சார்ந்து சிந்திக்கப்போவது இல்லை.

இந்திய மேற்கு நாடுகளின் சொல்லுக்கு நகரும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்குவர் என்று மக்கள் முட்டாள்தனமாக நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு நாளும் அது நடக்கப்போவது இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதில் பக்கபலமாக அரசோடு நின்றவர் அவர் என்பதை தன்வாயாலே மறைமுகமாகக் கூறுவதை அவதானிக்க முடிகிறது - என்றார். (ம-7)

## வாகனங்கள் கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 5

காலஞ்சென்ற வைத்தியர் என்.சிவராஜாவின்வேண்டுகோளுக்கு அமைய சிறப்புத் தேவையுடையோருக்காக அமை க்கப்பட்ட 4 வாகனங்கள் கையளிக்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பலாலி வீதியில அமைந்துள்ள தனிகாநுன்கலைக்கல்லூரியில் முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை நடைபெறவுள்ளது. (ஜ)

## மருத்துவர் ஷாபியை தடுத்து வைத்திருப்பது முறையல்ல

### குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம்

கொழும்பு, ஜூலை 5

தீவிரவாத செயற்பாடுகளில் தொடர்புகள் எதுவும் இல்லாத நிலையில் குருநாகல் மருத்துவர் ஷாபியைத் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருப்பது முறையல்லவென குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பாதுகாப்பமைச்சுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர் ஷாபி 1978 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழ் கடந்த மே 27 ஆம் திகதி முதல் 90 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் மீது தீவிரவாத விடயங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இல்லாதபடியால் அவர் மீதான தடுப்புக்காவலை இல்லாமல் செய்வதே நல்லதென குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பாதுகாப்புச் செயலருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே இந்த விடயத்தை கடந்த 27 ஆம் திகதி குருநாகல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பாதுகாப்பமைச்சிடம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.5)

# கருங்காலி நோயைத் தடுக்க கால்நடைகளுக்குத் தடுப்பூசி!

*மன்னார் கால்நடை மருத்துவர்கள் அவசர அறிவிப்பு*

*மன்னார், ஜூலை 5*

*மன்னார் மாவட்ட கால்நடைகளுக்குக் கருங்காலி நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. அதற்கான காலநிலை, சூழ்நிலை தற்போது நிலவுகின்றன. எனவே உடனடியாகக் கால்நடைகளுக்குத் தடுப்பு மருந்து போடுமாறு மன்னார் மாவட்ட கால்நடை மருத்துவ அதிகாரிகள் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளனர்.*

மன்னார் மாவட்டத்தில் கால் நடைகளுக்கு கருங்காலி நோய் பரவும் காலகட்டமாக இது இருப்பதால் கால்நடைகள் வளர்க்கும் பண்ணையாளர்கள் அருகில் உள்ள கால்நடை வைத்தியர்களை அணுகி கால் நடைகளுக்கான தடுப்பு மருந்துகளை போட்டுக்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட கால்நடை மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கருங்காலி நோய் ஒரு வைரஸ் தொற்று. அதிக வெப்பமான சூழல், ஒழுங்கான மேய்ச்சல் இன்மை, தண்ணீர்த் தட்டுப்பாடு போன்ற காரணங்களாலும் கருங்காலி நோய்த் தாக்கம் ஏற்படுகிறது.

இவை அனைத்தும் ஒருங்கே அமைந்த மிக மோசமான காலநிலை இப்போதுள்ளது. எனவே நோய்த் தொற்று ஏற்பட முன்னர் கால்நடைகளைப் பாதுகாப்பது பண்ணையாளர்களின் கடமை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஏராளமான கால்நடைகள் மன்னாரில் உள்ளன. பலரின் வாழ்வாதாரமாகவும் கால்நடைகளே உள்ளன. கருங்காலி நோய்த்தொற்று ஏற்படின் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான கால்நடைகள் இறக்கும் அவலநிலை ஏற்படும்.

எனவே கால்நடைகளை வைத்திருப்போர் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர். (த-213)

## நயினாதீவு மருத்துவமனைக்கு புதிய நோயாளர் காவு வண்டி

யாழ்ப்பாணம், ஜூலை 5

நயினாதீவு மருத்துவமனைக்கு உற்சவ காலத்தைக் கருத்தில்கொண்டு புதிய நோயாளர் காவு வண்டி ஒன்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வழங்கி வைக்கப்பட்டது.

நயினாதீவு மருத்துவமனையில் இதுவரை காலமும் பழைய நோயாளர் காவு வண்டி ஒன்றே காணப்பட்ட நிலையில் அது அந்தப்பகுதிமக்களின் மருத்துவ சேவையை மட்டுமே பூர்த்தி செய்ய முடியும். எனவே ஆலய உற்சவ காலத்தில் கூடும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் நலன் கருதி குறித்த நோயாளர் காவு வண்டியை புதிதாக மாற்றி வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டது. இதன் பிரகாரம் புதிய நோயாளர் காவு வண்டி வழங்கி வைக்கப்பட்டது. (ஜ-105)

## வீதி சீரமைப்புக்கு அடிக்கல்

கொடிகாமம், ஜூலை 5

சுன்னாகம் கந்தரோடை ஞானவைரவர் வீதியின் சீரமைப்பு வேலைகளுக்கான அடிக்கல்நடும்நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை முன்னாள்உறுப்பினர் பா.கஜதீபன், வலி தெற்குப் பிரதேசசபை தவிசாளர் தர்சன், வலி.தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் திருமதி யோகாதேவி ரவிக்குமார்; வலி.தென்மேற்குப் பிரதேசசபை உப தவிசாளர் கணேசவேல், ஓய்வுபெற்ற அதிபர் செல்வக்குமார் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கிராம எழுச்சி திட்டத்தின் ஒதுக்கீட்டில் குறித்த வீதியின் சீரமைப்புக்கு 6 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை கந்தரோடை ஆறுமுகம் வீதியின் சீரமைப்புப் பணிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் அன்றையதினம் மாலை 5.30 மணியளவில் இடம் பெற்றது.

இதற்கான அடிக்கல்லையும் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் நட்டு வைத்தார். குறித்த ஆறுமுகன் வீதிக்கு நாடாளுமன்ற உறுப்பினரால் கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. (ஜ-159)



## நிலையப் பிறிண்டர் பழுதடைந்ததால் தொடருந்து முன்பதிவுக்கு அலைச்சல்

சாவகச்சேரி, ஜூலை 5

கொடிகாமம் தொடருந்து நிலையத்தில் பயணச்சீட்டுக்கள் பதிவு செய்யும் அறையில் உள்ள பதிவு இயந்திரம் 'பிறிண்டர்' பழுதடைந்துள்ளதால் வடமராட்சி தென்மராட்சிப் பிரதேச பயணிகள் முற்பதிவுக்கு யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலை நீடிக்கிறது என்று பயணிகள் விசனம் தெரிவித்தனர்.

தொடருந்தில் பயணிப்பதற்கு ஒன்லைன் மூலம் பயணச்சீட்டு பதிவு செய்வதற்கு யாழ்ப்பாணம் மற்றும் கொடிகாமம் தொடருந்து நிலையங்களிலே அதற்கான பதிவு இயந்திரம் காணப்பட்டது. இந்த நிலையில் கொடிகாமம் தொடருந்து நிலையத்தில் செயற்பட்ட பதிவு இயந்திரம் பழுதடைந்துள்ளதால் பதிவுகளை மேற்கொள்ள பயணிகள் யாழ்ப்பாணம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் தமக்கு வீண் அலைச்சலும் பயணச் செலவும் அதிகம் ஏற்படுகிறது எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கொடிகாமம் தொடருந்து நிலையத்தில் கேட்டபோது, பதிவு இயந்திரம் பழுதடைந்தமை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து தொழில்நுட்ப அலுவலர்கள் வந்து திருத்திய பின்னரே பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் அதிக அளவு திணைக்கள அலுவலகங்களைக் கொண்ட பிரதேசமாக சாவகச்சேரி திகழ்கின்ற போதிலும் அலுவலகங்களில் கடமையாற்றுவோர் தொடருந்துகளில் பயணிப்பதற்கு முற்பதிவு மேற்கொள்ள கொடிகாமம் செல்ல வேண்டியுள்ளது.

இதேவேளை, தற்போது அலுவலர்கள் பயணச்சீட்டு முற்பதிவுக்கு யாழ்ப்பாணம் செல்லும் நிலை ஏற்பட்டு வருவதால் சாவகச்சேரி தொடருந்து நிலையத்தில் முற்பதிவு இயந்திரம் பொருத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இது தொடர்பாக அநுராதபுரத்திலுள்ள தொடருந்து கட்டுப்பாட்டுப் பிரிவினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, சாவகச்சேரியில் தொடருந்துப் பயணப் பதிவு இயந்திரம் பொருத்த வேண்டுமென்று அங்குள்ள திணைக்கள அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கையொப்பமிட்டு கடிதம் அனுப்பினால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர். (த-9)



## தொழிற்பயிற்சி நிலையத்தை அமைத்துத் தரக் கோரிக்கை

கொடிகாமம், ஜூலை 5

தென்மராட்சி பிரதேசத்தில் தேசிய தொழிற்பயிற்சி (நைற்றா) நிலையத்தை அமைத்து தருமாறு தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையால் அமைச்சர் புத்திக பத்திரணவிடம் கோரிக்கை விடப்பட்டது.

தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் பிரதிநிதி ச.சாந்தகுமார் அமைச்சரின் அலுவலகத்தில் வைத்து குறித்த கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை நேற்றுமுன்தினம் கையளித்துள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படித்த இளையோர் ஏராளமானோர் வேலைவாய்ப்பு இல்லாது இருக்கின்றனர். இவர்கள் பயன்பெறும் வகையில் தொழில் பயிற்சி நிலையத்தை அமைத்து அவர்களுக்கு பயிற்சி வழங்கி அதனூடாக வேலை வாய்பை பெற்றுக் கொடுக்கும் நோக்கில்

தென்மராட்சிப் பிரதேசத்தில் தொழில் பயிற்சி நிலையத்தை அமைத்து தருமாறு கோரிக்கை விடப்பட்டது. (ஜ-159)



## புலமைப்பரிசில் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 5

மறைந்த கந்தர் மாணிக்கம் புலமைப்பரிசில் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை வதிரி கலா நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் அந்தக்கிராமத்தைச் சேர்ந்த பல்கலைகழக மாணவர்களான சி.நேசலா, ஜெ.டிலக்ஸனா ஆகியோருக்கு தலா ரூபா 25 ஆயிரம் பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

நிலையத் தலைவர் மயூரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக நெல்லியடி வடக்கு கிராம அலுவலகர் சுதர்சன், நெல்லியடி வடக்கு பொருளாதார அபிவிருத்தி திட்ட அலுவலகர் சிவதர்சினி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஜ-422)

## பெருந்திருவிழா

கொடிகாமம், ஜூலை.5

யாழ்ப்பாணம் அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், 15 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ-159)

◆◆◆◆◆

கொடிகாமம், ஜூலை 5

யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் சிறி வரதராஜ விநாயகர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ-159)

## காற்றாலை நிறுவனத்துக்கான மின்கம்பங்கள் அடித்துடைப்பு

கொடிகாமம், ஜூலை 5

தென்மராட்சி மறவன்புலவு காற்றாலை நிறுவனத்துக்கு மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபை நட்டிருந்த 7 தூண்கள் இனந் தெரியாதோரால் அடித்து உடைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் பெறுமதி 15 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. மின்சார கம்பங்கள் உடைத்தமை தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

மறவன்புலவில் காற்றாலை அமைக்கும் பணியில் மின்சார சபை ஈடுபட்டுவருகிறது. அதற்கு அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

குடியிருப்புப் பகுதியில் காற்றாலை அமைத்தால் தமது பகுதி இயற்கை வளங்கள் இல்லாமல் போகவாய்ப்புள்ளது.

வேறு பாதிப்புக்களையும் ஏற்படுத்தலாம் என்று அங்குள்ள மக்கள் கூறி எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இது மட்டுமன்றி, குறித்த காற்றாலை அமைக்க கற்கள், மணல் என்பனவற்றை பாரவூர்திகள் வீதிவழியாகச் செல்கின்றபோது வீதி படுமோசமாகச் சேதமடைகின்றது.

அதனால் வீதியைத் திருத்தும் வரை குறித்த வீதியால் காற்றாலை அமைக்கும் பகுதிக்கு எந்தவொரு பாரவூர்தியும் செல்லக்கூடாது என்றும் கண்டிப்பாகக் கூறியுள்ளனர்.

காற்றாலை அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்த விடயம் தென்மராட்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டது. அதன்போது, மக்கள் குடியிருப்புக்கள் உள்ள மறவன்புலவில் காற்றாலை அமைக்காது,

திறந்த வெளியான தனங்களப்பில் அமைக்கலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும் காற்றாலை நிலையம் மறவன்புலவிலிருந்து மாற்றப்படவில்லை. (த-159)

## ஆவணங்களின்றி போதையில் சாரத்தியம்: ரூ.20,000 தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 5

ஆவணங்களின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

கொடிகாமம் பொலிஸ் நிலைய போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரின் பரிசோதனையில் வாகன சாரதி சிக்கினார்.

அவர் மதுபோதையில் காணப்பட்டார் என்றும், சாரதிய உரிமப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் போன்றவை இன்றியும் வாகனம் செலுத்தினார் என்றும் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடுத்தனர்.

சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர் தன் மீதான குற்றங்களை ஏற்றுக்கொண்டார்.

அதனையடுத்து சகல குற்றங்களுக்குமாக 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (து-9)



## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி பி.ஜெயவிந்தன், சிறப்புவிருந்தினர்களாக வவுனியா கனகராயன்குளம் பாடசாலை அதிபர் கணேஸ்வரன், தமிழ் விருட்சம் அமைப்பின் செயலர் மா.ஜெகன், அருட்பணி தேவமித்திரன் அடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக கலாநிதி திருச்செல்வம், உபதலைவராக க. சண்முகலிங்கம், செயலராக ஆர். ஜெயக்குமார், உதவிச் செயலராக லயன்.சி. ஜெயசங்கர், பொருளாளராக திருமதி ஜானகி தர்ம சீலன் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாகப் பத்து பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொதிகளும் இதன்போது வழங்கப்பட்டன. (ஜ-9)

# விளையாட்டால் கல்விக்கு பாதிப்பு என்பது சரியல்ல

### *மனநிலையை மாற்றிக் கொள்ளுங்கள் யாழ். மாவட்டச் செயலர் அறிவுரை*

*யாழ்ப்பாணம், ஜூலை 5*

*விளையாட்டுக்களில் பங்கு பற்றுவதால் உடல் நிலையில் ஆரோக்கியம் ஏற்பட்டு மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படுமே தவிர விளையாட்டால் கல்விக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. விளையாட்டால் கல்வி பாதிக்கப்படும் என்று எல்லோரிடமும் இருக்கும் மனநிலை மாறவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.*

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே இடம்பெற்ற வருடாந்த விளையாட்டு நிகழ்வின் இறுதி நிகழ்வும், பரிசில் வழங்கல் நிகழ்வும் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"சமூகத்திலே நடைபெறுகின்ற இவ்வாறான விளையாட்டு நிகழ்வுகளின் மூலம் மாணவர்கள் சிறந்த ஒழுக்கத்தையும் சகிப்புத் தன்மையையும், உடல் வலிமையையும், நல்ல சுகாதார பழக்கவழக்கங்களையும் பெற்று ஆரோக்கியமாக வாழ முடியும்.

இவ்வாறான விளையாட்டுக்கள் மூலம் பெறுகின்ற அனுபவமும், சான்றிதழ்களும் பல்கலைக்கழக அனுமதிக்கும் நேர்முகத் தேர்வுகள் மூலம் வெவ்வேறு தொழில்களைப் பெறுவதற்கும் உடனடி வாய்ப்புக்களாக அமைகின்றன.



தொற்றா நோய் அதிகரிப்பதற்கு எமது உணவுப் பழக்கவழக்கமும், உடற்பயிற்சியின்மையுமே காரணமாக உள்ளன.

இதற்காகவே அலுவலர்களுக்கான உடற்பயிற்சி நிகழ்வுகளை அரசு நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. எமது மாவட்டத்தில் கூடுதலான மாணவர்கள் இருந்தும் ஒரு சிலரே விளையாட்டில் அக்கறை காட்டி வருகின்றனர். பெரியளவில் இவர்கள் அக்கறை கொள்வதில்லை. திறமையிருந்தும் தமது திறமைகளை வெளிக்காட்ட முன்வருவதில்லை. திறமையிருப்ப வர்கள் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டால் தமது கல்வியைப் பாதிக்கும் என்று நினைக்கிறார்கள். உண்மை அதுவல்ல. விளையாட்டுத் துறையில்திறமைசாலியாக இருப்பவர்கள் எவரும் தமது கல்வியிலே பின்தங்கி விடுவ தில்லை.

அந்த வகையிலே கூடுதலானவர்களை விளையாட்டிலே இணைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

எமது மாவட்டம், மாகாண ரீதியாகப் பார்க்கின்றபோது 9 ஆவது நிலையிலேதான் இருக்கின்றது. தேசிய ரீதியில் போட்டிகள் நடக்கின்றபோது கூடுதலானவர்களை ஈடுபடுத்திசிறந்த, ஒழுங்கான பயிற்சிகளைக் கொடுப்பதன் மூலம் அவர்களைச் சிறந்த விளையாட்டு வீரர்களாக உருவாக்க முடியும்.

தேசிய ரீதியிலே ஈடுபடுத்தி அவர்கள் கூடுதலான பதக்கங்களைப்பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கும். எனவே கூடுதலான விளையாட்டு வீரர்களைச் சேர்ப்பதற்கு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலிருக்கும் விளையாட்டு அலுவலர்கள் மிகவும் சிறப்புக் கவனமெடுத்து பயிற்சிகளை வழங்கி சிறந்த நிலைக்கு உருவாக்க வேண்டும். வரும் காலங்களில் கூடுதலான முயற்சி எடுத்தால் தேசிய ரீதியிலே கூடுதலாக பதக்கங்களைப் பெற வாய்ப்பிருக்கும். அதற்கான பயிற்சிகளை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பௌதீக வளங்களில் நாங்கள் குறைந்திருந்தாலும் இன்று கூடுதலான பௌதீக வளங்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. எனவே அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க முடியுமாக இருக்கின்றது.

நான் அனைவரிடமும் கேட்டுக் கொள்வது என்னவென்றால் சகல பிரதேச செயலக பிரிவுகளிலும் விளையாட்டுகளிலே திறமையுள்ளவர்களை இனம்கண்டு அவர்களுக்குரிய பயிற்சிகளைக் கொடுத்து மாவட்ட ரீதியிலே தெரிவு செய்து தேசிய ரீதியிலே கூடுதலான பயிற்சிகளைப்பெறுவதற்குவழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும்என்பதே-என்றார்.(ஜ-36)

# சில பாடசாலைகளில் நிற்கும் பாதுகாப்புத் தரப்பால் சிரமம்

### *பெற்றோர்கள் தரப்பில் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட சில பாடசாலைகளில், தாமதமாகப் பாடசாலைக்கு வரும் மாணவர்களையும் அவர்களை அழைத்து வரும் சில பெற்றோர்களையும் அங்கு கடமையில் நிற்கும் பொலிஸாரும் படையினரும் தேவையற்ற கேள்விகள் கேட்டு சிரமத்துக்கு உள்ளாக்குகின்றனர் என்று பெற்றோர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குள் அடங்கும் ஒரு பாடசாலையின் முன்பாக கடமையில் நிற்கும் பொலிஸ் அலுவலகர் இவ்வாறு செயல்படுகின்றார் என்று குற்றஞ்சாட்டப்படு கின்றது.

நகரிலுள்ள ஆரம்ப பாடசாலை முன்பாக பணியில் நிற்கும் படையினர், மாணவர்களை ஏற்றி வரும் பெற்றோர்களைக் கைதிகளைப்போன்று நடத்துகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவை தொடர்பில் பெற்றோர்கள் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு முறையிட்டுள்ளனர். அதனையடுத்து இந்த விடயம் பாடசாலைகளின் அதிபர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மாகாணக் கல்வி அமைச்சின் செயலரின் கவனத்துக்கும் இத்தகைய விடயங்கள் முறையிடப்பட்டுள்ளன என்று பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இவை உட்பட வெளிப்படையாகக் கூறமுடியாத சம்பவங்கள் சிலவும் இடம்பெற்றுவருகின்றன. எனவே பாடசாலைகளிலிருந்து படையினர் மற்றும் பொலிஸாரின் தலையீட்டை முழுமையாகத் தடுத்து நிறுத்த வேண்டும்என்றுகோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ. இளங்கோவனிடம் கேட்டபோது,

இரு பாடசாலைகள் முன்பாக இடம்பெறும் செயல்கள் தொடர்பில் ஏற்கனவே தகவல்கள் கிடைத்துள்ளன. இவை தொடர்பில் பொலிஸ் அதிகாரி மற்றும் படைத் தலைமைக்குக் கொண்டு செல்லப்படும். மாற்று ஒழுங்கமைப்புத் தொடர்பில் பாடசாலை நிர்வாகங்களுக்குத் தெளிவூட்டப்படும் என்றுதெரிவித்தார். (த-105)

## மாணிக்கவாசகர் குருபூசை நாள் நிகழ்வுகள்

காரைநகர், ஜூலை 5

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை நாள் நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை கலாமன்ற மனோன் மணி கலையரங்கில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன. "தமிழர் பண்பாட்டு நிகழ்வுகள் தற்போது சமூகத்தில் தம் நோக்கிலிருந்து" என்ற தலைப்பில் விவாத அரங்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை நிகழ்வுக்கான இலவச போக்குவரத்துச் சேவை கலாமன்ற யாழ்ப்பாணக் கிளையிலிருந்து (வண்ணை சிவன் கோவிலுக்கு அருகாமை) பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதகல், காஞ்சிபுரம், குசுமாந்துறை, காட்டுப்புலம், யம்புகோளப்பட்டினம், யம்புகோளப்பட்டினம் வாடி வீடு, கோணாந்தோட்டம், மருத்துவமனை காரைநகர் வீதி சந்தியிலிருந்து கேகேஎஸ் வீதி சந்தி வரை, கொட்டடி, சீனிவாசகம் வீதி, முத்தமிழ்வீதி, சிவன்பண்ணை வீதியின் ஒரு பகுதி, கே.கே.எஸ் வீதியில் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து சத்திரச்சந்தி வரை, பிரதானவீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதாகபே வரை, சப்பல் வீதி, யாழ்பாணம் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் குறுக்குத்தெருக்கள், வேம்படி வீதி சந்தி வரை, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு, இலங்கைதொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணப் பொதுநூலகம், மாவட்டநீதிமன்றக் கட்டடத்தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளர்அலுவலகம், அஞ்சல் திணைக்களம், தொழில் திணைக்களம், காரைநகர் சிவன் கோவிலடி, காரைநகர் கடற்கரை, இலகடி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகரம், பரந்தன், இலங்கை வங்கி கிளிநொச்சி, மக்கள் வங்கி கிளிநொச்சி, ச.தொ.ச கிளிநொச்சி, விளையாட்டு தொகுதி கிளிநொச்சி, கிளிநொச்சி கச்சேரி, கிளிநொச்சி நீர்ப்பாசன சபை, பிறிந்தா உற்பத்தி நிலையம், கார்கில்ஸ் பூட் சிற்றி கிளிநொச்சி, சிவனருட் செல்வன் அரிசி ஆலை, பரந்தனிலிருந்து பூநகரி ஊடாக கௌதாரிமுனை வரை, பரந்தன் பிரதேச செயலகம், அரசபுரம் முகாம், சுகந்தன் அரிசி ஆலை, விலாஓடை முகாம், உமையாள்புரம், ஆனையிறவு, ஆனையிறவு உப்பளம், தட்டுவன்.கொட்டி, இயக்கச்சி, இயக்கச்சி இராணுவமுகாம், கரந்தை, மல்வில், முகாவில், விநாயகபுரம், கோதாண்டார்குளம், கோவில்வயல் ஆகிய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் ஆண்டான்குளத்திலிருந்து அடம்பன் வரை, ஆண்டான்குளத்திலிருந்து பள்ளிவாசல்பிட்டி வரை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# மாணவரின் கல்வியை பாதிக்கும் வகையில் கேளிக்கை நிகழ்வுகள்

## பெற்றோர்கள் விசனம்

வவுனியா, ஜூலை 5
*மாணவர்களின் பரீட்சைக் காலத்தில் அவர்களின் கல்விச் செயற்பாடுகளைக் குழப்பும் வகையில் கேளிக்கை நிகழ்வுகள் வவுனியாவில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன என்று பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.*

எதிர்வரும் 6ஆம் திகதி இராணுவத்தினரின் ஏற்பாட்டில் இசைக் கச்சேரியும், 10 ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை வவுனியா வைரவப்புளியங்குளம் சிறுவர் பூங்காவில் காணிவேல் நிகழ்வும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிகழ்வுகளால் மாணவர்களின் கவனம் சிதறடிக்கப்படுகின்றது என்றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி இரண்டாம் தவணைப் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன. இந்தப் பரீட்சை தரம் 9க்கும் மேற்பட்டவர்களுக்கு மாகாண மட்டப் பரீட்சையாக நடக்கவுள்ளது. பரீட்சைக்கு அண்மித்த நாள்களில் இவ்வாறான கேளிக்கை நிகழ்ச்சிகள் மாணவர்களின் கவனத்தைச் சிதறடித்துக் கற்றல் செயற்பாடுகளைப் பாதிக்கும். அடுத்த மாதம் உயர்தரப் பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்படும்.

இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும்போது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு ஒழுங்கமைக்க வேண்டும். நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கும் போது நகர சபையும் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று பெற்றோர்களும், கல்வியியலாளர்களும் தெரிவித்துள்ளனர்.

இது ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வு. இதுவரை எமக்கு எந்தவித எதிர்ப்பும் வரவில்லை. அந்தப் பகுதி மக்களும் அந்த நிகழ்வுக்கு அனுமதி அளித்தமைக்கான கடிதங்கள் எமக்குக் காட்டப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் தொடர்பாக பல நாள்களாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அனைத்து ஒழுங்குகளையும் ஏற்பாட்டாளர்கள் செய்தபின்னர் நிகழ்வுகளை நிறுத்த வேண்டும் என்று கோரப்படுகின்றது.

இந்த நிகழ்வு தொடர்பான ஆட்சேபனை இருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ள முடியும் என்று வவுனியா நகர சபைத் தலைவர் தெரிவித்தார். (எ)



# விபத்துக்களைத் தடுப்பதற்காக களத்தில் இறங்கியது பொலிஸ்

## முல்லைத்தீவில் சோதனை தீவிரம்

முல்லைத்தீவு,ஜூலை 5
முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் சுமார் 25 வரையான வீதி விபத்துக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. இந்த விபத்துக்களால் பலர் கை,கால் முறிவுக்கு உள்ளாகியுள்ளதாகவும் மாவட்ட மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களை தடுக்கும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவுநகர்,புதுக்குடியிருப்பு,ஒட்டுசுட்டான்,மாங்குளம்,மல்லாவி,விசுவமடு,முள்ளியவளை போன்ற இடங்களில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் வாகன சோதனைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். இதன்போது சாரதி அனுமதிப்பத்திரம்,தலைக்கவசம்,காப்புறுதி மற்றும் வாகனத்தின் சமிஞ்ஞை என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் மீறுபவர்கள் மீது சட்ட நவடிக்கையும் எடுக்கப்பட்டுவருவதாக முல்லைத்தீவு போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-ரி3)






# குறிஞ்சிநகர் பெயர்ப் பலகை விசமிகளால் அடித்துடைப்பு!

## வீடமைப்பு அதிகார சபை பொலிஸில் முறைப்பாடு

மன்னார், ஜூலை 5
அமைச்சர் சஜித் பிரேமதாச திறந்து வைத்த, மன்னார் குறிஞ்சி நகர் வீதியின் பெயர்ப்பலகை விஷமிகளால் பிடுங்கி எறியப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட அதிகாரிகள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த வாரம் மாதிரிக் கிராமம் திறந்துவைக்கப்பட்ட நிலையில் ஓரிரு நாள்களில் வீதிப் பெயர்ப் பலகை பிடுங்கியெறியப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட மடுக்கரையில் குறிஞ்சி நகர் என்னும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 211 ஆவது மாதிரிக்கிராமத்தை அமைச்சர் சஜித் பிரேமதாச திறந்து வைத்திருந்தார்.

நானாட்டான் முருங்கன் முதன்மை வீதியிலிருந்து குறிஞ்சி நகர் கிராமத்துக்குச் செல்லும் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த சிமெந்தால் அமைக்கப்பட்ட பெயர்ப்பலகையே முற்றாகச் சேதமாக்கப்பட்டுப் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. அதேவேளை, மீண்டும் அந்த இடத்தில் பெயர்ப்பலகை வைப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன என்று வீடமைப்பு அதிகார சபையினர் தெரிவித்தனர். குறிஞ்சி நகர் பெயர்ப்பலகை சேதமாக்கப்பட்ட சந்தியானது முன்னர் நானாட்டான் பிரதேச சபையின் முதன்மை அலுவலகம் இருந்து தற்போது பிரதேச சபையின் ஆயுள்வேத மருந்தகம் அமைந்திருக்கும் பகுதியாகும். (த-213)

# கொடுப்பனவு இல்லாவிடில் பதிற்கடமை செய்வதில்லை

## அகில இலங்கை அபிவிருத்தி அலுவலர் சங்கம் தீர்மானம்

வவுனியா, ஜூலை 5
பதிற்கடமைக் கொடுப்பனவு இன்றி பதிற்கடமைகளை மேற்கொள்வதில்லை என்று வடக்கு மாகாண அபிவிருத்தி அலுவலர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை ஏற்கனவே அகில இலங்கை அபிவிருத்தி அலுவலர் சங்கம் எடுத்திருந்தது. வடக்கு சங்கத்துடன் இது பற்றி பேசியதன் அடிப்படையில் வடக்கு சங்கமும் மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துள்ளது என்று தெரிய வருகின்றது.

இது பற்றிய கடிதங்களை அரசதலைவர் மற்றும் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் தொடர்பான தகவல் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற தொலைபேசிக் கலந்துரையாடலுக்கு அமைவாக வடக்கு மாகாண அபிவிருத்தி அலுவலர் சங்கமும் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகத் தீர்மானித்து கோரிக்கையை நிறைவேற்றுமாறு கடிதம் அனுப்பியுள்ளது.

எனவே பதிற்கடமைக் கொடுப்பனவு இன்றி அபிவிருத்தி அலுவலர்கள் யாரும் பதிற்கடமைகளில் ஈடுபட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியிலி ருந்து பதிற்கடமை புரியாது இருந்து வருகிறோம். அதனையும் சகலருக்கும் அறிவிக்கிறோம். அவ்வாறு யாராவது பதிற்கடமையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்தினால் அது தொடர்பில் தமக்கு அறியத் தருமாறும் அகில இலங்கை அபிவிருத்தி அலுவலர் சங்கம் கேட்டுள்ளது.

இதன் மூலமாக அபிவிருத்தி அலுவலர்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பிலும் வடக்கு மாகாண அபிவிருத்தி அலுவலர் சங்கம் உரிய நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் என்று சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த)

# மடுத் திருத்தலத்துக்கு கம்பிவேலிப் பாதுகாப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 5
மன்னார் மடுத் திருத்தலத்தின் பாதுகாப்புக் கருதி ஆலயத்தின் சூழல் முழுமையாக கம்பிநெற்வேலி அமைத்து பாதுகாக்கும் திட்டத்துக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

மடுப் பகுதியின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் , மன்னார் ஆயர், பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் நேற்றுமுன்தினம் கொழும்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது முன் வைக்கப்பட்ட குறித்த கோரிக்கை உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆலயத்தைச் சுற்றி 2 ஆயிரத்து 300 மீற்றர் நீளமான பாதுகாப்பு வேலிகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான செலவாக 17.6 மில்லியன் ரூபா கோரப்பட்டது. குறித்த பாதுகாப்பு வேலிக்காகக் கோரப்பட்ட நிதியை உடனடியாக ஒதுக்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன் பாதுகாப்பு வேலியை முடிந்தவரை இந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் மடுத் திருவிழாவுக்கு முன்பாக நிறைவு செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. (ஐ-105)

# 100 ஏக்கர் சிறுபோகச் செய்கை நீரின்றி அழிவடையும் அபாயம்

## நீர் பாய்ச்ச நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5
வவுனிக் குளத்தின் கீழ் விநாயகபுரம் பகுதியில் 100 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை தண்ணீர் வரத்து போதுமானதாக இல்லாத காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த அழிவைத் தடுக்க, பாலியாற்றிலிருந்து தண்ணீரைப் பாய்ச்ச ஏற்படும் நிதிச் செலவைப் பெற்றுத் தர வேண்டும் என்று அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தண்ணீர் பாய்ச்சுவதற்குரிய குழாய் அமைப்பு போன்றவற்றுக்கான நிதியைப் பெற்றுத் தர வேண்டும் என்றே கோரிக்கை விடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, விவசாயி களின் குறித்த கோரிக்கை மீள் குடியேற்ற மறுவாழ்வு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதற்காக 2.5 மில்லியன் ரூபா தேவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. சாதகமான பதில் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (த-105)



## விருது வழங்கி மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 5

யாழ்ப்பாணம் உடுவில் குபேரகா கலைமன்றத்தினர் வடபுல மக்களின் மனங்களைக் கவர்ந்த திருமதி ரவீந்திரகலா ஸ்ரீநிபாஸ்கரனுக்கு (உடுவிலூர் கலா) வடஜோதிஎன்னும்விருதை வழங்கி மதிப்பளித்துள்ளனர்.

இலங்கை நாட்டின் வடபுல மண்ணில் கலை பண்பாடு, கலாசாரம் விளையாட்டு மற்றும் சமூக வளர்ச்சிக்காகவும் இனம் மொழி சமயபேதம் கடந்து வடக்குமாகாண ரீதியாக சேவையாற்றிவரும் மக்கள் நலன் பேணும் துறை சார் சாதனைப் பெண்களின் சேவைகளை மதிப்பளிக்கும் வகையில் அண்மையில் தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வாழும்போதே வாழ்த்துவோம் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.150 பெண்கள் இதன்போது மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ)

## சிறுவர் கழகங்களுக்கு இலக்கியம் சார்ந்த போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை 5

யாழ்பாண மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி வங்கிகள் ஊடாக சிறுவர் கழகங்களுக்கு போட்டி நிகழ்வுகள் நடத்தும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக சமுர்த்தி பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சமுர்த்தி வங்கிகள் ஊடாக சிறுவர் கழகங்களுக்கு நாடகம் ,கட்டுரை போன்ற இலக்கியம் சார்ந்த 11 வகையான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள சமுர்த்தி வங்கி ஊடாகப் பிரதேச சிறுவர் கழகங்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று நிலைகளைப் பெற்ற சிறுவர்கள் தெரிவு செய்யப்படுவர். போட்டிகள் மாவட்டம் தொடங்கி தேசிய மட்டம் வரையில் செல்லும். இந்த மாத இறுதிக்குள் பிரதேச ரீதியான போட்டிகள் நிறைவு செய்யப்படும். தேசிய மட்டப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் நடைபெறும்.

இந்தப் போட்டி நிகழ்வுகள் சிறுவர்களின் ஆளுமைகளை விருத்தி செய்யும் நோக்கில் அவர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## மாணவர்களுக்கு புத்தகப் பைகள் கையளிப்பு

கொடிகாமம், ஜூலை 5

மன்னார் மடுக்கரை பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் புத்தக பைகள் வழங்கிவைக்கப்பட்டன. இலங்கை இந்துக் கட்சியினரால் கடந்த திங்கட்கிழமை இந்த உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு, மாணவர்களுக்கான போசாக்கு உணவு வழங்கல் தொடர்பாகவும் இதன்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை 5

யாழ்ப்பாணம் பன்னாட்டு மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் "சமகால அரசியல் நெருக்கடி மீள்வதற்கான சந்தர்பங்களும் சவால்களும் " என்ற தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. டி.எம்.ஐ தொழில் நுட்பப்பிரிவில் (பலாலி வீதி இலுப்பையடிச் சந்தி) நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஏ.சி. ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப உரையை சொ.சிவபாலன் நிகழ்த்தவுள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



## ஆடைகள் மற்றும் உலர் உணவு பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 5

மாணவர்களுக்கு கலாசார ஆடைகள் மற்றும் முதியோருக்கு உலர் உணவுப் பொருள்கள் என்பன வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

முல்லைத்தீவு சுதந்திரபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 80 மாணவிகளுக்கு 37 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான கலாசார ஆடைகள் நேற்று முன்தினம் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன் மாங்குளம் பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்டு தனிமையில் வாழும் 20 முதியவர்களுக்குரூபா60ஆயிரம்பெறுமதியான உலர் உணவு பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ)



# வீதியைத் திருத்தக் கோரி வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஜூலை 5

வவுனியா - மன்னார் முதன்மை வீதியில், பூவரசன்குளம் சந்தியிலிருந்து செட்டிகுளம் செல்லும் முதன்மை வீதியைச் சீரமைத்துத் தருமாறு கோரி பொதுமக்கள் நேற்று முற்பகல் போராட்டம் நடத்தினர்.

வீதியை மறித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் போக்குவரத்துத் தடைப்பட்டது.

குறித்த வீதியைச் சீரமைக்குமாறு பல போராட்டங்களை மேற்கொண்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்து தட்டான்குளம், சண்முகபுரம், வாரிக்குட்டியூர், கங்கன்குளம், மணியர்குளம்பகுதிகளைச்சேர்ந்தபொது மக்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தினர்.

ஆட்சியாளர்களே செட்டிகுளம் பூவரசன்குளம் வீதியை சீரமைத்துக்கொடு, கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழியேற்படுத்து. எமது பகுதியிலுள்ள நோய்வாய்ப்பட்டவர்களை மரணப் பொறியில் தள்ளாதே, நாம் இருப்பது வரிப் பணம் செலுத்துவதற்கு மட்டுமா? அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்கள்! எமக்குப் பயணிப்பதற்கு சீரான பாதைகள் இல்லை" என்று எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு சென்ற வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை உறுப்பினர் ஆர்.எச். உபாலி சமரசிங்கவிடமும் பூவரசன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும் மக்கள் மனுக்களைக் கையளித்துவிட்டு போராட்டத்தை நிறைவு செய்தனர். போராட்டத்தின் போது பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த முறையும் இந்தப் பகுதி மக்கள் பேராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பலர் சென்று குறித்த வீதியைசீரமைத்துத் தருவதாக அந்தப்பகுதி மக்களிடம் வாக்குறுதியளித்திருந்தனர். நேற்றைய போராட்டத்தில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை. (த)

## செயற்கைக் கால்கள் வழங்குவதற்கு அளவீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 5

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் மறுவாழ்வு நிறுவனத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு செயற்கைக் கால்கள் வழங்குவதற்கு அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுமுன்தினம் நிறுவன வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நடமாடும் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 5

"லிற்றில் மாஷ்ரஸ் " முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி.கி. கமலராணி கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

### சுவிஸ்குமாரை விடுவித்த வழக்கில்

# சிறிகஜன் தலைமறைவானது பற்றி விசாரிக்க மேல்நீதிமன்று பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ்குமாரை விடுவித்த குற்றச்சாட்டில், இரண்டாவது சந்தேகநபரான முன்னாள் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தலைமறைவாகியுள்ளமை தொடர்பில் உரிய விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன் படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியாக கூறப்படும் சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விடுவித்த குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

சுவிஸ்குமாரை சட்டமுறையற்ற வகையில் பொலிஸ் காவலிலிருந்து விடுவிக்க உதவியதன் மூலமாகத் தண்டனைச்சட்டக்கோவை 209ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றம் புரிந்தமை மற்றும் அதற்கு ஒத்துழைத்ததன் மூலமாக 109ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 209ஆம் பிரிவின் கீழான குற்றம் புரிந்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவருக்கும் குற்றப்பத்தி ரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப்பத்திரிகையில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா உள்ளிட்ட 30 பேர் வரையில் சாட்சிகளாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி அ. பிரேமசங்கர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

முதலாவது சந்தேகநபர் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மன்றில் முன்னிலையானார். இரண்டாவது சந்தேகநபர் தொடர்ந்து தலைமறைவாகியுள்ளதால் அவர் மன்றில் முன்னிலையாகவில்லை.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் முன்னிலையானார். முதலாவது சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி துஷித் ஜோன்சன் முன்னிலையானார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இரண்டாவது எதிரி எங்கே? அவர் தொடர்பில் தகவல் உண்டா? என்று வழக்குத் தொடுநரிடம் மன்று கேள்வியெழுப்பியது.

"இரண்டாவது எதிரி சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறி வெளிநாட்டில் உள்ளார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அதன் உண்மைத் தன்மை தொடர்பில் வெளிப்படுத்தப்படவில்லை. அவர் தொடர்பான விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர்முன்னெடுத்துள்ளனர்" என்று அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் கூறினார்.

அத்துடன், இந்த வழக்கை முன்னெடுக்க சிறப்பு அரச சட்டவாதி சட்ட மா அதிபரால் நியமிக்கப்படுவார் எனவும் அரச சட்டவாதி மன்றுக்கு அறிவித்தார்.

இரண்டாவது எதிரி தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கு விசாரணையை செப்ரெம்பர் 27ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

**பின்னணி**

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன், 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். மறுநாள் அவரது சடலம் பற்றைக் காணிக்குள் இருந்து எடுக்கப்பட்டது.

சுவிஸ்குமார் என்று அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரையும் ஊர் மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்த அன்றைய தினம் இரவு பொலிஸ் காவலிலிருந்து அவரை விடுவித்த குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டது. (த-37)

# கோலாகல வரவேற்புடன் ஸ்கந்தாவில் அடிக்கல் நட்டார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 5

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பார்வையாளர் அரங்குக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பங்குபற்றுதலுடன் கோலாகலமாக நடைபெற்றது.

பாடசாலை மாணவர்களின் மேலைத்தேய இன்னிசை முழக்கங்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் அடிக்கல் நடும் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்கு மாலைகள் அணிவித்துக் மதிப்பளிக்கப்பட்டது.





நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கல்லூரியின் பழைய மாணவர் தாய்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் பார்வையாளர் அரங்கு அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல்லை நேற்று ஈ.சரவணபவன் நட்டார். பாடசாலை அதிபர், பழைய மாணவர்களின் தாய்ச் சங்கப் பிரதிநிதிகளும் அடிக்கல்லை நட்டுவைத்தனர். அடிக்கல் நடப்பட்டதை அடுத்து விருந்தினர்கள் உரையாற்றினார்கள்.

அதன் பின்னர் கல்லூரிச் சமூகம், பழைய மாணவர்கள் சங்கத்தினர் என நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கு பொன்னாடைகள் போர்த்தி மதிப்பளித்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்துக்கான அபிவிருத்திகளை மத்திய அரசிடம் இருந்து பெரும் போராட்டத்தின் மத்தியிலேயே அடைய வேண்டிய நிலையில் நாங்கள் உள்ளோம். அது பாடசாலையின் அபிவிருத்தியாக இருந்தாலும் போராடித்தான் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அப்படிப் போராடிப் பெற்றுக்கொண்ட ஒரு திட்டம் இன்று இந்தப் பாடசாலைக்குக் கைகூடியிருக்கிறது.

அமைச்சராக இருந்த இராதாகிருஸ்ணனைக் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் இங்கு அழைத்து வந்தேன். அப்போது பார்வையாளர் அரங்கையும், கேட்போர் கூடத்தையும் இந்தப் பாடசாலையில் சமநேரத்தில் அமைப்பதற்குத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் கேட்போர் கூடம் பிரத்தியேகமாக அமைவதால், இந்தப் பார்வையாளர் அரங்கை தனிமைப் படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.





இந்தப் பாடசாலைச் சமூகத்தின் மத்தியில் இந்தப் பாடசாலையில் அடிக்கல் நடுவதற்குக்கிடைத்த சந்தர்ப்பத்தை நான் மிகப் பெருமையாக நினைக்கின்றேன். பார்வையாளர் அரங்கு இரண்டுவருடங்களுக்கு முன்னர் அமைந்திருக்க வேண்டும். பல சூழ்நிலைகளால் அது தள்ளிப் போயிருந்தது. அரசின் நிலைப்பாடு, அவர்களுடைய வரவு - செலவுத் திட்ட நிதிகளின் பற்றாக்குறைகள் போன்ற பல காரணங்களால் கட்டடத்துக்கான நிதியை ஒதுக்குவதில் பல தாமதங்கள் ஏற்பட்டுவிட்டன.

பல நெருக்கடிகளின் மத்தியில் நிதி பெறப்பட்டுத் தற்போது அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்த மண்டபத்தால் அதிபருக்கும், அதிபரோடு சேர்ந்து இயங்கும் ஆசிரியர்களுக்கும், இரண்டுங்கெட்டான் நிலையில் உள்ள சிலரால் நெருக்குதல்கள் ஏற்படுத்தப்பட்டன. நான் அவை தொடர்பில் அதிபரிடம் கதைக்கவில்லை. பாடசாலை நிர்வாகத்துக்குள் நான் தலையிடுவதில்லை. அதுஎன்னுடைய கொள்கை. எங்களால் என்ன உதவி செய்ய முடியுமோ அதைப் பாடசாலைக்குச் செய்து கொடுக்கவேண்டும். அதை விடுத்து அவர்களுடைய நிர்வா கத்தில் நாங்கள் தலையிடக் கூடாது. அதனால் எனக்குத் தகவல் கிடைத்ததும், என்னால் முடிந்தளவு முயற்சி செய்து சில சங்கடங்களைத் தீர்த்து வைத் துள்ளேன். இந்த மண்டபத்தை அமைப்பதற்கு கல்லூரியின் பழையமாணவர் தாய்ச் சங்கத்தின் செயலர் பிரதாப் மற்றும் பாடசாலையின் அதிபர் ஆகியோர் என்னை எந்தநேரமும் தொடர்பு கொண்டு எனக்கு உந்துதலைக் கொடுத்திருந்தனர். அவர்களால்தான் இன்று இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது- என்றார். (எ-21)



## செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா

வடமராட்சி,ஜூலை 5

வடமராட்சி புல்லாவெளி செபஸ்தியார் தேவாலய வருடாந்த திருவிழா நாளை சனிக்கிழமை இரவு நற்கருண வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது. நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கூட்டுத் திருப்பலியும் திருச்சொ ருப பவனியும் இடம்பெற்று திருவிழா நிறைவுறும்.

திருவிழாவை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் கே. கனேஸ்வரன் தலைமையில் பக்தர்களுக்கு பாதுகாப்பு, போக்குவரத்து, குடிதண்ணீர், தங்கும் இடம் ,மலசல கூடம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேசசபை பக்தர்களுக்குத் தேவையான தண்ணீர் வசதிகளையும் ஆலயசுத்திகரிப்பு பணிகளையும் மேற்கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து புல்லாவெளிக்கு இ.போ.ச மற்றும் தனியார் பேருந்து சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்தொகையான பக்தர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஆலய சுற்றாடலில் முகாமிட்டுள்ளனர். (ஐ-173)

## வவுனியாவில் அதிசய வாழை

வவுனியா, ஜூலை 5

வவுனியாவில் வாழை மரம் ஒன்றில் பொத்தி வர முன்னரே வாழைக்குலை வெளித் தெரிகின்றது. அதை மக்கள் மக்கள் வியப்புடன் பார்த்துச் செல்வதை அவதானிக்க முடிந்தது. வவுனியா கல்வியியற் கல்லூரி வீதியில் உள்ள வீடொன்றிலேயே இந்த வாழை உள்ளது. வழமையாக வாழைப் பொத்தி வெளியே வந்த பின்னர் குலை வருவதே வழக்கம். (எ)



## கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை 5

யழ்ப்பாணம் நீர்வேலி சிறி செல்லக்கதிர்காமஸ்வாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று மதியம் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா நடைபெறும். 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், 15 ஆம் திகதி தேர்த்திருவிழாவும்,மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 5

யாழ்ப்பாணம் அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு சிறி புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 5

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா ஆலய குடமுழுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி திங்க்ட்கிழமை மதியம் 12 மணி தொடக்கம் 10 ஆம் திகதி பிற்பகல் 3 மணி வரை நடைபெறும்.

தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

✪ ✪ ✪ ✪

முல்லைத்தீவு,ஜூலை 5

முல்லைத்தீவு மல்லாவி யோகபுரம் மத்தி சிறி ஆலடி பிள்ளையார் ஆலய குடமுழுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஞாயிற்றுக்கிழமை காலை 8.40 மணி தொடக்கம் 10.28 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது. எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 10 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரை நடைபெறும். தொடர்ந்து 15 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-222)



# அருணோதயக் கல்லூரியுடைய புதிய கட்டடம் நேற்றுத் திறப்பு

## முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சரவணபவன் எம்.பி. திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 5

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் இரண்டு மாடிக் கட்டடத் திறப்பு விழா நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. பாடசாலை அதிபரின் வேண்டுகோளை அடுத்து கல்லூரி உள்ள வீதி அமைப்புக்கு நிதி ஒதுக்கவும் நாடாளுமன்ற உறுப்பினர் உறுதி வழங்கினார்.

அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் செயற்றிட்டத்தில் அமைக்கப்பட்டஇரண்டு மாடிக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வே நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். அருணோதயக் கல்லூரியின் மாணவர்களின் மேலைத்தேய இன்னிய முழக்கத்துடன் சரவணபவன் பாடசாலைக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். மாணவர்கள், ஆசிரியர்கள் அவரை வரவேற்றனர்.

இரண்டு மாடிக் கட்டடத்தின் நினைவுக் கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் திரைநீக்கம் செய்தார். வகுப்பறைகளையும் அவர் திறந்து வைத்தார். 'ஸ்மாட்' வகுப்பறையும் பாடசாலையில் திறக்கப்பட்டது. 'ஸ்மாட்' வகுப்பறையின் தொடுதிரையில் நாடாளுமன்ற உறுப்பினர் தனது வாழ்த்துக்களைப் பதிவு செய்திருந்தார். பின்னர் அங்கு விருந்தினர்கள் உரைகளும் இடம்பெற்றன. அருணோதயக் கல்லூரியில் பல தேவைகள்



உள்ளன என்று நிகழ்வில் தலைமையுரையாற்றிய அதிபர் சுட்டிக்காட்டினார். கல்லூரிக்கு முதன்முதல் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வந்துள்ளார். அவரிடம் கல்லூரியின் உள்ளக வீதியைத் திருத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கோருகின்றேன் என்று அதிபர் குறிப்பிட்டார். விருந்தினர் உரையில் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர், அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க கல்லூரியின் பாதையைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஐந்து இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கித் தர நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதியளித்தார். அதிபரும் சரி, ஆசிரியர்களும் சரி பாடசாலையின் நிகழ்வுகளுக்கு ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைக்கின்றனர். அது நல்ல விடயம். நாங்களும் செய்யவேண்டிய கடமை உள்ளது. இந்த மக்களும் நாங்கள் சேவை செய்வோம் என்று எமக்கு வாக்களித்துள்ளனர். அதனடிப்படையில் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று நாங்களும் செய்யவேண்டியது எமது கடமை என்றும் சரவணபவன் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் அநேகமான பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை யாழ்ப்பாண நகரத்தில்உள்ளபாடசாலைக்குத்தான் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். இன்று அந்த நிலை மாறியுள்ளது. பாடசாலையில் வளங்கள் பற்றாக்குறை உள்ளது. ஒவ்வொரு பாடசாலையிலும் இந்த நிலைதான் உள்ளது. வடக்கு மாகாணத்தை அரசு புறக்கணித்தே வருகிறது. ஒவ்வொரு பாடசாலைக்கும் இது தேவை அது தேவை என்று நாங்கள் அரசிடம் போராடியே அபிவிருத்தி களைப் பெற வேண்டியுள்ளது. - என்றார். (எ-21)

## துர்நடத்தைக் குற்றச்சாட்டுள்ள ஆசிரியருக்குப் பிணை மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடமராட்சியில் பெண்கள் பாடசாலை ஒன்றில் சிறுமி மீது பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில், விளக்கமறியலில்உள்ளஆசிரியர்சார்பில்முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை பருத்தித்துறை நீதிவான் மன்று நிராகரித்தது.

பொலிஸாரின் புலன் விசாரணைகள் நிறைவடையாத நிலையில் சந்தேகநபரை பிணையில் விடுவிக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய நீதிவான் நளினி சுதாகரன், சந்தேகநபருக்கு வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடித்தார். கடந்த 27ஆம் திகதி சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு ஆசிரியர் உட்படுத்தினார் என்று பொலிஸாரால் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

மாணவியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார். அவர் மீதான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர் சார்பில் முற்பட்ட மூத்த சட்டத்தரணி பிணை விண்ணப்பம் கோரினார். "வழக்கில் சட்ட மருத்துவ அதிகாரியால் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையில் சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தியமைக்கான சான்றுகள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் சந்தேகநபருக்குப் பிணை வழங்கவேண்டும்" என்று சமர்ப்பணம் செய்தார். எனினும் சந்தேகநபருக்கு பிணை வழங்க பொலிஸார் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதிவான் பொலிஸாரின் புலன் விசாரணை நிறைவடையும் வரை சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க முடியாது என்று கூறி பிணை விண்ணப்பத்தை நிராகரித்து மறியலை நீடித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த பாடசாலையின் அதிபரையும் குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியரையும் உடனடியாக பதவியிலிருந்து இடைநிறுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், மாகாண கல்வியமைச்சின் செயலருக்கு பணிப்புரை விடுத்திருந்தார். (து-37)

## திருமுறை மனனப் போட்டி

வண்ணை சாந்தையர்மடம் சிறி கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை தின திருமுறைமனனப் போட்டி பரிசளிப்பு நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கொக்குவில் சிறி இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் கு.தீலீபன் கலந்துகொள்ளவுள்ளார்.

மனனப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

தரம் ஒன்றில் முதலாமிடம் ச. அஹி ர்ஷியா (சுழிபுரம் பத்திர காளி அறநெறி), இரண்டாமிடம் கி.சியானி-(தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), மூன்றாமிடம் அ.சயித் (அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாட சாலை) பிரிவு தரம் 2 இல் முதலாமிடம் கு.அக்சயா (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் பா. வைஸ்ணவி (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), மூன்றாமிடம் ப.டானிகா (ஏழாலை சன்மார்க்க வித்தி.) தரம் 3 இல் முதலாமிடம் கி.டிலக்சன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), இரண்டாமிடம் பி.பிரவினா (உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறி), மூன்றாமிடம் அ. அஸ்மிதன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தி.)

தரம் 4 இல் முதலாமிடம் க. பிரகஷ்வினி (யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் இ.டன்சியா (கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை), மூன்றாமிடம் நி.திருவரேஷ்வர் (யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை) பிரிவு ஆகிய மாணவர்களும் பெற்றுள்ளனர். (ஐ)

## வருடாந்த உற்சவம்

வவுனியா,ஜூலை 5

வவுனியா பால மோட்டை கோவில் குஞ்சுக்குளம் அருள்மிகு சிறி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உற்சவம் நிறைவுபெறுவதோடு அன்று இரவு 10 மணிக்கு மடப்பண்டம் எடுத்து, தொடர்ந்து சிறப்பு பூசையும், மறுநாள் சனிக்கிழமை காத்தவராயன் சாந்தியுடன் விழா நிறைவடையும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-222)

## பொங்கல் உற்சவம்

வடமராட்சி,ஜூலை5

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தெற்கு பாலையடி ஞானவைரவர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு வழிவிடுதல் எனும் கிராமிய வழிபாட்டுடன் பொங்கல் உற்சவம் நிறைவுபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## வடமாகாண பெண் ஊழியர்களை ஊக்குவிக்கும் செயற்திட்டம்

கிளிநொச்சி,ஜூலை 5

உரிமைகளைவென்றெடுப்பதற்காகவடக்குமாகாண பெண் ஊழியர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் கிளிநாச்சியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்றது. நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

வட பகுதியில் ஊழியர்களாக தொழில்புரியும் பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவும், அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ஐ-6)

## கூட்டமைப்புக்கான ஆதரவு பன்மடங்கு அதிகரித்துள்ளது

### கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 5

உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான ஆதரவு கடுமையாக வீழ்ச்சியடைந்திருந்தது. ஆயினும், ஒக்ரோபரில் அரசியல் சூழ்ச்சியை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுத்தளம் வெகுவாக அதிகரித்துள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தேசிய தொலைக்காட்சி நிகழ்சியில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒக்ரோபர் மாதம் அரசியல் சதி நடந்த நேரத்தில் கூட்டமைப்பு செயற்பட்ட விதம் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. கூட்டமைப்புக்கான ஆதரவு என்பது இப்போது அதிகரித்திருக்கின்றது. தேர்தல் ஒன்று விரைவில் வரவேண்டும். அதில் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கட்டாயம் போட்டியிட வேண்டும். அதில் அவர் கட்டுக்காசையும் இழக்கும் நிலைதான் ஏற்படும் - என்றார். (ஓ.5)

# மகாசங்கத்தினரது ஆலோசனையை பின்பற்றிச் செயற்படுவது அவசியம்

## அரச தலைவர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 5

மன்னர் காலத்தைப் போன்ற நாட்டில் நல்லாட்சியைக் கொண்டு செல்வதற்கு மகா சங்கத்தினரின் அறிவுரை, ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமையச் செயற்படுவது மிக முக்கியம். அதை உணர்ந்து அன்றும், இன்றும் செயற்பட்டு வருகின்றேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



உடரட்ட அமரபுர சங்க சபைக்கு சொந்தமான மகாவலி நதிக்கரையில் அமைக்கப்பட்டுள்ள போதனை மண்டபத்தை மகா சங்கத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

ஆயிரக் கணக்கான வருடங்களாக மகாசங்கத்தினர் பின்தங்கிய கிராமங்களில் வசித்து தர்ம போதனைகளை மேற்கொண்ட காரணத்தால் இலங்கை சமூக, பொருளாதார, ஆன்மிக வளர்ச்சியை அடைந்துள்ளது என்று அரச தலைவர் தெரிவித்தார்.

பிரித் பாராயணத்துக்கு மத்தியில் நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்த அரச தலைவர் கட்டடத்தைப் பார்வையிட்டார்.

சங்கைக்குரிய கொட்டுகொட தம்மாவாச நாயக்கதேரரின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. சங்கைக்குரிய வத்தேகம தம்மாவாச நாயக்க தேரர், சங்கைக்குரிய மாதிபொல தம்மிக்க நாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர் - என்றுள்ளது. (எ)

சாய்ந்தமருதுக் குண்டுவெடிப்பு

# கைப்பற்றப்பட்ட வாகனம் நிபந்தனையுடன் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 5

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் நடத்திய ஸஹ்ரான் ஹசீம் குழுவினரால் பயன்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 'டொல்பின்' ரக வாகனத்தைக்கடும்நிபந்தனையுடன் நீதிமன்று விடுவித்தது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருதில் குண்டு வெடிப்பை மேற்கொண்ட குழுவினர் இந்த வாகனத்தில் பயணித்து ஆடைகளைக் கொள்வனவு செய்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். விசாரணைகளின் அடிப்படையில் அந்த வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்தை வாடகை அடிப்படையில் செலுத்திச்சென்ற சாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, கடும் நிபந்தனைகளுடன் ரூபா 50 இலட்சம் சரீரப் பிணையில் வாகனம் விடுவிக்கப்பட்டது. வழக்கு தவணை நிறைவுறும் வரை வாகன ஆவணத் தில் பெயர் மாற்றம் செய்தல் விற்பனை செய்தல் கை மாற்றுதல் உருமாற்றுதல் போன்ற செயற்பாட்டில் ஈடுபட வேண்டாம் என்றும் நீதிமன்று அறிவுறுத்தியது.

இந்த வாகனத்தின் உரிமையாளர் வெளிநாடு ஒன்றில் இருப்பதாகவும் வாகனத்தின் ஆவணங்களில் தனது மனைவியின் பெயரை பதிவு செய்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த வழக்கு விசாரணைகளுக்காக எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ)





# கிழக்கில் ரணில் தலைமையில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 5

கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் கடந்த மாத இறுதியில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் மக்கள்பாவனைக்குக்கையளிக்கப்பட்டன. அதனை விடமேலும் பல அபிவிருத்திப் பணிகள் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த மாத இறுதியில் கிழக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, வடகிழக்கு மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட 10 ஆயிரம் வீடுகளில் திருகோண மலை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகளைக் கையளித்தார்.

கிராமிய உட்கட்டமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் மற்றும் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளையும் தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கையளித்தார். இந்த இரண்டு திட்டங்களின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் 3 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றுள்ளது. (ஒ.5)

# தமிழரது முன்னேற்றத்தை தடுக்கவே நூலகம் எரிப்பு

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், ஜூலை 5



இயற்கையாகவே அறிவுத்திறன்படைத்த ஈழத்தமிழன் கல்வியில் மேலோங்கிவிடக் கூடாது என்ற நய வஞ்சக நோக்கத்தினால்தான், தமிழர்களின் கல்வி அறிவைச் சிதைப்பதற்காகவே யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக் கப்பட்டது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

மாங்குளம் தொழிநுட்பக்கல்லூரியில் உயர்தர விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இலவசப் பாடநூல் வழங்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

1982க்கு முற்பட்ட காலத்தில் இவ்வாறான நூல்கள் எமக்குக் கிடைத்ததில்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களைத்தான் நாங்கள் நம்பியிருந்தோம். வெறுமனே பயிற்சிப் புத்தகங்கள் மாத்திரம் கல்வி அறிவை வளர்க்காது. விஞ்ஞானப்பிரிவு என்பதால் இவை பற்றிய அதிகமான தேடல் உங்களுக்கு வேண்டும். அப்போது தான் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பௌதிகவியல் பிரிவு என்பது மிகவும் சவாலுக்குரிய பாடம். ஒரு மாணவன் பௌதீகவியலைச் சரியான முறையில் கற்றால் அந்த மாணவனால் வெட்டுப்புள்ளி களுக்கும் அதிகமான மதிப்பெண்களை எடுக்கமுடியும். யாழ்ப்பாண நூலகம் என்பது ஈழத்தமிழ் மக்களின் அறிவுக் களஞ்சியம். அது இயற்கை நமக்குக் கொடுத்த கொடை. அங்கே அனைத்து விதமான புத்தகங்களும் இருந்தன. நீண்ட காலத்து நமது வரலாற்றுச் சுவடிகள் இருந்தன. அதனால்தான் சிங்கள அரசு அதை எரித்தது. இயற்கை யாகவே அறிவுத்திறன் படைத்த ஈழத்தமிழன் கல்வியில் மேலோங்கிவிடக் கூடாது என்ற நய வஞ்சக நோக்கத்தினால் தான் அவை எரிக்கப்பட்டன. வெள்ளைக்காரனுடன் இருந்த அறிவாளிகள் அனைவரும் தமிழர்களாகத்தான் இருந்தார்கள். எனவே அறிவாளிகளாக இருந்த தமிழர்களின் கைகளில் இந்த ஆட்சி போய்விட்டால் ஒட்டுமொத்த வர லாறும் தலைகீழாக மாறிவிடும் என்பதற்காக எங்களுக்குள் தமிழ், முஸ்லிம், சிங்கள பேதம் இல்லை ஒற்றுமையாக இருப்போம் என்றுஆட்சியை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

தமிழனுக்கு ஆதாரமாக இருந்தது கல்விதான். வெள்ளைக்காரன் ஆங்கில மொழியை நம்பி இலங்கையை ஆட்சிசெய்வதற்குதமிழர்களையேநம்பவேண்டியிருந்தது. ஆனால் இன்று நாங்கள் கல்வியைப் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. எதிர்கால சந்ததியினராகிய உங்களுக்குப் பெரும் பொறுப்பு தரப்பட்டிருக்கிறது. எதிர்காலத்துக் கல்வியையும் சமூகத்தையும் காக்க வேண்டிய பொறுப்பு உங்களிடமே தரப்பட்டுள்ளது என்பதை மறந்து விடாதீர்கள். எனவே நாங்கள் கல்வியால் மட்டுமே வளர முடியும். இந்த வன்னி மண்ணை விட்டு நாங்கள் செல்லும் போது ஒவ்வொருவர் கையிலும் சொப்பிங் பேக் மட்டுமே இருந்தது. அனைத்துச் சொத்து, சுகங்களையும் வீடு, வாகனங்களையும் இழந்திருந்தாலும் கற்றிருந்த கல்வி எங்களை விட்டு செல்லவில்லை. அந்தக் கல்வியை வைத்துத்தான் மீண்டும் மீண்டும் எழுந்து நமது சமுதாயத்தைக் கட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறோம். எனவே அழியாத சொத்து கல்வி. அழிக்கப்பட முடியாத சொத்தும் கல்வி. மிச்சமிருக்கும் உங்களது வருட நாள்களை பயனுடையதாக்குவதற்கு கல்வி கற்றுக் கொள்ளுங்கள். உங்களது கையில் தான் நமது நாடு உள்ளது. எனவே கல்வியால் வளர்ந்து கல்வியால் உயர்ந்து வன்னி மண்ணில் நீங்கள் சாதனைகள் படைக்க வேண்டும் என்பதுதான் எமது ஆசை - என்றார். (த-213)

# மக்கள் புரட்சி வெடிக்கும் என்போரே போராட்டத்தை மழுங்கடிக்கின்றனர்

## முன்னணியின் உறுப்பினர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 5

மக்கள் புரட்சி வெடிக்கும் என்று' நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கூறிவருகிறார். ஆனால் மக்கள் போராட்டங்களை மழுங்கடித்து மக்கள் விருப்பங்களை பூர்த்தி செய்யாமல் எதைச் செய்யப் போகின்றார்? இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபன்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இருந்த நிலையில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதைக்கேவலப்படுத்தும் கீழ்தரமான வேலையை உறுப்பினர்கள் செய்துள்ளனர்.

மக்கள் போராட்டங்களை ஆதரித்து தீர்வைப் பெற்று கொடுக்க வேண்டிய கூட்டமைப்பினர் இந்த மக்களை எதிர்த்து அவர்களை கேவலப்படுத்தும் வேலையைச் செய்கின்றமை கண்டிக்கத்தக்கது.

உண்மையில் கூட்டமைப்பினர் தற்போது மக்கள் போராட்டங்களை நலிவுபடுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் உரிமைகளை மழுங்கடிக்கும் தமிழ் அரசுக் கட்சியின் செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கன. நியாயமான போராட்டங்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இதுதவிர, யாழ்ப்பாண மாநகரத்தை எழில் மிகு நகரமாக மாற்ற வகுத்த திட்டங்கள் என்ன? அவற்றில் எந்தத் திட்டங்களை யார் யார் தடுத்தார்கள் என முதல்வர் தெரிவிக்க வேண்டும் - என்றார். (த-ரி1)

# 50 ரூபாவைக் காட்டி அரசியல் நடக்கிறது

*குற்றம் சுமத்துகிறது இ.தொ.கா.*



கொழும்பு, ஜூலை 5

50 ரூபாவைக் காட்டி காலம் கடத்தும் அரசியலை தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுத்து வருகின்றது. தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம். வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் தொழிலாளர்களுக்கு 50 ரூபா கட்டாயம் வழங்கப்படவேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான கணபதி கனகராஜ் வலியுறுத்தினார்.

கொட்டகலை சி.எல்.எப். கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துவமான கட்சியாகும். தேசிய மற்றும் பிராந்தியக் கட்சிகளுடன் எமக்கு தொடர்பு இருக்கின்றது. கூட்டணி அமைப்பது தொடர்பில் தேசிய கட்சிகள் மற்றும் அமைப்புகள் எம்முடன் பேச்சு நடத்தியுள்ளன. இன்னும் இறுதி முடிவு எட்டப்படாததால் அவை குறித்த தகவல்களை தற்போது வெளியிடமுடியாது. தேசிய கட்சியில் பங்காளியாக இருந்தாலும் நாம் தனித்துவத்தை இழந்ததில்லை. தேர்தல் காலத்தில் தனித்துவமாக தீர்மானம் எடுக்கும் சக்தி பலம் எமக்கு இருக்கின்றது.

மலையக மக்களின் சார்பில் எமது கோரிக்கைகளை அறிக்கை ஊடாக முன்வைத்துள்ளோம். இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துவோம். எமது மக்களுக்காக உண்மையாகவும், நேர்மையுடனும் சேவையாற்ற யார் முன்வருகின்றார்களோ, அவர் குறித்து பரீசிலித்து கூட்டணி குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.

கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஐம்பது ரூபா வழங்கப்படும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் அறிவித்திருந்தார். அதன்பின்னர் ஏப்ரல் முதலாம் திகதி கிடைக்கும் என்றார். அப்போதும் கிடைக்கவில்லை. பின்னர் மே முதலாம் திகதி என்றார். ஆனால், இன்னும் கிடைக்கவில்லை. 140 ரூபா கேட்டவர்கள் இன்று 50 ரூபாவில் வந்து நிற்கின்றார்கள். அமைச்சரவைக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால், காலம்கடத்தாமல், தொழிலாளர்களை ஏமாற்றாமல் இழுத்தடிப்பு செய்யாமல் 50 ரூபாவை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு இடமளிக்கமாட்டோம்.

750 ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுத்துவிட்டு, இதற்கு மேல் பெற்றுக்கொடுக்க எவராவது நடவடிக்கை எடுத்தால் முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று எமது தலைவர் அறிவித்திருந்தார். அதே நிலைப்பாட்டில்தான் இன்னும் நாம் இருக்கின்றோம்.

தூக்குத் தண்டனை தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப் பட்டுவருகின்றன. இது தொடர்பில் எமது அரசியல் உயர்பீடக் கூட்டத்திலும் கலந்துரையாடினோம். உரிய நேரத்தில் எமது முடிவு அறிவிக்கப்படும் - என்றார். (ஒ.5)

# மைத்திரி தனது முகத்திலே கரியைப் பூசிக் கொள்கிறார்

## புலிகளை விமர்சித்தமைக்கு பதிலடி கொடுக்கிறது தமிழ் அரசு

கொழும்பு, ஜூலை 5

போதைப் பொருளோடு தொடர்புபடுத்தி விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டியமை வெறும் இட்டுக்கட்டலே தவிர எவ்வித அடிப்படையும் கொண்டதல்ல. நாட்டின் தலைவராக இவ்வாறு பொறுப்பற்ற வகையிலே பேசுவது அவரை அவரே களங்கப்படுத்திக் கொள்ளுகின்ற செயல். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

தமிழ் மக்களால் உயரிடத்தில் வைத்து மதிக்கப்பட்ட ஒரு இயக்கத்துக்கு கறை பூச நினைப்பது அவர் தனது முகத்திலேயே கரியைப் பூசிக் கொள்வதற்கு ஒப்பானதாகும் எனவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பை போதைப் பொருள் விற்பனையோடு தொடர்புபடுத்தி பேசியமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் என்பது சித்தாந்த ரீதியானது அல்ல. அது தற்காப்பில் தொடங்கி இன விடுதலை என்ற வகையிலே வளர்ச்சி கண்ட ஒரு போராட்டமாகும். இவ்வகையிலே தமிழீழ விடுதலைப் புலிகள் சிறப்பிடம் பெறுகின்றார்கள்.

பொதுமக்களிடம் இருந்து கூட புலிகளின் ஒழுக்கம் தொடர்பிலே முறைப்பாடுகளோ முனுமுனுப்புகளோ இருக்கவில்லை. விடுதலைப் புலிகளும் விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்பட்டவர்களும் என ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். எவரொருவருக்கெதிராகவும் ஒழுக்க ரீதியாகவே அல்லது போதைப் பொருள்கள் தொடர்பாகவோ எவ்வித குற்றச்சாட்டும் இருக்கவில்லை. அவர்களது அரண்கள் தாக்கப்பட்டன, கப்பல்கள் தாக்கப்பட்டன எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அங்கெல்லாம் எவ்வித போதைப் பொருள்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. இறுதிப் போராட்டத்தின் பின் அவர்கள் இருந்த முழுப் பிரதேசமும் இராணுவத்தினர் வசமானது அங்கு கூட போதைப் பொருள்களோ அவற்றுக்கான தடையங்களோ இருந்ததாக எவ்வித செய்தியும் வெளிவரவில்லை. போர் முடிந்து 10 ஆண்டுகள் கழிந்திருக்கும் இக்காலப் பகுதியில் கூட விடுதலைப் புலிகளையும் போதைப் பொருள்களையும் தொடர்பு படுத்தி எவ்வித முரணான செய்திகளும் வரவில்லை.

இவ்வாறு இருக்க அரச தலைவர் மைத்திரிபால போதைப் பொருளோடு தொடர்புபடுத்தி விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டியமை வெறும் இட்டுக்கட்டலே தவிர எவ்வித அடிப்படையும் கொண்ட கூற்று அல்ல. நாட்டின் தலைவராக இருக்கும் ஒருவர் இவ்வாறு பொறுப்பற்ற வகையிலே பேசுவது அவரை அவரே களங்கப்படுத்திக் கொள்ளு கின்ற செயல். இதனால் விடுதலைப் புலிகள் எந்தவகையிலும் களங்கப்படுத்தப்பட மாட்டார்கள். அப்போதைய படைத்தளபதியான சரத் பொன்சேகா அவர்களே இதற்குச் சாட்சி.

தனது தெரிவு தொடர்பில் வடக்கு - கிழக்கிற்கு வரும்போதெல்லாம் தமிழ் மக்களுக்கு நன்றி செலுத்திவந்த அரச தலைவர் மைத்திரிபால இந்தத் தமிழ் மக்களால் உயரிடத்தில் வைத்து மதிக்கப்பட்ட ஒரு இயக்கத்துக்கு கறைபூச நினைப்பது அவர் தனது முகத்திலே கரிபூசிக் கொள்வதை ஒத்ததாகும் - என்றார். (ஒ.5,105)

# கூட்டணிக்குள் உட்கட்சிப் பூசல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் இருவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் கட்சிக்குள் உட்பூசல் ஏற்பட்டுள்ளது என்று தெரிகிறது.

இது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலர், இரா. சங்கையா விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் எமது கட்சியைச் சேர்ந்த காத்தமுத்து கணேசன் ஊடாக கட்சிக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் கோடிக்கணக்கான பணம் கைமாறியுள்ளது என்று ஒருசிலர் எங்களிடம் கேட்டார்கள். எமது கட்சிக்கோ கட்சி சார்ந்த உறுப்பினர்களுக்கோ அல்லது எனக்கோ எதுவித பணமும் கொடுக்கவில்லை என்பதை இரண்டு உறுப்பினர்களும் ஊடகங்கள் வாயிலாக உறுதிப்படுத்தியுள்ளார்கள். ஊடகங்களில் அவர்கள் உண்மைக்கு மாறாக பல கதைகள் கூறியிருந்தாலும், கட்சிக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும் எதுவித பணமும் கொடுக்கவில்லை என்று கூறியுள்ளார்கள்.

கல்முனை மாநகர சபை உறுப்பினர்களாக மேற்படி உறுப்பினர்களை நியமனம் செய்யும்போது "தேர்தலில் போட்டியிட்ட ஏனையவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு எனது சம்மதத்துடன் கல்முனை மாநகர சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகின்றேன்" என்றவாசகம் அடங்கிய கடிதத்தில் அவர்கள் கையொப்பமிட்டபின்னரே சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருவரையும் அழைத்து பதவி விலகுமாறு கேட்டுக் கொண்டோம். ஆனால் அவர்கள் அவ்வாறுசெய்யமுடியாது முடிந்தால் எங்களை நீக்குங்கள் என்று கூறி எழுந்து சென்றுவிட்டார்கள். அன்றிலிருந்து காத்தமுத்து கணேசன் கட்சியின் தலைமையைப் பற்றி நாகரிகமற்ற முறையில் விமர்சனங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டார்.

இந்தச் சூழ்நிலையில் கல்முனைப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தல் தொடர்பான உணவு ஒறுப்பின்போது, எமது கட்சியின் உறுப்பினர்கள் அவர்களிடம் சென்று இந்தச் சந்தர்ப்பத்திலாவது மாநகர சபையில் ஆளுந்தரப்புக்குக் கொடுக்கும் ஆதரவை மீளப்பெறும்படி அவர்களிடம் கேட்டுள்ளார்கள். அவர்கள் மறுப்புத் தெரிவித்துவிட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கட்சியின் நலன் கருதி அவர்களைக் கட்சியிலிருந்து நீக்குவதாக செயலர் நாயகம் அறிக்கை விட்டார் எது எப்படியோ செயலர் நாயகம் நாடு திரும்பியதும் முறைப்படி அவர்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்- என்றுள்ளது. (த)



*இனத்தை அழித்தவர்கள்*

# நல்ல பெயரெடுக்க நடிக்கிறார்கள்

*சிறீதன் எம்.பி. படையினரைச் சாடுகிறார்*

கிளிநொச்சி, ஜூலை 5

தமிழ் இனத்தை அழித்தவர்கள், இனப் படுகொலை செய்தவர்கள் தற்போது நற்பெயரை எடுப்பதற்காக நல்லவர்கள்போல் தம்மைக் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் 84 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய செயற்பாட்டு வகுப்பறைக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கட்டடத்தைத் திறந்து வைத்தார். அதன் பின்னர் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றும் நாம் பாடசாலைக்கு வரும்போது படையினரே எம்மை வரவேற்கின்றனர். குண்டு வெடிப்பு இடம்பெற்ற பகுதிகளில் இவ்வாறு இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப் படவில்லை. பிள்ளைகளே! உங்கள் பெற்றோரிடம் கேட்டுப் பாருங்கள். எத்தனை அப்பாக்களை கொன்றவர்கள், எத்தனையோ சகோதரர்களைக் கொன்றவர்கள், தமிழ் இனத்தையே அழித்தவர்கள், இனப் படுகொலை செய்தவர்கள் இன்று நற்பெயரை எடுப்பதற்காக இவ்வாறு நல்லவர்கள் போல் தம்மைக் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றனர். மொழி தெரியாதவர்கள் உதவி செய்வதுபோல் தம்மைக் காட்டிக்கொள்கின்றனர் - என்றார். (த-6)

# மாகந்துர மதூஷுக்கு கொலைகளுடன் தொடர்பு

*விசாரணைகள் தீவிரம்*

*என்கிறார் பொலிஸ் பேச்சாளர்*

கொழும்பு, ஜூலை 5

பிரபல பாதாள உலக குழுத் தலைவனின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட மிகப் பெரிய படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகந்துரே மதூஷுல் நடத்தப்பட்ட 4 பெரிய கொலைச் சம்பவங்கள் தொடர்பிலான தொலைபேசி உரையாடல்கள் தொடர்பாகவும் தகவல் திரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

நீர்கொழும்பு கிம்புலாபிட்டிய வீதியின் தலுபொத்தல பகுதியில் பாதாள உலகக் குழு தலைவரான மாகந்துரே மதூஷ் பதுக்கி வைத்திருந்த ரி 56 ரக துப்பாக்கி கடந்த வாரம் கைப்பற்றப்பட்டது.

கொலைகள் உட்பட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக மாகந்துரே மதூஷ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றார் - என்றார். (ஒ.5)

# வடக்கு மக்களை இரண்டாம் தர குடிகளாகவே நடத்துகிறது அரசு

## சரவணபவன் எம்.பி காட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 5

அபிவிருத்திகள், சிறப்பு நிதி ஒதுக்கீடுகள், கட்டுமானங்கள், உதவிகள் தொடர்பாக வடக்கு மக்கள் மீது பாராமுகமாக இருக்கும் அரசு, எம்மை இரண்டாம் தர மக்களாகவே நடத்துகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் காட்டமாகத் தெரிவித்தார்.

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இடம்பெற்ற கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்ட நடாளுமன்ற உறுப்பினரிடம் நிகழ்வின் நிறைவில் தற்போது நிலவும் வறட்சி நிலமை தொடர்பாக செய்தியாளார் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இது மிகவும் துரதிஸ்ரவசமான ஒரு நிலை. கடந்தவருடத்து வறட்சிக்குத் தற்போது உதவி வழங்கப்படுகிறது. கடந்த வருடம் வறட்சிக்கான முதலாவது உதவி வழங்கும்போது நானும் போயிருந்தேன். கடந்த வருடத்துக்கான இரண்டாம் கட்டம் தற்போது வழங்கப்படுகிறது. ஆனால் இந்த முறை இவ்வளவு காலமாகிவிட்டது இன்னும் வழங்கப்படவில்லை. வறட்சிப் பாதிப்பு உடனடியாக உதவவேண்டியது அரசின் கடமை. இந்த வறட்சி நிவாரணத்தை அரசு எவ்வாறு ஏனைய மாகாணங்களுக்கு செய்கிறதோ தெரியவில்லை ஆனால் வடக்கு மாகாணத்துக்கு பிந்தியே தருகிறது. இதைத்தான் நான் திரும்பத் திரும்பக் கூறுகின்றேன். இந்த அரசு எங்களுக்குச் சேரவேண்டியதை ஒரு பாராமுகமாகவும், இரண்டாம் தர மக்களாகவே நடத்துகிறது என்பதை சொல்வதற்கு பயப்படமாட்டேன். யாருக்கும் நேரடியாகவே கூறுவேன்.

இன்னும் வடக்கு மாகாணம் 9ஆவது இடத்தில்தான் உள்ளது. போருக்குப் பின்னர் அழிந்தவற்றை அவர்கள் கட்டிக்கொடுத்திருக்கவேண்டும். அது ஐக்கிய தேசியக் கட்சியோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருக்கலாம் அவர்கள் கட்டிக் கொடுத்து எங்களை சமநிலைக்குக் கொண்டுவந்திருக்கவேண்டும். அதை விட்டுவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சியும் எத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை நோக்கியே வேலைகளைச் செய்கின்றார்கள். அதற்கு இங்கிருக்கிறவர்கள், (அவர்களுடைய பெயர்களைச் சொல்வது அழகல்ல) உதவுகின்றனர். அவர்கள் அதைப் பற்றி உணரவில்லை. தமிழர்களாக இருந்தும் அவர்கள்உணரவில்லை. நாங்கள் இவ்வளவு தூரம் அடிமைப்படுத்தப்பட்டுள்ளோம் என்பதை மறந்து அவர்கள் தங்களுடைய பதவிக்காக வேலைசெய்கிறார்கள்.

ஒன்றை எல்லோரும் விளங்கிக்கொள்ளவேண்டும். ஐக்கியதேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் அழித்தவற்றைத்தான் எங்களுக்கு கொடுக்கின்றார்கள். 2009ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை கொஞ்சம் கொஞ்சமாகத் தான் கொடுக்கிறார்கள். யுத்தம் முடிந்து இன்று பத்து வருடங்கள் கடந்துவிட்டன. இன்றும் வடக்குக் கட்டியெழுப்பப்படவில்லை. உலகநாடுகளை அவதானித்தால் போர் நடந்து ஐந்து வருடங்களில் அந்த இடங்கள் கட்டியெழுப்பப்பட்டிருக்கும். இங்கு அது இல்லை. வரவு செலவுத் திட்டத்தில் கூட வடக்கு மாகாணத்துக்கென சிறப்பு நிதிகள் எதுவும் ஒதுக்கப்படவில்லை. வடக்கு மேல் அவர்களுக்கு துளியளவும் அக்கறையில்லை அவர்களுக்கு இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும், போர் போர் என்று அத்தனையையும் ஏவி அழித்ததை கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டிக் கொடுக்கின்றார்கள். இது ஒன்றும் அவர்கள் எங்களுக்கு செய்யும் உதவியல்ல அவர்களால் செய்யப்பட வேண்டிய கடமை என்பதை நான் இந்த இடத்தில் சொல்லிக்காட்ட விரும்புகிறேன். -என்றார். (எ-21)

# ஒன்றுபட்டு ஒரே குரலில் நின்றால் ஆக்கிரமிப்புக்களை தடுக்க முடியும்

## மாகாண முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 5

அரச பயங்கரவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக எங்கள் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு எழுவார்களாக இருந்தால் அரசின் முயற்சிகளை நிச்சயமாக முறியடிக்க முடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை நீராவியடிப்பிள்ளையார் ஆலயம் மற்றும் தென்னவன் மரவாடி முருகன் ஆலயம் ஆகிய கோவில்களில் தமிழர்களின் பூர்விக மதவழிபாட்டு இடங்கள். பௌத்த மத ஆக்கிரமிப்பால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. குறித்த இரண்டு கோவில்களுக்கும் சிவாஜிலிங்கம் குழுவினர் நேற்றுச் சென்று பார்வையிட்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ஆ.புவனேஸ்வரன், சபா குகதாஸ் உள்ளிட்டவர்கள் அடங்கிய குழுவினர் உட்பட வடக்கு மாகாண பிரதிநிதிகள் இணைந்து சென்று கோவிலைப் பார்வையிட்டு, வழிபாடு செய்து வந்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களிலும் கலை, கலாசார, மதச் சின்னங்களை அழிக்கும் நடவடிக்கைகளிலும் சிங்கள, பௌத்த அரசு தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளது.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது என்று சொல்லப்பட்ட 48 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இது தொடர்கிறது.

ஆண்டாண்டு காலமாக தொல்பொருள் திணைக்களத்தினர் தமிழர் வரலாற்றை மாற்றியமைக்கக் கூடிய வகையில் ஈடுபட்டு வருகின்றார்கள். பல திணைக்களங்கள் இவ்வாறு ஈடுபட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தைச் சீரமைக்க முடியாதவாறு பௌத்த மதகுரு தடையாக இருந்து வெளி இடங்களில் இருந்து அழைத்துவரப்படும் சிங்கள பௌத்தர்களை வைத்துக்கொண்டு அச்சுறுத்துகிறார். அதற்கு முன்பாகப் படையினர் முகாம் அமைத்து பிக்குவுக்கு உடந்தையாக பக்கச்சார்பாகச் செயற்படுகிறார்கள்.

தமிழர்கள் ஆண்டாண்டு காலமாக பாரம்பரிய பூமியில் இருந்த அடையாளங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைக்கு எதிராக நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரேகுரலில் நின்றால்தான் ஆக்கிரமிப்புக்களைத் தடுத்து நிறுத்த முடியும்.

இதேபோல் கிழக்கு மாகாணத்தின் எல்லையில் இருக்கின்ற தென்னவன்மரவாடி கிராமத்தில் மலையில் இருக்கின்ற முருகன் ஆலயத்தில் வழிபடுவதற்கும் அதனைச் சீரமைப்பதற்கும் தடை விதிக்கப்பட்டு அதிலும் படையினரின் காவலரண் அமைத்துள்ளனர்.

இவ்வாறான அரச பயங்கரவாதம் என்று சொல்லப்படுகின்ற நிகழ்ச்சி நிரலில் தமிழ் மக்களை இன ரீதியாக, மதரீதியாக அடையாளங்களை அழிக்கின்ற நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். எங்கள் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு எழுவார்களாக இருந்தால் அரசின் முயற்சிகளை நிச்சயமாக முறியடிக்க முடியும் என்று மேலும் தெரிவித்தார். (கு-ரி3)

# நாளை நாடு திரும்புகிறார் கோத்தபாய

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச நாளை நாடு திரும்பு கிறார். இலங்கை வந்த உடனேயே அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளில் அவர் இறங்கவுள்ளார். முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச, சிங்கப்பூரில் இதய சத்திரசிகிச்சை மேற்கொண்டிருந்தார். சுமார் ஒரு மாத ஓய்வில் இருந்த கோத்தபாய, நாட்டுக்கு நாளை திரும்புகிறார். (ஓ.5)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு ரூ.150,000 தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 5

அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. மணலைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டது.

சாரதிக்கு எதிராகக் கொடிகாமம் பொலிஸார் வழக்குத்தாக்கல்செய்திருந்தனர். வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து ஒரு லட்சத்து 50 ஆயிரம்ரூபாதண்டம் விதிக்கப்பட்டது. (கு-9)

# ஹேமசிறி, பூஜிதவுக்கு பிணை கிடைக்குமா?

கொழும்பு, ஜூலை 5

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் அரச தலைவரால் கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகிய இருவருக்கும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குப் பிணை கிடைக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 9ஆம் திகதிதான் தெரியவரும் என்று இவர்கள் இருவரி தும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

உயிர்த்த ஞாயிறன்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோரைக் கொலைக் குற்றச்சாட்டு உட்பட பல்வேறு குற்றச்சாட்டு தொடர்பான சந்தேகநபர்களாகக் கருதி கைதுசெய்யுமாறு சட்டமா அதிபரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை இவர்கள் இருவரையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் விசாரணைக்காக முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இவர்கள் இருவரும் சுகவீனம் காரணமாக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

ஹேமசிறி பெர்னாண்டோ கொழும்பு தேசிய மருத்துவமனையிலும், பூஜித ஜயசுந்தர நாரஹேன்பிட்டி பொலிஸ் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டிருந்தனர். இதனையடுத்து மருத்துவமனைகளுக்குச் சென்ற குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அங்கு மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து இவர்கள் இருவரையும் கைதுசெய்தனர்.

இதன்பின்னர் மருத்துவமனைகளுக்குச் சென்ற கொழும்பு முதன்மை நீதிவான் லங்கா ஜயரத்ன இவர்களை நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார். இந்தநிலையில், இவர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பு முதன்மை நீதிவான் நேற்றுமுன்தினம் நீடித்துள்ளார். இவர்களுக்குப் பிணை கிடைக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 9ஆம் திகதிதான் தெரியவரும்.

'இவர்கள் இருவரும் குற்றமிழைக்கவில்லை. இவர்களுக்கான அதிகாரங்களைப் பாதுகாப்பு அமைச்சரான அரச தலைவர் பறித்து வைத்திருந்தார். கடந்த வருடம் ஒக்ரோபர் 26ஆம் திகதி அரங்கேற்றப்பட்ட அரசியல் சதிப் புரட்சியின் பின்னர் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டங்களுக்கு அரச தலைவரால் அழைக்கப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, பாதுகாப்புச் செயலராக இருந்த ஹேமசிறி பெர்னாண்டோவையும் நேரில் சந்திப்பதை அரச தலைவர் குறைத்து வந்துள்ளார். இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையாவது அரச தலைவரைத் தான் நேரில் சந்திப்பது கடினமாக இருந்தது என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் ஹேமசிறி பெர்னாண்டோ சாட்சியமளித்திருந்தார். எனவே, உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்களுக்கு யார் முழுப்பொறுப்பு என்பது நாம் சொல்லாமலே நாட்டு மக்களுக்குத் தெரியும். முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் அரச தலைவரால் கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகிய இருவரும் பிணையிலாவது விடுவிக்கப்பட வேண்டும்' என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (ஓ.5,22)

# தூக்குத் தண்டனைக்கான நாள் அறிவிக்கப்படவில்லை

கொழும்பு, ஜூலை 5

தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவது குறித்த அரச தலைவரின் உத்தரவு தொடர்பாக, அரச தலைவர் செயலகமோ, நீதி அமைச்சோ இதுவரை சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு எந்த தகவலையும் வழங்கவில்லை என்று, மூத்த சிறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

'தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 18 கைதிகளின் பட்டியலை நீதி அமைச்சு அனுப்பியுள்ளது. அதில் நான்கு போதைப்பொருள் குற்றவாளிகளை தூக்கிலிடுவதற்கான ஆவணங்களில் அரச தலைவர் கையெழுத்திட்டுள்ளார். இருப்பினும், தூக்கிலிடப்படும் நான்கு குற்றவாளிகள் மற்றும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் நாள் குறித்து எங்களுக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு எதிராக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை அடுத்து, தூக்கிலிடுவதற்கான நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

தூக்கிலிடுபவர்கள் இருவர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களின் நியமனங்கள் உறுதி செய்யப்பட்டுள்ள போதும், இன்னமும் அவர்கள் பணியில் இணைந்து கொள்ளவில்லை. ஏற்கனவே உள்ள தூக்குக் கயிறு நல்ல நிலையிலேயே இருப்பதால், வெளிநாட்டில் இருந்து புதிய தூக்குக் கயிறு வாங்க வேண்டிய அவசியம் இல்லை, என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ஓ.5)

# முல்லை செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய தமிழர் விழாவை எழுச்சியாக முன்னெடுக்க அழைப்பு

முல்லைத்தீவு, ஜூலை 5

தமிழர் பிரதேசங்களை சிங்கள மயமாக்கும் இரகசிய நோக்கத்துடன் பௌத்த தேரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் இருப்பையும், தமிழர்களின் நிலவுரிமையையும் உறுதிப்படுத்தி ஆலயத்துக்கான தமிழ் மக்களின் ஆதரவுப் பலத்தினை ஆக்கிரமிப்பாளர்களுக்கு காண்பிக்கும் முகமாக 'தமிழர் திருவிழா' எனும் தொனிப்பொருளில் நாளை அதே ஆலயத்தில் 108 பானைகளை வைத்து பொங்கல் விழாவை முன்னெடுக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி சிங்கள பௌத்த மயமாக்கலினால் பறிபோய் கொண்டிருக்கும் எல்லைக் கிராமமான கொக்குத் தொடுவாயின் வரலாற்று சிறப்புமிக்க கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு பாரம்பரிய மடப்பண்டமெடுத்தலும் '108' பானைப் பொங்கலும் இடம்பெறவுள்ளது.

மடப்பண்டமெடுப்பின் போது அவ்வாலயம் சார்ந்த மக்களும் அதன்பின்னர் இடம்பெறும் பொங்கலின்போது காலை 10.30 மணிக்கு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான மக்கள் பலத்தை காண்பிக்கும் வகையில் இளைஞர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் மதத் தலைவர்கள் உள்ளிட்டோர் வேறுபாடுகளைக் கடந்து நில ஆக்கிரமிப்புக்கு எதிரான உணர்வுள்ள தமிழர்களாய் ஒன்றிணையுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம)

---

## ஐ.தே.க...

இதில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர். இதன்போது அரசதலைவர் வேட்பாளர் விவகாரம் குறித்தே கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனத் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளருக்கு ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் கரு ஜயசூரிய ஆகியோரின் பெயர்கள் இதுவரை பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், அரச தலைவர் வேட்பாளருக்கு சஜித் பிரேமதாசவின் பெயரை பங்காளிக் கட்சிகள் முன்மொழியக் கூடும் என்றும், இதற்கு ஐ.தே.கவிலுள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவளிக்கக்கூடும் என்றும் அறியமுடிகின்றது.

அதேவேளை, ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் சிறப்புச் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது. (ம-22)

## சேவல்கொடிக்கு...

சந்தேகம் எழுந்துள்ளதாக பக்தர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கதிர்காம கந்தனின் வருடாந்த உற்சவக் கொடியேற்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

தற்போதெல்லாம் கதிர்காமத்தில் வருடாந்த திருவிழா ஆரம்பிக்கும் போது கதிர்காமத்தில் உள்ள இஸ்லாமிய பள்ளிவாசலிலேயே கொடி ஏற்றப்படுகிறது. முருகன் கோயிலிலோ, தெய்வானை அம்மன் கோயிலிலோ கொடி ஏற்றப்படுவதில்லை. அதுவும் அரபு எழுத்துக்கள் எழுதப்பட்ட பச்சை நிறக் கொடியே ஏற்றப்படுகிறது.

பாரம்பரிய சைவ சம்பிரதாயத்தின்படி கதிர்காம முருகன் கோயிலில் முருகனின் சேவல் கொடி ஏற்றப்பட்டு, அங்கிருந்து தெய்வானை அம்மன் கோயிலுக்கு கொடி எடுத்து வரப்பட்டு, அங்கு கொடிக்கு பூஜை வழிபாடுகள் நடத்தப்பட்டப்பின் பக்கீர் மடத்துக்கு (இன்றைய பள்ளிவாசலின் முன்பக்கம்) கொண்டு வரப்பட்டு அங்குள்ள கொடிக்கம்பத்தில் கட்டப்படும். கதிர்காமம் பற்றி எழுதப்பட்டுள்ள பழைய நூல்களில் இந்த விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பாரம்பரிய சைவ சம்பிரதாயம் ஏன் மாற்றப்பட்டது? இந்து சமய அமைப்புக்கள் இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமா? கதிர்காம முருகன் கோயிலில் மீண்டும் சேவல் கொடி ஏறுமா? பாரம்பரிய சைவ சம்பிரதாயம் காப்பாற்றப்படுமா? புரியாத புதிர் கந்தன் ஆலயத்தின் ஆரம்ப நாள் கொடியேற்றம் எதற்காக பள்ளிவாயிலில் ஏற்றப்படுகின்றது. கந்தப்பெருமானின் ஆலயத்தில் சேவல் கொடியல்லவா ஏற்றப்பட வேண்டும் என பக்தர்கள் அங்கலாய்க்கின்றனர். (ம)

## வலி. வடக்கில்...

ஜே/226 கிராம அலுவலர் பிரிவான நகுலேஸ்வரம் பகுதியில் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்தபோது அரச தலைவர் மாளிகை ஆடம்பரமாக அமைக்கப்பட்டது. அந்த மாளிகை உட்பட 62 ஏக்கர் நிலப்பகுதி கடற்படையினர் தமது கட்டுப்பாட்டிலேயே தற்போதும் வைத்துள்ளனர். அந்தப் பிரதேசம் விடுவிக்க வேண்டும் என்று நீண்ட காலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

அங்கு ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்டுள்ளதைக் காரணம் காட்டி அந்தப் பகுதியை விடுவிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வந்தது. அந்த மாளிகையைச் சுற்றுலாத் திணைக்களத்துக்கு வழங்குவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் இணக்கம் தெரிவித்திருந்தார்.

தற்போது அந்தக் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன. இந்த நடவடிக்கையால் காணிகளின் உரிமையாளர்கள் ஏமாற்றமடைந்தனர். இந்த விடயம் தொடர்பில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநருக்கும், காணி உரிமையாளர்களுக்கும் இடையே கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த வடக்கு ஆளுநர், கீரிமலை, நகுலேஸ்வரத்தில் உள்ள 62 ஏக்கர் காணிகள் நாளை அளவீடு செய்யப்படஇருப்பது காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிப்பதற்காகவே என்று கூறியிருந்தார்.

இந்தநிலையில், அந்தக் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இரண்டாம் கட்ட காணி அளவீட்டு நடவடிக்கைகள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன. அந்தப் பிரதேசத்தில் காணி உள்ளவர்கள் தமது காணிகளை அடையாளப்படுத்தி அளவீடுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த நடவடிக்கை தொடர்பாக மக்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது. காணிகள் விடுவிக்கப்படும் என்று கூறப்படுகின்றபோதும், அது தொடர்பாகத் தமக்கு எந்த உத்தரவாதமும் தரப்படவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். அதனால் காணி அளவீட்டு நடவடிக்கைகளை மக்கள் சந்தேகக் கண்ணோடே பார்க்கின்றனர்.

இந்த அளவீடு காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழேயே மேற்கொள்ளப்படுவதாக நில அளவைத் திணைக்களத்தால் சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நகுலேஸ்வரம் கிராமத்தில் உள்ள 62 ஏக்கர் காணியை சுற்றுலா விடுதிகளை அபிவிருத்தி செய்வதற்காக சுவீகரிப்புச் செய்யும் நோக்கத்தோடு அளவீடு செய்யப்பட உள்ளது என்று காணி அளவீடு தொடர்பான அறிவித்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை மக்களின் சந்தேகங்களை அதிகமாக்கியுள்ளது. (எ-21,26)

## முஸ்லிம்களுக்கு...

காணப்படும் அதேவேளை மக்களைப் பாதுகாக்கவேண்டிய தேவையும் அரசுக்கு உள்ளது என்றும் மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசியாவிற்கான இயக்குநர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள், அந்த சமூகத்தினருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் மற்றும் ஒடுக்கு முறைகளுக்கு அதிகாரிகள் துரிதமாக முடிவைக் காணவேண்டியது அவசியம்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகளின் பின்னர் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை கண்மூடித்தனமாக கைது செய்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர். அதில் பெரும்பாலானவர்கள் இல்லாமல் ஆக்கப்படுமென ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு வாக்குறுதியளித்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமற்ற நிலையில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தேடுதல் நடவடிக்கையின் போது குரானை வைத்திருந்தமைக்காகவும் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசு உடனடியாகவும் பக்கச்சார்பற்ற விதத்திலும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். பல இலங்கையர்கள் அனுபவித்த இனவன்முறையும் மனித உரிமை மீறல்களும் தற்போது முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படுகின்றன - என்றார். (ஒ.5)

## சிறிலங்கா...

கூட்டணியை அமைப்பது தொடர்பாக இரு கட்சிகளுக்கு இடையிலும் பலகட்ட பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. இருப்பினும் சிறிலங்கா சுதந்திர கட்சி அடுத்த அரசதலைவர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நிறுத்தவுள்ளதாகத் தெரிவித்துவருகின்றது.

இதன் காரணமாக கடந்த பேச்சின்போது எவ்வித முடிவும் எட்டப்படாத நிலையில் தற்போது புதிய கூட்டணியை உருவாக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கூட்டணியின் அரசதலைவர் வேட்பாளர் தொடர்பாக அறிவிப்பு வெளியாகவில்லை ஆனால் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச என்றும் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு அடுத்த மாதம் 11ஆம் திகதி வெளிவரும் என்றும் அக்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சுகவீனமுற்ற...

மாணவனைப் பார்க்க வந்த அவரின் தந்தையே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

நேற்றுப்பகல் தனது மகன் சுகயீனமுற்றிருப்பதாக பாடசாலையில் இருந்து சென்ற தொலைபேசி அழைப்பு ஒன்றையடுத்து அவரைப் பார்ப்பதற்காக மேற்படி தந்தை பாடசாலைக்கு வந்துள்ளார். அவர் உட்பிரவேசிக்க முற்பட்டபோது வாசலில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவச் படைச்சிப்பாய் அவருடன் தர்க்கம் புரிந்து பின்னர் உட்பிரவேசிக்க அனுமதி மறுத்து இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளார்.

உயிரிழந்த நபர் சிப்பாயின் துப்பாக்கியை பலவந்தமாகப் பறிக்க முற்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கைதுசெய்யப்பட்டுள்ள இராணுவச் சிப்பாயிடம் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் நடத்தி வருகின்றனர். (ம-22)

## பொலிஸாரினது...

யாத ஒருவரால் நேற்று பறித்துச் செல்லப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு முன்னெடுக்கப்படும் தேடுதல் நடவடிக்கையால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவின் கீழுள்ள புதுநகர், திமிலைதீவு ஆலயத்துக்கு அருகில் நேற்று முற்பகல் 11 மணியளவில் போக்குவரத்துப் பொலிஸார் இருவர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவ்வேளை, மோட்டார் சைக்கிளில் இருவர் தலைக்கவசமின்றி வவுணதீவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது பொலிஸார் அந்த மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மோட்டார் சைக்கிளைத் திருப்ப முயன்றபோது வீதியின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவரும் படுகாயமடைந்தனர்.

பின்னர் அங்கு ஒன்றுதிரண்ட பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதன்போது பொலிஸ் அலுவலர் ஒருவரிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்றை அடையாளம் தெரியாத ஒருவர் பறித்துத் தப்பிச் சென்றார்.

இதனையடுத்து விபத்தில் படுகாயமடைந்த இருவரும் மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது வவுணதீவுக் களப்புப் பகுதியில் இருவரை சந்தேகத்தில் கைதுசெய்தனர்.

இதேவேளை, புதூர் மற்றும் வவுணதீவுப் பகுதிகளில் இருந்து மேலதிகமாக இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் பெரிய சுற்றிவளைப்புத் தேடுதல்கள் மற்றும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பதற்றம் நிலவுகின்றது. (ம-22)

## வவுனியா...

ளில் நேற்று நிலநடுக்கம் உணரப்பட்டது என்று அந்தப் பகுதிமக்கள் இடர் முகாமைத்து வப் பிரிவினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம், மகிழங்குளம் மற்றும் வீரபுரம் ஆகிய 3 கிராமங்களிலும், மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குளம் பகுதியிலும் இவ்வாறு நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இருப்பினும் எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை என இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-105)

## வாகனங்கள்...

பெற்றுள்ளது. தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மரக்கறி ஏற்றிய பார ஊர்தி ஒன்றும், யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநாச்சி நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமுமே நேருக்கு நேர் மோதிக் கொண்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி விசுவமடுப் பகுதியை சேர்ந்த சேனாதிராசா செல்வகுமார் (வயது- 40) என்ற குடும்பத் தலைவரும், யாழ்ப்பாணம் சங்கானைப் பகுதியை சேர்ந்த தர்சன் (வயது 31) ஆகிய இரு சாரதிகளுமே உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-21,6,35)

# தொடர் பேச்சுக்களில் ஈடுபட்டாலும் அமெரிக்காவிடம் விரோதம் உள்ளது

## வட கொரியா தெரிவிப்பு




பிஜோங்யாங்.ஜூலை 5

பேச்சுக்களுக்கு முகம் கொடுத்து வந்தாலும்கூட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கத்தோடு அமெரிக்கா உள்ளது என்று அறிக்கை ஒன்றின் மூலம் குற்றஞ் சாட்டியது வட கொரியா. மேலும் கொரியத் தீபகற்பத்தில் நிலவும் அமைதியைக் குலைக்க அமெரிக்கா முயற்சிப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கொரியாவுக்குள் கால்பதித்து வடகொரிய அதிபர் கிம்மைச் சந்தித்த வரலாற்று நிகழ்வு நடந்த சில நாள்களுக்குப் பிறகு இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. வடகொரியா மீது மேலும் தடைகளை விதிக்கக் கோரி அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகள் கூட்டாக ஐ.நாவுக்கு எழுதிய கடிதத்துக்குப் பதிலளிக்கும் விதமாகவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக வடகொரியா தெரிவித்தது. 'அதிபர் ட்ரம்ப் உச்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருந்த அதேநாளில் இந்த நாடுகள் கூட்டாக எழுதிய கடிதமும் வெளியாகி இருப்பதைக் கவனிக்க வேண்டும். வட கொரியாவுடன் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கத்தோடுதான் அமெரிக்கா உள்ளது. அதுவே நிதர்சனம்' என்று இதில் குறிப்பி டப்பட்டுள்ளது.

வடகொரியா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்ற எண்ணம்தான் அமெரிக்காவுக்கு எப்போதுமே உள்ளதாக ஐ.நாவுக்கான வட கொரியத் தூதரும் தெரிவித்தார். இந்த அறிக்கைக்கு அமெரிக்க இன்னமும் பதிலளிக்கவில்லை.

வடகொரிய மண்ணில் காலடி வைத்த முதல் அதிபர் என்ற பெருமையை ட்ரம்ப் பெற்றார் என்று பன்னாட்டளவில் விவாதிக்கப்பட்டுவரும் நிலையில், வட கொரியா வெளியிட்டுள்ள இந்த அறிக்கை இந்த இரு நாடுகளுக்கு இடையே உள்ள உறவைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அரசியலவதானிகள் தெரிவித்தனர்.



# காங்கிரஸின் புதிய தலைவர் தெரிவில் 7 பேரின் பெயர்கள் பரிசீலனை

புதுடெல்லி, ஜூலை 5

இந்தியாவின் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து ராகுல் காந்தி விலகியதையடுத்து, அந்தப் பதவிக்குத் தற்போது 7 பேரின் பெயர்கள் உச்சரிக்கப்படுவதால், அவர்களில் ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் நடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததற்குப் பொறுப்பேற்று ராகுல்காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

இதனால் காங்கிரசில் புதிய தலைவரைத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை எடுக்க காங்கிரஸ் கட்சி தயாராகி வருகிறது. அந்த வகையில் கட்சியின் மூத்த பொதுச் செயலராக உள்ள மோதிலால் வோராவை இடைக்காலத் தலைவராக நியமித்து கட்சியை வழிநடத்தத் திட்ட மிட்டுள்ளனர்.

அதன்பிறகு புதிய தலைவரைத் தெரிவு செய்ய உள்ளனர். இந்தப் பதவிக்கு தற்போது 7 பேருடைய பெயர்கள் உச்சரிக்கப்படுகின்றன. கட்சியின் தலித் தலைவர்களான சுஷில் குமார் ஷிண்டே, மல்லிகார்ஜுன கார்கே, முகுல் வாஸ்னிக், அசோக் கெலாட், ஆனந்த் சர்மா மற்றும் இளம் தலைவர்களான சச்சின் பைலட், ஜோதிர் ஆதித்ய சிந்தியா ஆகியோரில் ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நீர்மூழ்கியில் தீ விபத்து

## ரஷ்யாவில் 14 பேர் சாவு



மொஸ்கோ, ஜூலை 5

ரஷ்யாவின் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் அதிலிருந்த 14 பேர் சாவடைந்தனர். ரஷ்யப் பிராந்தியக் கடலில் ஆராய்ச்சி மேற்கொண்டிருந்த குறித்த நீர்மூழ்கியில் தீப்பிடித்ததாலேயே 14பேரும் இறந்ததாக ரஷ்யச் செய்தி நிறுவனங்கள் கடந்த செவ்வாய்க்கிழைமை செய்தி வெளியிட்டன. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

ரஷ்யாவின் எல்லைக்கு உட்பட்ட ஆர்ட்டிக் கடல் பகுதியில் பயணித்த ரஷ்யாவின் கடற்படைக்குச் சொந்தமான குறித்த நீர்மூழ்கிக் கப்பலில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. இந்த விபத்துக் காரணமாக வெளிவந்த நச்சு வாயுவைச் சுவாசித்தமையே இந்தப் 14 பேரினதும் சாவுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்து முழுமையான தகவல்களை வெளியிடுவதற்குத் தயக்கம் காட்டுகின்றது ரஷ்யத் தரப்பு.

'அனைத்து தகவல்களும் உள்ளன, ஆனால் இந்தத் தகவல்கயை பகிரங்கமாகப் பரப்ப முடியாது. இது உயர் இரகசியத் தகவலாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இது சட்ட விரோதமானது இல்லை, அரச இரகசியங்கள் தொடர்பான சட்டத்துடன் இணங்குகின்றன" என்று ரஷ்ய அதிபர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு இது குறித்த விவரங்கள் தெரியும், ஆனால் அவை வெளியிடப்படாது என்று அவர் மேலும் கூறினார். 2008 ஆம் ஆண்டில் ரஷ்ய அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பலில் 20 பேர் சாவடைந்ததும், 2000 ஆம் ஆண்டில், குர்ஸ்க் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலில் 100 க்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்ததும் குறிப்பிடத்தக்கது.



# தணிந்தது மழை

## வழமைக்குத் திரும்புகிறது மும்பை

புதுடெல்லி, ஜூலை 5

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள மும்பையில் கடந்த சில தினங்களாகப் பெய்து வந்த கடும் மழை தணிந்தது. இயல்பு வாழ்க்கை திரும்பத் தொடங்கியது. கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து 5 நாள்களாக இரவு, பகலாக விடாமல் கொட்டித் தீர்த்த மழையே தற்போது தணிந்துள்ளது. இந்த மழையால் மகாராஷ்டிராவில் பரலவலாகச் சாவுகள் சம்பவித்தன. அநேக பகுதிகளில் மதிற்சுவர் இடிந்து விழுந்ததாலேயே பலர் சாவடைந்தனர். தற்போது அங்கு மழை ஓய்ந்துள்ள நிலையில், மழையால் ஏற்பட்ட இடிபாடுகள் மற்றும் இழப்புகள் தொடர்பான கணக்கெடுப்புகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகிறார்கள்.

# சிந்து நதியில் கவிழ்ந்தது படகு

## 30 பேர் சாவு

இஸ்லாமபாத், ஜூலை 5

பாகிஸ்தானின் கைபர் பாக்துன்க்வா மாகாணத்தில் உள்ள சிந்து நதியில் படகு ஒன்று கவிழ்ந்தது. இதனால் அந்தப் படகில் பயணித்த 30 பேர் சாவடைந்தனர். கைபர் பாக்துன்க்வா மாகாணத்தின் தோர்கர் மாவட்டத்தின் நல அமேசாய் கிராமத்தில் இருந்து ஹரிபூர் மாவட்டத்தை நோக்கி நேற்றுமுன்தினம் மாலை பயணித்த படகே இவ்வாறு நதியில் மூழ்கியது.

அதிக எடை காரணமாகவே குறித்த படகு மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பள்ளத்தாக்கில் சிந்து ஆற்றின் துணை ஆறாகிய ஜீலம் ஆற்றின் கரையிலுள்ள பகுதி சிறிநகர். இங்குள்ள இயற்கை அலாதியானது. சிறிநகரின் தென்கிழக்கில் அமர்நாத்தில் உள்ள குகை ஒன்றில் அமைந்துள்ள சிவாலயத்தைத் தரிசிப்பதற்கு இந்து யாத்ரீகர்கள், பனியும் பசுமையும் போர்த்திய மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியூடாகப் பயணிக்கிறார்கள்.

# வானூர்தி விபத்துக்களால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு

## முன்வந்தது 'போயிங்' நிறுவனம் பாதிக்கப்பட்டவர்கள் ஏற்க மறுப்பு






வோஷிங்டன்,ஜூலை 5

இந்தோனேசியா மற்றும் எதியோப்பியா ஆகிய நாடுகளில் தமது வானூர்திகள் விபத்துக்குள்ளானதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 100 மில்லியன் டொலர்களை இழப்பீடாக வழங்கவுள்ளதாக அறிவித்தது போயிங் வானூர்தி நிறுவனம். இந்த இழப்பீடு சாவடைந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களின் கல்வி மற்றும் பிற செலவுகளுக்காக அளிக்கப்படும் என்று போயிங் நிறுவனம் மேலும் தெரிவித்தது. ஆனால், போயிங் வழங்குவதாக அறிவித்துள்ள இந்த நிதியை ஏற்பதற்குப் பாதிக்கப்பட்டவர்களில் பலரும் மறுத்தனர்.

**பின்னணி**

அமெரிக்காவைச் சேர்ந்த வானூர்தித் தயாரிப்பு நிறுவனமான போயிங் தயாரித்த 737 மேக்ஸ் ரக வானூர்திகள் அண்மையில் அடுத்தடுத்து விபத்துகளுக்குள்ளாகின. இந்தோனேசியாவில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதியன்று இந்த ரக வானூர்தி ஒன்று பறக்க ஆரம்பித்த 13 நிமிடங்களிலே கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்து, கடலில் விழுந்தது. இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து பினாங்கு நகருக்குப் புறப்பட்ட இந்த வானூர்தியில் பயணிகள், ஊழியர்கள் என எல்லாமாக 188 பேர் பயணித்த நிலையில் அனைவரும் சாவடைந்தனர்.

இது இந்தோனேசியாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இதன் பின்னர் கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதியன்று எதியோப்பியா அரசுக்குச் சொந்தமான இதே ரக வானூர்தி, கென்யா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது இடைநடுவில் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானது.

இதில், வானூர்தியில் பயணித்த 157 பேரும் சாவடைந்தனர். இந்த இரண்டு விபத்துக்களிலும் சாவடைந்தவர்களின்தொகை 345. இந்தவிபத்துகளைத் தொடர்ந்து 737 மேக்ஸ் ரக வானூர்திகளை இயக்குவது உலகம் முழுவதும் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே இந்தோனேசியா மற்றும் எதியோப்பியா ஆகிய வானூர்தி விபத்துகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 100 மில்லியன் டொலர் இழப்பீடு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது போயிங் நிறுவனம்.




# இஸ்ரேலின் மதுபானப் போத்தலில் மகாத்மா காந்தியின் உருவப்படம்

## இந்தியா முறையிட்டதால் மன்னிப்புக்கோரப்பட்டது

புதுடெல்லி, ஜூலை 5

இந்தியாவின் தேசபிதா என்று துதிக்கப்படுகின்ற மகாத்மா காந்தியின் உருவப் படத்தை மதுபானப் போத்தல் அடைக்கப்படுகின்றபெட்டியில்பதிப்பித்துவிற்பனைசெய்தது இஸ்ரேலின் மது நிறுவனம் ஒன்று. இஸ்ரேலின் 'மல்கா பீர்' என்கிற நிறுவனமே இவ்வாறு மகாத்மாகாந்தியின் உருவப்படத்தைப் பதிப்பித்தது. ரி சேர்ட், கூலிங் கிளாஸ் அணிந்திருப்பதாக அதில் மகாத்மா காந்தியின் உருவம் மாறுபட்ட தோற்றத்தில் இடம்பெற்றது. இதுகுறித்து இந்திய நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டது. இஸ்ரேல் அரசை இந்தியத் தூதரகம் அணுகி இது குறித்து முறையிட்டது. இதையடுத்து,உணர்வுகளைப்புண்படுத்தியதற்காகஇந்திய அரசிடமும், மக்களிடமும் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக 'மல்காபீர்'நிறுவனத்தின்பணிப்பாளர்கிளாட்ட்ரார்கூறினார். மகாத்மாகாந்தியின்படத்துடன்கூடியதமதுவிற்பனைகளைத் திரும்பப்பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



# பெண்கள் குறித்த சர்ச்சைக் கருத்து மன்னிப்புக் கோரினார் தலாய் லாமா

திபேத், ஜூலை 5

கடந்தமாதம்பன்னாட்டுஊடகம்ஒன்றுக்குச்செவ்வியளித்த திபெத்தியஆன்மிகத்தலைவர்தலாய்லாமா, "எதிர்காலத்தில் வரக்கூடிய பெண் தலாய் லாமா ஈர்ப்பு மிக்கவராக இருக்க வேண்டும்" என்று சிரித்துக்கொண்டே தெரிவித்தார்.

84ஆவதுவயதைத்தொடும்ஆன்மிகத்தலைவரான அவர், தன்னுடைய இடத்துக்கு எதிர்காலத்தில் வருகின்ற 'பெண் தலாய் லாமா' பற்றிக் கூறிய இந்தக் கருத்துச் சர்ச்சைக்குரியதாகியது.

இதற்காகத் தலாய் லாமா மன்னிப்புக் கேட்டுள்ளார். அந்த மன்னிப்பில்பெண்கள்பற்றியதனதுகருத்துமொழிபெயர்ப்பில் நகைச்சுவையை இழந்துவிட்டது என்று தலாய் லாமா தெரிவித்திருக்கிறார்.

அவரது அலுவலகமே இந்த அறிக்கையை வெளியிட்டு இந்தக் கருத்துக்கு மன்னிப்புக் கேட்டுள்ளது.

அவர் கூறிய இந்தக் கருத்து யாரையாவது புண்படுத்தியிருந்தால்அதற்காகத்தலாய்லாமாமன்னிப்புக்கோருவதாக அவரது அலுவலகம் வெளியிட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலாய் லாமா தனது வாழ்க்கை முழுவதும், பெண்களைப் பொருள்களாகச் சித்திரிப்பதை எதிர்த்தும், பாலின சமத்துவத்தை ஆதரித்தும் வந்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இன்றைய நாள்

**மேடம்:** மற்றவரை விமர்சிக்க சிலர் உங்களை கருவியாக பயன்படுத்துவர். முன்யோசனையுடன் விலகுவது நல்லது. தொழில் வியாபார நடைமுறை சிறக்க கூடுதல் பணிபுரிவது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** மனதில் இரக்க உணர்வு அதிகரிக்கும். நற்செயல் புரிந்து சமூகத்தில் வரவேற்பு பெறுவீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க தேவையான அனுகூலம் உண்டாகும். உபரி வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:** எண்ணத்திலும், செயலிலும் உற்சாகம் வெளிப்படும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணக்கடன் பெரும்பகுதி அடைபடும்.

**கடகம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் வகையில் அதிகரிக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**சிம்மம்:** நிதானமாக செயல்படுவது நல்லது. தொழில் வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றவும்.

**கன்னி:** பேச்சு, செய்லில் நேர்மை நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி பெற அனுகூலம் உண்டு. தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.

**துலாம்:** செயலில் திறமை வெளிப்படும். அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**விருச்சிகம்:** எண்ணம், பேச்சில் கட்டுப்பாடு அவசியம். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை சுமாரான அளவில் இருக்கும். திடீர் செலவு ஏற்படலாம்.

**தனுசு:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஆகலாம். தொழில் வியாபாரம் சிறக்க கூடுதல் பணி புரிவது அவசியம். சேமிப்பு பணம் முக்கிய செலவால் கரையும்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான வாய்ப்பு உங்களை தேடிவரும். மனதில் பலநாள் இருந்த கவலை நீங்கும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் பணிகளை மேற்கொள்வீர்கள்.

**கும்பம்:** சேவை மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். துவங்குகிற பணி முழுஅளவில் வெற்றி பெறும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் அதிகரிக்கும்.

**மீனம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். சுயதேவை ஓரளவு பூர்த்தியாகும். தொழில் வியாபாரத்தில் குறுக்கிட்ட தடையை தாமதமின்றி சரி ய்வது நல்லது.

see more news in
NEWUTHAYAN.COM





## வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# தடகள போட்டி நேற்று கோலாகல ஆரம்பம்






யாழ்ப்பாணம்.ஜூலை 5
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டி நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.
ஆரம்பநாள் நிகழ்வுக்கு வடக்கு மாகாண பிரதம செயலர் பத்திநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். காலை 9.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. முதன்மை விருந்தினர் சென்.ஜோன்ஸ்கல்லூரி பாண்ட் வாத்திய இசையுடன் மைதானத்தை நோக்கி அழைத்து வரப்பட்டார். அதனைத் தொடர்ந்து தேசிய கொடியை முதன்மை விருந்தினர் பத்திநாதனும்,
வடக்கு மாகாண கொடியை வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமாரும், வடக்கு மாகாண விளையாட்டு கொடியை வடக்கு மாகாண உதவி கல்விப் பணிப்பாளர் இராஜசீலனும் ஏற்றி வைத்தனர்.
அதனைத் தொடர்ந்து கல்வி வலயங்களின் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் அணி வகுப்பு இடம்பெற்று ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து வீரர்கள் மற்றும் நடுவர்கள் சார்பாக சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. (23)




## குண்டுபோடுதலில் பிரவீனுக்கு தங்கம்

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதலில் கொக்குவில் இந்துக் கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த ஆர். பிரவீன் வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.
நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 16 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான குண்டு போடுதலில் கொக்குவில் இந்துக் கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த ஆர். பிரவீன் 12.84 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த ஆர். சஞ்சய் 11.94 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளி பதக்கத்தையும், அதே கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த ஏ.அஜன்ஸ்ரன் 11.86 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (422)

## சமூகத்தில் நற்பிரஜையாக திகழ வேண்டுமாயின் இணைபாட விதானங்களில் பங்குபற்ற வேண்டும்

### வட மாகாண பிரதம செயலர் பத்திநாதன் தெரிவிப்பு

இணைபாட விதானத்தில் மாணவர்கள் பங்குபற்றினாலே நற்பிரஜை ஆக முடியும் என வடக்கு மாகாண பிரதம செயலர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரின் ஆரம்ப நாள் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
மாணவர்களை இணைபாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதில் விருப்பம் காட்ட மறுக்கின்றனர். இதற்குக் காரணம் இணைபாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் வீழ்ச்சி ஏற்படும் என நினைக்கிறார்கள்.
ஒரு மாணவன் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் 9ஏ எடுப்பதோ. அல்லது க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3 ஏ எடுத்து விட்டு மட்டும் சமூகத்தில் நற்பிரஜையாக வாழ முடியாது. இணைபாட விதானங்களில் மாணவர்கள் பங்கு பற்றுவதனால் தலைமைத்துவம், விட்டுக் கொடுப்பு போன்ற பல பண்புகள் விருத்தியடைவதால் சமுதாயத்தில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள முடியும்.
வடமாகாணம் தற்போது படிப்படியாக உயர்ந்து வருகிறது. இதனை மேலும் உயர்த்துவதற்கு மாணவர்கள் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும். இனிவரும் காலங்களில் இணைபாட விதா னத்துக்கு எம்மாலான உதவிகளை செய்வோம் - என்றார்.



(422)



# மிரட்டி அடங்கியது ஆப்கான் அணி

இரு அணிகளில் எந்த அணி வெற்றி பெற்றாலும் அது ஆறுதல் வெற்றியாகவே அமையும். ஆயினும் ஆப்கான் அணிக்கு இந்த நடப்பு உலகக் கிண்ணத்தில் இந்த இறுதிப் போட்டியிலாவது வெற்றி பெற்று ஆறுதல் வெற்றி அடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை. ஆப்கான் இந்த உலகக் கிண்ணத்தில் தான் சந்தித்த போட்டிகள் அனைத்திலும் தோல்வியடைந்து வெளியேறியிருக்கின்றமை பரிதாபம்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியில் ஆப்கான் - மேற்கிந்தியத்தீவுகள் அணி மோதின. இதில் ஆப்கான் அணி 23 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெய்ல் இந்த உலகக் கிண்ணப் போட்டியில் பெரிதாக சோபிக்கவில்லை. வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்பினார். லூயிஸ், ஹோப், போரன் அரைச் சதம் கடந்து அசத்தினர். போரன் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தது அணிக்கு ஏமாற்றமளித்தது. கடந்த போட்டியில் இவர் சதம் கடந்து அசத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அணித் தலைவர் ஹோல்டர் தன் பங்குக்கு அதிரடி காட்டி அரைச் சதத்தை தவறவிட்டு ஆட்டமிழந்தார். கெய்லை தவிர ஏனைய வீரர்கள் பொறுப்புடன் ஆடியிருந்தனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 311 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கான் அணிக்கு தீவுகளின் பந்து வீச்சாளர் ரோச் அதிர்ச்சி கொடுத்தார். பின்னர் இணைந்த இணைப்பாட்டத்தைப் பிரிப்பதற்கு தீவுகளின் பந்து வீச்சாளர்கள் பெரிதும் சிரமப்பட்டனர். ரஹ்மத் சாத், அலிக்கி அதிரடியாக ஆடி அரைச் சதம் கடந்து விளையாடினர். ஆப்கான் அணியின் பின்வரிசை வீரர்கள் சொதப்பியதிலே தோல்வியைச் சந்திக்க வேண்டியிருந்தது. எனினும் தீவுகளை இறுதி வரை பயமுறுத்தி விட்டுச் சென்றனர் என்று கூறலாம். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 23 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது.

பந்து வீச்சில் ரோச், பிரித்வைட் சிறப்பாக பந்து வீசி முக்கிய தருணங்களில் இலக்குகளைச் சாய்த்து அணியின் வெற்றிக்கு வித்திட்டனர். ஆட்டநாயகனாக ஹோப் தெரிவு செய்யப்பட்டார்.

## நீளம் பாய்தலில் குருஸ் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 5 வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 20 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் மன்னார் சென். ஆன்ஸ் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய ஜேசுதாசன் குருஸ் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற தடகளப் போட்டியில் 20வயது ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் மன்னார் சென். ஆன்ஸ் கல்லூரியை பிரதி நிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய ஜேசுதாசன் குருஸ் 6.73 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், சென். ஜோன்ஸ் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய சி.பி. தனுசன் 6.44 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், சிலவத்தை அ.த.க. பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய இருதயயூட் 6.38 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23,108)



## உயரம் பாய்தலில் தனுசங்கவி தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 5 வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 18 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் அருணோதயாக்கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய தனுசங்கவி தங்கப்பதக்கத்தை சுவீகரித்தார்.

நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற தடகளப் போட்டியில் 18 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் அருணோதயாக்கல்லூரியைப் பிரதி நிதித்துவப்படுத்தி பங்குபற்றிய தனுசங்கவி 1.45 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், புத்தகலட்டி சிறி விஸ்ணு வித்தியாலயத்தை பிரதி நிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய நதீக்கா 1.45 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், தேரங்கண்டல் அ.த.க பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய டிசாந்தினி 1.40 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)



## ரென்னிஸ் வீரர் டொமிக்கு தண்டம்

விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாமில் தரமான ஆட்டத்தை வெளிப்படுத்தாததால், ஆஸ்திரேலிய வீரருக்கு 45 ஆயிரம் பவுண்ஸ் தண்டம் விதிக்கப்பட்டது.

விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பெர்னாட் டொமிக் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜோவிபிரைட்டை எதிர்கொண்டார். இதில் பெர்னாட் டொமிக் 2:6, 1:6, 4:6 என்ற நேர்செட் கணக்கில் தோல்வியடைந்தார்.

அவர் கடந்த காலத்தை போன்று சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்று நடுவர்கள் தெரிவித்தனர். இதனால் அனுபவம் இல்லாத வீரருக்கு எதிராக 58 நிமிடத்திலேயே தோல்வியடைந்த அவருக்கு போட்டியின் வருமானத்தில் இருந்து 45 ஆயிரம் பவுண்ஸ் தண்டமாக விதிக்கப்பட்டது.




## பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றாலும் நியூசிக்கே அரையிறுதி வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது

நடப்பு உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் இடம்பெற்ற வருகின்றது. இந்தத் தொடரில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய அணிகள் அரையிறுதிக்குள் நுழைந்துள்ளன. இன்னுமொரு அணிக்காக போட்டி நிலவுகின்றது. அதாவது நியூசிலாந்தா? அல்லது பாகிஸ்தானா? என்று. ஏனெனில் நியூசிலாந்து அணி எல்லா போட்டிகளிலும் விளையாடி 11 புள்ளிகளுடன் இருக்கின்றது. பாகிஸ்தான் அணி ஏற்கனவே 9 புள்ளிகளுடன் காணப்படுகின்றது. இன்று இடம்பெறும் போட்டியில் பாகிஸ்தான் அணி பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கின்றது. இதில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றால் 11 புள்ளிகளைப் பெறும். இரு அணிகளும் 11 புள்ளிகளுடன் இருப்பதால் ஓட்ட சராசரியில் நியூசிலாந்து அணியே முன்னிலையில் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பாகிஸ்தான் அணி ஓட்ட சராசரியில் முன்னிலை பெற வேண்டுமாயின் பங்களாதேஷ் அணியை பலத்த போராட்டத்தின் மத்தியில் வெல்ல வேண்டியிருக்கும். அதாவது பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 400 ஓட்டங்களைப் பெற்று பங்களாதேஷ் அணியை 316 ஓட்டங்களால் தோல்வியடையச் செய்ய வேண்டும். அதேவேளை பாகிஸ்தான் அணி முதலில் பந்து வீசினால் அந்த சந்தர்ப்பமும் இல்லாமல் போகும். பங்களாதேஷ் அணியுடன் பாகிஸ்தான் அணி வெற்றி பெறுவதென்பதே கடினமான விடயமாகவிருக்கையில் இவ்வளவு ஓட்ட வித்தியாசத்தில் வெல்வதென்பது சாத்தியமற்றதே. ஆகையால் நியூசிலாந்து அணியின் அரையிறுதி வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது.

## அறிவித்தல்

இலங்கை போக்குவரத்து சபையால் நடத்தப்படும் **50 ஆவது ஆண்டு (பொன்விழா)** விழாவை முன்னிட்டு **இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி மைதானத்தில் இன்று (05.07.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில்** இடம்பெறவிருந்த விளையாட்டுப் போட்டி குஞ்சர் **கடையடி, கொலின் மைதானத்தில் அதே நேரப்படி இடம்பெறும்** என்பதனை அறியத்தருகின்றோம்.

**தலைவர்,**
**இலங்கை போக்குவரத்து விளையாட்டுக்கழகம்.**

## கருத்தரங்குத் தொடர்

SLAS, SLEAS, நீதிமன்றப் பதிவாளர், புள்ளிவிபர வியளாளர் முகாமைத்து உதவியாளர் பரீட்சைக்கானது

06.07.2019 சனி 9am-3pm

P.கமல்தாசன்-JP SLPS மற்றும் வளவாளர்கள்

விடய ஆய்வு:- R.C.அமல்ராஜ் SLAS
நுண்ணறிவு:- K.குமணன் SLPS
ஆங்கிலம்:- P.N.சுதர்சன் SLEAS
கிரகித்தல்:- A.K.கீர்த்தி MA

நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 111 6739
076 166 1986

## விசேட வகுப்புக்கள்

பதிவாளர், புள்ளிவிபர அலுவலர்
சனி,ஞாயிறு 9.00- 3.00

முகாமைத்துவ உதவியாளர்
பிரிவு I சனி 9.00
பிரிவு II ஞாயிறு 9.00
பிரிவு III செவ்வாய்,வியாழன் 4.00 மணி

SLAS, SLEAS
ஞாயிறு 9.00 மணி

அபிவிருத்தி உத்தியோகத்தர் தடைதாண்டல் (E.B)
பிரதி ஞாயிறு 11.00 மணி

தொடர்புகளுக்கு
076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100M தூரத்தில்)

## தென்னிந்திய யாத்திரை

**தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை**

**ஆரம்பம் : 05.08.2019** **யாத்திரீகர் : 10** **நாள்கள் : 16**

தரிசிக்கும் இடங்கள் :- உச்சிப்பிள்ளையார். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர். திருப்பதி. ஸ்ரீரெங்கம். சமயபுரம். பிரம்மாகோயில். இராமேஸ்வரம். பழனி. திருத்தணி. திருப்பரம்குன்றம். திருச்செந்தூர். சிதம்பரம். ஏகாம்பரேஸ்வரர். காள கஸ்திரி. திருவெண்ணாமலை. சுவாமிமலை. பழமுதிர்ச்சோலை. திருவானைக்காவல். மேல்மருவத்தூர். தஞ்சாவூர். நவபாஷானம். சூரியன். சந்திரன். சுக்கிரன். புதன். வியாழபகவான். செவ்வாய். ராகு. கேது. சனி பகவான். திருநள்ளாறு. நளன்குளத்தில் நீராடல். தோணியப்பர். குருவாயூர். மைசூர் சாமூண்டீஸ்வரி. நந்திகோவில். கன்னியாக்குமரி. சுசீந்திரம். மனக்குழவிநாயகர். திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார். பட்டி விநாயகர். வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச். பாண்டிச்சேரி பீச். MGR. ஜெயலலிதா. அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ். பிருந்தாவனம் காடின். அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட். மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு. குடிநீர். 2 பேருக்கு கட்டில் மெத்தை. குளியலறை இணைந்த அறைகள். AC வாகன வசதி. கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)

**வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.**

(C 2069) (14.07)

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
sriranganathan1944@gmail.com 077 768 0102
sriranganathan2601@gmail.com 077 736 2154

## வாகனம் விற்பனைக்குண்டு

லங்கா அசோக் லேடன் லொறி விற்பனைக்குண்டு.
075 656 3907

## விற்பனைக்கு

தரமான சீமெந்துக்கற்கள், தூண்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-076 760 3066

## அதிசய வைத்தியம்

நாளை (06.07.2019) சனிக்கிழமைஇல.125, பிரதான வீதி, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் ஹோமியோபதி வைத்திய சேவை ஊடாக IAS வைத்திய சேவை நிலையத்தில் நீரிழிவு (சலரோகம்). மூட்டு வாதம். ஆஸ்துமா உட்பட 19 நோய்களை முற்றாகக் குணப்படுத்திக்கொள்ள 37 வருட அனுபவம் வாய்ந்த வைத்திய சேவைகள். எதிர்வரும் (13.07.2019) சனிக்கிழமை A9 வீதி, பரந்தன் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நடைபெறும்.

பதிவுக்கும் முற்பதிவுக்கும்:- 077 444 1082


## நடப்பு சம்பியன் சிலியை பந்தாடி பெரு இறுதிக்குள் நுழைந்தது

பிரேசிலில் நடைபெற்று வரும் கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் நடப்புச் சம்பியனான சிலியை வீழ்த்தி பெரு இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஆட்டம் ஆரம்பித்த முதல் பாதி ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் பெரு அணி வீரர் எடிசன் பிளோர்ஸ் அணிக்கு முதல் கோலைப் பெற்றுக் கொடுத்தார். அதே அணி வீரர் யோஷிமர் யோட்டுன் ஆட்டத்தின் 38ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட முதல் பாதி ஆட்டத்தில் பெரு அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்க முயற்சி செய்தனர். சிலி அணியை விட பெரு அணி வீரர்கள் அபாரமாக ஆடினர் என்பதை பார்க்கக் கூடியதாக இருந்தது. ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 90ஆவது நிமிடத்தில் பெரு அணி வீரர் பலோ குரிரோ ஒரு கோலைப் போட பெரு அணி சிலியை வீழ்த்தி 3:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. நடப்புச் சம்பியனான சிலி அணி 19 தடவைகள் பெரு அணியின் கோல் கம்பங்களை நோக்கி பந்தை அடித்தும் ஒரு கோலை கூட அவர்களால் பெற முடியவில்லை. சிலி அணிக்கு கோல்கள் போடுவதற்கான பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அவர்கள் அதனை பயன்படுத்தத் தவறியமையே தோல்விக்குக் காரணம்.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் பிரேசில் அணி வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியிருந்தது. இதனால் நாளைமறுதினம் இடம்பெறும் இறுதிப் போட்டியில் பிரேசில் - பெரு அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.


### போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

P. உமாசங்கர் & வளவாளர்கள்
SLAS, SLFS,SLEAS, MA, புள்ளி விபர அலுவலர், நீதிமன்ற பதிவாளர்.

- நுண்ணறிவு
- உளச்சார்பு
- பொது அறிவு
- முகா.உளச்சார்பு

(P. உமாசங்கர்)

- ஆங்கிலம்
- சட்டம்

07.07.2019 ஞாயிறு
மு.ப 9.00 - பி.ப 4.00

நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1956, 077 741 7143.





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.